கவிஞர்

# சுரதா

வழங்கும்...



# வெட்ட வெளிச்சம்

# வெட்ட வெளிச்சம்

உவமைக் கவிஞர் சுரதா

சுரதா
பதிப்பகம்

56, அ. டாக்டர் இலக்குமணசாமி சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.

முதற் பதிப்பு : டிசம்பர், 1985.

பதிப்பாளர் : கல்லாடன்

தாள் : 11.6 kg

அளவு : கிரௌன்

எழுத்து : 10 புள்ளிகள்

பக்கம் : 176

ஓவியம் : காந்திநாத்

அச்சகம் : வெற்றி அச்சகம்,
91, டாக்டர் பெசன்ட் சாலை,
சென்னை - 600 014.

அச்சுக்கோப்பு: தங்கம்
ஈஸ்வரி
சாந்தி
மும்தாஜ்
மதிவதனி
விஜி
ஜெயந்தி

விலை : ரூ. 15 - 00

# பதிப்புரை

பாவட்டஞ் சோலையிலே — குயில் வந்து
வாய்விட்டுக் கூவுதய்யா.

என்று பழைய பாடல் ஒன்று உண்டு.

இளவேனில் வந்தவுடன் குயில் கூவுவது வழக்கம். அதுபோல இலக்கிய ஆர்வம் ஏற்படும் போதெல்லாம் சுரதா பதிப்பகம், நூலை உருவாக்கி வெளியிட்டு வருகிறது.

இனிமேல் தொடர்ந்து நூல்களை வெளியிட வேண்டும் என்ற முனைப்புக் கொண்டுள்ளது சுரதா பதிப்பகம்.

அந்த முனைப்பிற்கு அடையாளம்தான் வேகமான சிந்தனைகளைக் கொண்டு, விரைந்து வெளிவரும் வெட்ட வெளிச்சம் என்னும் இந் நூல்.

இதனை அளித்துள்ள உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நல்ல முறையில் அச்சிட்டுத் தந்துள்ள வெற்றி அச்சகத்திற்கும், அணிந்துரை வழங்கிய ஏழாயிரம் பண்ணை சண்முக சுந்தரக் கவிராயர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**கல்லாடன்**

டாக்டர் இலக்குமணசாமி சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.

# அணிந்துரை

மனிதன் அறுசுவை உணவை உண்கிறான். அவனிடம் பத்து வகைக் குணங்கள் பதிந்திருக்கின்றன. என்றாலும் ஒரு மனிதனின் வரலாற்றைக் காப்பியமாகவோ நாடகமாகவோ நவீனமாகவோ வடித்துத் தரும் எழுத்து வேந்தர்கள், அந்த மனிதனிடம் காணப்பட்ட அருங்குணத்தை மட்டுமே எடுத்துச் சொல்லும் ஒலி பெருக்கிக் கருவிகளாக வாழ்ந்துள்ளனர். வாழ்ந்து வருகின்றனர். தங்களது கதா நாயகன், அபூர்வ குணங்களின் சங்கமம் என்றே பறை சாற்றுகிறார்கள். அவனிடம் சில நேரங்களில் உறைந்திருக்கும் இருட்டு மனத்தை - திருட்டுக் குணத்தைத் தெரிவிக்காமலேயே இருந்து விடுகிறார்கள்.

இரவும் பகலும் இனிய உலகில் உண்டு. வாடையும் வெம்மையும் மாறி மாறி வருவதுண்டு. இதிலே இரவுக்கு மட்டும் வாழ்த்துப் பாடுவது நியாயமில்லை; வாடையை மட்டும் வரவேற்பது பொருத்தமல்ல. அதைப்போலவே ஒரு மனிதனின் 'திருக்கல்யாண குணங்கள் அனைத்தையும் தெரிவிப்பது தான் அவனைப் பற்றிய சரியான படப்பிடிப்பாகும்.

பல காலமாக வானத் தோட்டத்தில் சந்திரன் உலா வருவதைப் பார்த்து வருகிறோம். நமது கற்பனை ஊற்றுப் பொங்கி வருவதற்குச் சந்திரனின் ஒளிக்கதிர்கள் பயன்படுகின்றன. சந்திரனைப் பார்த்ததும் சந்தனச் செய்யுள்களையும் சுந்தரக் கவிதைகளையும் நமது

செந்தமிழ்ப் புலவர்கள் தொடுத்து விடுகிறார்கள். ஆனால் எவரும் சந்திரனின் மறுபக்கம் எப்படியிருக்கும் என்றோ, அதன் உள்ளமைப்பு எப்படி இருக்கக் கூடும் என்றோ எண்ணிப் பார்ப்பதில்லை!

"சந்திரனைச் சிவபெருமான் தமது சென்னியில் சூடிக் கொண்டிருக்கிறார்."

"சந்திரனை ராகு, கேது என்னும் பாம்புகள் விழுங்குகின்றன."

இப்படி அறிவுக்கு உதவாத கற்பனைகளை அவிழ்த்து விட்டு அகம் மகிழ்ந்தனர் நமது முன்னோர்.

ஆனால் அமெரிக்கர்கள் சந்திர மண்டலத்தில் குடிபுக வேண்டும் என்ற கொள்கையில் தீவிரமாக இருந்து வருகிறார்கள். முதலில் நிலாவுக்கு உலாச் சென்று அதன் மண்ணைத் தமது திருப்பாதங்களால் மிதித்தவர்கள் தாங்கள்தான் என்ற வரலாற்றை அமெரிக்கர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆய்வு மனப்பான்மை — ஓய்வில்லா உழைப்பு இந்த வெற்றிக்கு உறுதுணையானது.

நமது நாட்டவர்கள், தாம் விரும்பிக் கொண்டாடும் பெருமக்களிடம் சில நேரங்களில் காணப்படும் சின்னத்தனங்களைக் கூட அறிந்து கொள்ள அச்சப்படுகிறார்கள்; உணர்ந்துகொள்ள மறுக்கிறார்கள்; ஒப்புக் கொள்ளத் தயங்குகிறார்கள். பிறர் எடுத்துச் சொல்லும் போது, சொல்வோரைப் பார்த்து முகஞ் சுளிக்கிறார்களே தவிர, சொல்லப்படுவோரைச் சிறிதாவது சிந்திப் போமே என எண்ணுவதில்லை.

குணமும் தோஷமும் கொண்ட பெருமக்கள் நமது நாட்டில் தொடர்ந்து தோன்றித்தான் வந்திருக்கிறார்

கள். இனிப்பு முலாம் பூசப்பட்ட கசப்பு மாத்திரை களாகவும் பலர் காட்சி தந்திருக்கிறார்கள். இத்தகைய 'பெருமைக்குரியவர்களை' 'வெட்ட வெளிச்சம்' என்னும் இத் தொகுப்பு நூலின் வாயிலாக அடையாளம் காட்டி யிருக்கிறார் உவமைக் கவிஞர் திரு. சுரதா அவர்கள்.

உவமைக் கவிஞர், கவிதைக் கனிச் சாறு வடிப்பதில் மட்டுமல்ல, கட்டுரைத் தேன் பொழிவதிலும் பெருந் திறன் பெற்றவர் என்பதைத் தமிழ் கூறு நன்னுலகம் நன்கறியும். மகாகவி பாரதியார் கவிதையும் உரை நடையும் வழங்குவதில் வல்லவராக விளங்கினார். அவரது சீடர் பாவேந்தரும் அவரைப் போலவே திகழ்ந்த துடன், நாடகம் ஆக்கவும் திரைப் பட உரையாடலைத் தீட்டவும், திரைப் பாடலை யாக்கவும் திறம் பெற்றிருந் தார். அவரது சீடரான சுரதா பாவேந்தரைப் போலவே இலக்கியத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் பேராற்றல் பெற்று விளங்குகிறார். பாவேந்தர் தொட்டுப் பார்க் காத — தொகுப்புத் துறையிலும் நுழைந்து தமது ஒப்பற்ற திறமையை உலகுக்கு உணர்த்துகிறார் சுரதா.

வெட்ட வெளிச்சம் என்னும் இந்நூலில் உள்ள பன்னிரண்டு உட்பிரிவுகளின் வாயிலாகப் பல்வேறு அரிய தகவல்களைத் தந்திருக்கிறார்.

மொத்தத்தில், நட்ட நடு நிசியில் வாழ்ந்த சிலரைப் பட்ட பகலுக்கு இழுத்து வந்து அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது இந் நூல்.

பல நூல்களில் உலா வந்த செய்திகளின் தொகுப்பு தான் இந்நூல் என்றாலும், படிப்பதற்கேற்ற முறையில் நெடிதாக இல்லாமல் சிறிது சிறிதாகத் தரப்பட்டிருப்பது நூலுக்குச் சிறப்பைச் சேர்க்கிறது.

இது தொகுப்பு நூல்தான் என்றாலும் பலரது வாழ்க்கை ஏட்டை வெட்ட வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் முறையில் இது ஒரு முதல் நூல் என்றே கூறலாம். இதனைத் தொடர்ந்து பலரும் இது போன்ற நூலை உருவாக்குவதற்கு உந்துதலை ஏற்படுத்தும் வகையில், இது வழி நூலாகவும் அமையும். பல நூற்றாண்டில் வாழ்ந்தவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டும் வகையில் இது மேற்கோள் நூலாகவும் திகழ் கிறது என்றும் சொல்லலாம்.

இந்த அற்புதத் தொகுப்பை உருவாக்கியுள்ள உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்குத் தமிழ் உலகம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிலது. ஒவ்வொரு பகுதிக்கும் அவர் சூட்டியுள்ள தலைப்பே இனிக்கிறது; நம்மை ஈர்க்கிறது!

சன்னமாக நூலினால் கோக்கப்படுகிறது வண்ண மணிமாலை. முத்துக்கள் நம் கண் முன்னே தெரி கின்றன. உள்ளே உள்ள நூல் வெளியே தெரிவதில்லை. அதைப் போல நூலில் உள்ள அரிய செய்தி மணிகளை எல்லாம் தொகுத்துள்ள சுரதா அவர்களின் உழைப்பை நாம் உணர்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ள முடி கிறது.

சொல்லுக்கு உயிர் உண்டு — சொல்லிலே சுவை யுண்டு. இவற்றை மெய்ப்பித்து வருகிறார் உவமைக் கவிஞர். தமிழ் வாசகர் உலகத்திற்கு இந்த அரிய தொகுப்பு நூலை உருவாக்கி வழங்கியுள்ள உவமைக் கவிஞரின் முயற்சியைத் தமிழுலகம் வாழ்த்தும்— போற்றும் வரவேற்கும் என்பது திண்ணம்.

குறிப்பு : இரவு 12 மணிக்கு எண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் எழுதப் பெற்றது.

சென்னை - 82

ஏழாயிரம் பண்ணை
**சண்முக சுந்தரக் கவிராயர்.**



திருப்புகழ் நூல் தந்து
ஓங்கு புகழ் பெற்றவர் அருணகிரிநாதர்.
அவர் வாழ்ந்த திருவண்ணாமலையில்
பிறந்த ஓவியர் காந்திநாத்
அரிய இந்நூலுக்கு உரிய ஓவியங்கள்
உருவாக்கித் தந்துள்ளார்.
உருவாக்கும் கோடுகளால் இவர்
ஓவியப் புகழ் பெறுவாராக.




## அனலை (கி.மு. 47-42)

அனலை-இவளே இலங்கையின் முதலரசி. உயிர்வதையாகிய துர்ச் செய்கையால் இவளரசு பங்கமடைந்தது. இப்பதிவிரதா சீலி பாலாத்திசிவன், வடுகன், தரக்கட்டு தீசன், நீலியன் என்னும் பார்ப்பான் முதலிய முப்பத்திருவரை வாழ்க்கைத் துணையாகக்கொண்டு 5 வருடமும் ஈற்றில் தனித்து 4 மாதமும் அரசு செய்து வந்தாள். இவளுடைய மானங் குலைந்த துர்நடையைக் குறித்து மகாசூலன் மகன் மகாலந்தீசன் இவளைக் கடிந்து கொண்டமையால் அவனுயிரைப் பறிக்கவும் முயன்றாள். அவன் இவளுக்கஞ்சி ஒளிந்தோடி, புத்தகுரு வேடம் பூண்டு சின்னாளின் பின் தன் வேடத்தை விட்டுப் பெருஞ் சேனையோடு வந்து யுத்தமாடி இராசதானியைக் கைப்

பற்றிய விடத்தும் இவள் கிறுங்காது மூர்க்கவெறி காட்டி நின்றமையால் இவளை அரண்மனையோடு தீக்கிரையாக்கித் தானே கிரீடாதிபதியானான்.

- நூல் : இலங்கைச் சரித்திரம் (1904) பக்கம்—32, நூலாசிரியர் : அர்ச், சூசையப்பர் சபைச் சந்நியாசி.

## காமதை

காமதை ஒரு அரசன் தேவி. இவள் துர்ப்புத்தி என்பவனைக் களவிற் புணர்ந்து நீங்கி வசுமதி என்பவனைப் புணர்ந்து ஒரு குமரனைப் பெற்று வசுமதி யிறக்க மீண்டும் துர்ப்புத்தியைப் புணர்ந்து கப்பலேறிச் சென்று கப்பல் கவிழ்ந்திறந்தனள்.

- நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம்-252. நூலாசிரியர் : ஆ. சிங்காரவேலு முதலியார்.

## கிளியோபாத்ரா

காதலரசி கிளியோபாத்ராவின் கதையை அநேகமாக எல்லாரும் அறிந்திருப்பார்கள். ஒவ்வொரு நூற்றாண்டிலும், கவிஞர்களும் கதாசிரியர்களும் அவளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஷேக்ஸ்பியரும், பெர்னாட்ஷாவும் கூட அவள் வாழ்க்கையை நாடகமாக அமைத்துத் தந்துள்ளார்கள்.

பொதுவாக, கிளியோபாத்ராவைப் பற்றி இன்று நிலவிவரும் கருத்து என்ன? "அவள் தன் மனம்போனபடியெல்லாம் களியாட்டம் ஆடி வாணாட்களை வீணே கழித்தவள்! காம வெறியால் உந்தப்பட்ட காதலுக்காக உலகைத் துச்சமாக மதித்தவள்" — என்றெல்லாம் அவளைப் பற்றிக் கூறுகிறார்கள்.

கிளியோபாத்ரா சாதாரணப் பெண்ணல்ல—எகிப்து நாட்டின் இளவரசி யாதலால், தெய்வப் பெண்ணாக அவள் கருதப்பட்டாள். மனித இனத்துப் பெண்களே தம் விருப்பப்படி நடக்கலாமென்றால், தெய்வப் பெண்ணைப் பற்றிக் கேட்பானேன்!

அவளுக்கு அடிக்கடி பொழுது போவதில்லை! அச் சமயங்களில் வலிமையும் வீரமும் கொண்ட ஆண்களுடன் கூடி மகிழ்வாள். பிறகு அவர்களை நைல் நதியில் தூக்கி எறியச் செய்வாள். முதலைகள் உண்டு மகிழ்வதற்காக!

● கட்டுரையாளர் : சி. என். சரோஜினி.

## சித்திராங்கி

சித்திராங்கி-இராஜ ராஜ நரேந்திரன் காமினி. இவள் கொடியவள் ஆகையால் வழக்கத்தில் சித்திராங்கி என்பர், காமலீலையில் இவளை வென்றவர் இல்லை.

● நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம்-39 , நூலாசிரியர் : ஆ. சிங்கார வேலு முதலியார், (சென்னைப் பச்சை யப்பன் கலாசாலைத் தமிழ் உபாத்தி யாயர்).

## சுகந்தை

சங்கரவர்மனுடைய சந்ததி மேன்மேல் வளராமல், சங்கடவர்மனுடன் முடிவடைந்ததால், காஷ்மீரத்திற்கு அரசன் இல்லாமற் போக நேர்ந்தது. உடனே அமைச்சர் களும், ஜனங்களும் ஒன்று கூடி ஆலோசித்து, சங்கரவர்ம னுடைய மனைவியாகிய சுகந்தையை அரசியாக ஏற் படுத்தத் தீர்மானம் செய்தார்கள். பிறகு அமைச்சர் களுடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சுகந்தை சிங்காதன மேறி, ஆட்சியை ஏற்றுக்கொண்டாள். அவள் இரண்டு

ஆண்டுகள் ஆண்ட பிறகு, அவளுடைய நடத்தை மிகவும் கெட்டுவிட்டது. அவளுடைய கெட்ட நடத்தையைச் சொல்லுவதற்கு நாவும் வெட்கமடைகின்றது. அவள் பிரபாகர வர்மன் என்னும் மந்திரியினிடம் காதல் கொண்டாள்.

● நூல்: இராஜ தரங்கிணி, பக்கம்: 63.

## திருமலை நாயக்கரின் மனைவி

நீலகண்ட தீக்ஷிதர், புகழ்வாய்ந்த மதுரை மன்னர் திருமலை நாயக்கர் (1623—1659) இளவரசராக இருந்த தருணத்தில் மெய்க்காப்பாளராகவும், (Prince Regent To The Minor King) பின்னர் மந்திரியாகவும் விளங்கியவர். சிற்பக்கலைக் களஞ்சியத்தின் கரை கண்டவர். ஒரு சமயம் நாயக்க மன்னன் விரும்பியவாறு, அரசியின் சிற்பம் உருவாகிவந்தது. அச்சிலையின் தொடையில் ஒரு மருவு தென்பட்டது. பலமுறை முயன்றும், சிற்பியினால் இக்குறையைத் திருத்த முடியவில்லை. மந்திரி நீலகண்ட தீக்ஷதரிடம் சிற்பி முறையிட்டார். தெய்வ சிந்தனையில் தெளிந்த தீக்ஷிதர், "மருவை அகற்ற முயல வேண்டாம்" என்று போதித்தார். சிலை முடிந்த உடன் அரசன் இம்மருவைக்கண்டு சினங்கொண்டான். அரசிக்குத் தொடையில் உண்மையாகவே உள்ள மருவை தீக்ஷிதர் எவ்வாறறிந்தார் என ஐயங்கொண்டு, அவரைத் தண்டிக்கத் துணிந்து, அவரை அழைத்து வருமாறு பணித்தான். விளைவுகளனைத்தையும் ஞானக்கண் கொண்டு கண்ட தீக்ஷிதர் பூஜை அறையிலிருந்தபடியே, ஏவலாளர்களை விளித்து "அரசன் எமக்கு அளிக்க எண்ணிய தண்டனையை நாமே அளித்துக்கொண்டு விட்டோம் எனக் கூறுங்கள்" என்றவாறே சந்நிதியில் எரியும் கற்பூர ஜ்வாலையால் தம் கண்களிரண்டையும் குருடாக்கிக்கொண்டார்.

● நூல் : தவச்செல்வர்கள் வரலாறு, பக்கம்-41, 42, நூலாசிரியர் : R. கல்யாண சுந்தரம்.

## நயவேந்தன் மனைவி

நய வேந்தன் பாரியாகிய ஓர் இராசாவின் பெண் சாதி அரண்மனைக்கு நித்தியப்படி வந்து ஊழியஞ் செய்கிற துன்மார்க்கன் என்றொரு வலையனிடம் ஆசையாகி நாள் விளம்பத்திலே (விடியற்காலையில்) பேசி முடித்து அரண்மனையில் சிறு திரவியத்தையும் எடுத்துக்கொண்டு இருவரும் தூரந் தொலையில் போய் இஷ்டமாயிருப்பதாக எச்சரிக்கை செய்கிற வேளையிலே, இருவரும் புறப்பட்டு பட்டினம் விட்டு, நான்கு நாழிகைக்கப்புறம் போகும்போது, ஒரு சிற்றாறு பெருகி வர, அந்த ஆற்றங் கரையில் போய் நின்று ஓர் யோசனை பண்ணினான். நாமிருக்கிற இளமைக்கும் இராச கன்னிகையிருக்கிற ரூபகரத்திற்கும் வெகுதூரம். நாம் இவளைக் கூட்டிப் போயிருக்குமிடத்தில், இவளும் நம் மிடத்தில் இருக்க மாட்டாள். இவளைக் காமுக செய லாளிகள் கைவசம் பண்ணிக்கொள்ளுவார்கள். இந்த இராசாவுக்கு நாம் கூட்டிப் போகிறது தெரிந்தால் நாமெங்கே போயிருந்தாலும் ஆள் விட்டுப் பிடித்துக் கொண்டுபோய் வெட்டிப் போடுவான். இனி (என்ன) யோசனைப் பண்ணுகிறது, "எறிந்து விட்டதில் தெரிந் தெடுத்தாய்" (என்றாற் போல), இவளிடத்திலிருக்கிற ஆடை ஆபரணத்தை எல்லாம் கத்தரித்தக் கொண்டு இவளைத் தனியே விட்டுப் போட்டு நாமோடிப் போகிறது என்று (நினைத்து) இராச கன்னி கையைப் பார்த்து, "உன்னிடத்திலிருக்கிற தாலி யையும் ஆடை ஆபரணத்தையும், நீ உடுத்தியிருக்கும் வஸ்திரத்தில் மூட்டை சேர்த்துக் கட்டித்தா; நான் இந்த

ஆற்றுத் தண்ணீரை நீந்தி அக்கரையில் கொண்டு போய் வைத்துவிட்டு, திரும்ப வந்து உன்னை நீச்சலிலே கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்'' என்று சொல்லி எல்லா வற்றையும் வாங்கிக்கொண்டு அவளை நிர்மாணத் துடனே விட்டுப்போட்டு ஆற்றைத் தாண்டி, நாற்காத வழி விடிய ஓடிப் போய் விட்டான். அதை அந்த இராச கன்னிகை யறிந்து, நம்மை வலைப்பையல் மோசம் பண்ணி விட்டானே; இனி வந்த வழியே போய் வீடு சேர வேண்டுமானாலும், நிர்வாணத்துடனேஎப்படிப் போகிற தென்று, பாதையிலே யார் வந்து காணுவார்களோ! வெளியிலே நிற்கப்படாது என்று மாரளவு வரைச் சலத்தில் போய் நிற்கிறபோது, ஓர் நரியானது மாட்டு வடக்கைக் களவிக்கொண்டு வந்து ஆற்றங்கரையிலே போட்டுப் புசிக்கும்போது, அடுத்தாப்போல், ஒரு மீன் துள்ளி விழுந்ததை நரியானது பாய்ந்து பிடிக்கப் போகிற போது, மீனானது திரும்பத் தண்ணீரில் தாவிப் போய் விட்டது. அந்த நரி திரும்பி வருமுன்னே அந்த வடக் கையைப் பருந்து உராய்ந்து கொண்டு போய்விட்டது. நரியானது ஆகாசத்தை அண்ணாந்து பார்த்து ''நாம் இந்த இருவகையுங்கெட்டு வீணே போச்சுதென்று விசனப் பட்டுக் கொண்டிருக்க இராச கன்னிகை பார்த்து, இந்த நரியானது இருவகையுங் கெட்டாற் போலவே நானும் இருவகையுங்கெட்டு, இராச்சிய பரிபாலனம் பண்ணப் பட்ட சொந்த நாயகனை விட்டுத் துன்மார்க்கச் சோரனு டன் வந்து இருவகையிலும் கெட்டேனென்று மனிதர் நகைக்கலாச்சுது'' என்று எண்ணி வருந்தினாள்.

● நூல்: செயங்கொண்டார் வழக்கம் (1955) (உரை விளக்கத்துடன்) பக்கம்—24.

## பீகம் ரிஸியா

ஆல்த்தமஸ் 1236 வருடத்தில் இறந்த போது அவன் மகன் **ரக்ன் அட்டீன்** பட்டத்துக்கு வந்தான். ஆனால் அவனுடைய துன்மார்க்கத்தினால் அரசாளத் தொடங்கின அவ்வருஷத்தில் தானே தள்ளப்பட்டான். அப்போது அவன் சகோதரியாகிய **பீகம் ரிஸியா** பட்டத்துக்கு வந்தாள். துரைத்தனம் நடத்தும் திறமையும் சமர்த்தும் இவளுக்கு வெகுவாயிருந்ததினாலே நீதியாய் இராச்சிய பரிபாலனம் பண்ணி வந்தாள். ஆகிலும் ஜம்மால் என்ற ஓர் ஆபிசினிய அடிமையை முறைகேடாய் நேசித்ததினிமித்தம் அவளுடைய சொந்தச் சகோதரனும் மற்றப் பிரபுக்களும் ஒன்றாய்ச் சேர்ந்து கலகம் பண்ணிப் போர் செய்து அவளையுஞ் சிறையாக்கிக் கடைசியில் கொன்று போட்டார்கள்.

- நூல் : சரித்திரச்சுருக்கம், அதிகாரம்-1. பக்கம்-12.

## பிருதிவிராஜன் மகள்

ரத்னன் பட்டத்திற்கு வருவதற்கு முன்பே அம்பர் நாட்டரசனான பிருதிவிராஜன் மகளைத் திருட்டுத்தனமாய் மணம் புரிந்து கொள்ள வேண்டித் தன்னுடைய இருமுனை வாளை அனுப்பி அதைத் தனக்குப் பதிலாக வைத்து விவாகத்தை முடித்துக் கொண்டான். நடந்த ரகசியம் சற்றும் வெளிவராமலிருந்தது. கொஞ்ச காலத்திற்கெல்லாம் பூண்டி நாட்டரசனான ஹரன் என்பவன் அவளைத் தான் மணம்புரிய வேண்ட, அங்ஙனமே நடந்தவுடன் அவளைத் தலைநகருக்குக் கொண்டு போய்விட்டான். ஹரனும் புகழ்பெற்ற ஒரு ராஜபுத்ரத் தலைவன். ரத்னனோ இவ்விஷயத்தைக் கேள்வியுற்றும் தான் செய்து கொண்ட கள்ள விவாகத்தை மறந்து அசிரத்தையா

யிருந்தாற்போல் காணப்பட்டது. ஆகையால் அந்த ராஜ புத்ரியும் அக்களவைப்பற்றி ஒன்றும் வெளியிடாம லிருந்து விட்டாள்.

● நூல்: ராஜபுத்ர வீரர்கள் (1938) பக்கம், 38. நூலாசிரியர்: T. லக்ஷ்மிநாராயண ஐயங்கார், B.A;

## மன்னன் பர்த்ருஹரியின் மனைவி

பர்த்ருஹரி வடநாட்டை ஆண்டு வந்த மன்னன். அவனிடம் மந்திர சாஸ்திரங்களில் வல்ல அந்தணன் ஒருவன், தேவியிடம் வேண்டி அதனால் கிடைக்கப்பெற்ற மாங்கனியைக் கொடுத்துப் பரிசு பெற்றான். மன்னன் அம் மாங்கனியைத் தான் உண்ணாது தன் மனைவியிடம் கொடுக்க, அவளுமதனைத் தான் விரும்பிய பணியாளிடங் கொடுக்க, அப்பணிமகனுந் தான் காதல் கொண்ட பணிப்பெண்ணிற்குக் கொடுக்க, அவளும் தான் விரும்பிய இடையனொருவனுக்குக் கொடுக்க, அவனும் மலம் எடுப்பாளொருவளுக்குக் கொடுத்தான். இதனையறிந்த அரசன், அதிர்ச்சியடைந்து இல்லற வாழ்க்கையை விடுத்துத் துறவறத்தை மேற்கொண்டான்.

● நூல்: பர்த்ருஹரி முதலாவது நீதியியல் பக்கம் - 5.

## ராணி மீனாட்சி

மதுரை முதலிய தென்னாடுகளை ஆண்டிருந்த திருமலை நாயகர்க்குப் பௌத்திரரான விஜயரங்க சொக்கநாத நாயகர் என்பார் அக்காலத்தில் சோழ பாண்டிய நாடுகளை அரசாண்டு வந்தனர். அரசன் இறந்த பிறகு அவன் பட்டத்தரசியாகிய மீனாட்சி யம்மை யென்பாள் அரசு வகித்தனள்.

இவள், கற்பையே தனக்கு அணியாகக்கொண்டு உயர்குலத் தமிழ்நாட்டு மாதர்களுள் ஒருத்தியாய் மருவற்ற குலத்தில் வந்தவளாயினும், உலகிற்குத் தான் ஓர் உதாரணமாயிருந்து கற்பின்வழி நின்று கண்ணியமுற வேண்டி அரசபதவி வாய்க்கப்பெற்றவளாயினும், ஊழ்வினை வலியாலோ, அல்லது வேறெதனாலோ, தாமரையிலைத் தண்ணீர்போல் உலகவாழ்க்கையிற் பற்றியும் பற்றில்லாதிருந்த தாயுமானவர்மீது மனம் பற்றினாள்.

தன் கணவன் உள்ளபொழுதே அவரைப் பன்முறையும் பார்த்துள்ளாள். அவர் உருவழகைப் பற்றிப் பிறர் உரைப்பப் பன்முறையும் கேட்டுள்ளாள். அக்காலத்தெல்லாம் தன் கணவனுக்கஞ்சி அமைந்திருந்தாள் போலும். இப்பொழுதோ, தானே தனியரசு வகித்தமையால், அச்சம் அறவொழித்து, தீண்டா நெருப்பனைய தாயுமானவரை நெருங்கித் தன் தீவாய் திறந்து ““ஐய! என்உடல் பொருள் ஆவி மூன்றையும் தங்களுக்கே தத்தம் செய்துவிட்டேன். என் இராஜ்யத்திற்குத் தாங்களே தலைமை வகிக்க வேண்டும்’’ என்றனள். இச்சொற்கள் தாயுமானவர் காதில் காய்ச்சிய நாராசம்போல் விழுந்தன. அவள் தீய எண்ணத்தை அவர் அறிந்துகொண்டார். அவர், அவள் தீய எண்ணத்திற்குத் துக்கித்து அவளுக்கு ஏற்ற புத்திமதிகளைக் கூறிவிட்டு, இனி இங்கிருப்பது தகாதென்று நீங்கி தேவை நகரிற் சென்று வசித்துவந்தனர்.

● நூல் : ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் சரித்திரம், பக்கம் - 8, 9.

## ராணி திஷ்யரக்ஷியதை

அசோகருக்குக் குமாரர்கள் அநேகர் இருந்தார்களென்று அவருடைய சிலா சாசனங்களினால் தெரியவருகின்றது. அசோகருக்கு குநாலன் என்னும் ஒரு

குமாரன் உண்டென்று அசோகாவதானம் என்னும் நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. அப்படியே மௌரிய சம்ராட் என்னும் நூலிலும் எழுதப்பட்டிருக்கின்றது.

குநாலப் பறவையின் கண்ணைப்போல் பிரகாசமாகவும், கறுப்பாகவும் அவனுடைய கண்கள் இருந்ததனால், அவனுக்குக் குநாலன் எனப் பெயரிட்டார்கள். அவன் காஞ்சனமாலை என்னுங் கன்னிகையை மணம்புரிந்து கொண்டான். ஆயினும், சிறுபிராயத்திலிருந்து தந்தையின் நல்லுபதேசங்களைப் பெற்று வளர்ந்து வந்திருந்தமையின், அவன் நாளடைவில் விரக்தனாயினான். எப்பொழுதும் தியான தாரணங்களிலும், தர்ம விசாரங்களிலுங் காலத்தைக் கழித்து வந்தான். அவனுடைய சிறிய தாயாகிய திஷ்யரக்ஷியதை என்பவள் அவனுடைய சௌந்தரியாதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவன் மீது மோகங்கொண்டாள். தன்னுடைய விருப்பத்தை ஈடேற்றிக் கொள்வதற்காக அவள் பலவிதமான பிரயத்தனங்கள் செய்தாள். அவளுடைய துஷ்ட புத்தியை மாற்ற எண்ணி மகா புருஷனாயும் நல்ல தர்மசீலனாயும் இருந்த குநாலன் தன்னிடத்தில் வரும் தூதிகளின் மூலமாக எத்தனையோ நற்போதனைகளை அவளுக்குச் செய்தான். இழிகுணமுள்ளவர்களுக்கு நல்லுபதேசமென்பது விஷத்திற்குச் சமானமேயன்றோ? முடிவில், குநாலனைக் கொல்லுவிக்கக் கருதி அவள் அரசனிடத்தில் இல்லாத பொல்லாத கோள்களை அவன்மீது சொல்லி, தக்ஷசிலைக்கு அவனைச் சுபேதாராக அனுப்புவித்தாள்.

சிலநாள் கழிந்த பின்னர் அவள் கணவனோடு விநோதமாகப் பேசிக்கொண்டிருந்து, ராஜ முத்திரையைத் தந்திரமாகக் கைக்கொண்டாள். அந்த முத்திரையைஉபயோகித்து, "குநாலனுடைய கண்கள்இரண்டையும் பிடுங்கி, அவனைத் தக்ஷசிலையினின்று துரத்திவிட வேண்டும்" என்று கடிதம் எழுதித் தக்ஷசிலையிலுள்ள அதிகாரி ஒருவனுக்கு அனுப்பினாள்.

● நூல் : அசோகர் சரித்திரம் (1915), பக்கம் - 47, 48, நூல் வெளியீடு: ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை.

## ராணி ஜோஸபின்

நெப்போலியன் ஜோஸபினைப் பார்த்துப் பேசி 15 நாளில் மணந்தான். அதற்கு முன் அவள் ஓர் பிரபுவின் மனைவியாயிருந்தாள். முதல் கணவன் மூலம் இரண்டு குழந்தைகள் இருந்தன. ஜோஸபின் அழகில் மேம்பாடுடையவளாகக் கூற முடியாமற் போயினும், அவளுடைய அவயவ லட்சணங்களைக் கவனித்து நெப்போலியன் அவளை விரும்பி மணந்தான்.

ஜோஸபினை மணந்தபோது(8-3.1796) நெப்போலியனுக்கு 26 வயது; ஜோஸபினுக்கு 32 வயது. ஜோஸபின் நெப்போலியனைப் பெரிதும் விரும்பினாள், நெப்போலியன் இவளை ஒருநாளும் விட்டுப் பிரிய முடியாத நிலைமையையடைந்தான். ராணுவத்துடன் நெப்போலியன் இத்தாலிக்குப் போக வேண்டியதாயிற்று. இத்தாலி சென்றதும் ஜோஸபினை உடனே வரும்படி எழுதினான், வரவில்லை; பன்முறை கெஞ்சும் முறையில் எழுதினான். ஜோஸபின் பாரிஸ் நகரை விட்டு நகரவில்லை. கடைசியாக பயமுறுத்தி எழுதியதின் பின்னர் இத்தாலி சென்றாள். காரணம் என்னவெனில், பாரிஸில் பல பிரபுக்கள் ஜோஸபினுக்கு அடிமையாயினர். பாரிஸை விட்டு இத்தாலி செல்லும் வழியிலிருந்த பல நகரங்களில் தங்கித் தங்கியே இத்தாலி சென்றாளாம். ஜோஸபினுடைய மின்சார வனப்பு பாரிஸ் நகரில் ஒரே பேச்சாயிற்று; இவள் எங்கு சென்றாலும் வண்டுகள் மொய்க்கும் தேன் கூண்டுபோல் ஆனாள்.

வீராதி வீரனாகிய நெப்போலியன் மனைவி ஜோஸபின் பாரிஸை விட்டு இத்தாலி செல்லும் வழியில் உள்ள

ஒவ்வோர் நகரத்திலும் தங்கித் தங்கியே சென்றாள். அவளுடைய அழகையும், தேக வனப்பையும் கேள்விப் பட்ட கோடீஸ்வரர்களும், இராணுவ உத்தியோகஸ்தர் களும் அவளைப் பேட்டி கண்டு இன்புற்றனர். இவ்வாறு ஜோஸபின் திருவிளையாடல்களைப் புரிந்துகொண்டு இத்தாலி சேருவதற்குள், அவள் மேலிருந்த பாசம் நெப் போலியனுக்குக் குறைந்து விட்டது. அவள் மீண்டும் பாரிஸுக்கே அனுப்பப்பட்டாள்.

- இதழ் : மானிட இன்பம், ஆகஸ்டு 1950. மலர் 3, இதழ் 728, பக்கம் - 28.

# முத்தத்தில் மூழ்கிய



# மகுடங்கள்

## அலெக்ஸாண்டர் (கி.மு. 356-323)

தனக்குப் பிடித்தமான ஆடலழகியருள், எழிலரசி என்று கருதப்பட்ட **கம்பாஸ்பி** என்ற அழகு ராணியை, கலையார்வம் காரணமாக நிர்வாண (NUDE) வண்ண

ஓவியமாகத் தீட்டும்படி தனது நண்பனும், உயர்ந்த வண்ணக் கலைஞனுமான **அப்பெல்லஸ்** என்பவனின் கலைக்கோயிலுக்கு அழைத்துச் சென்றிருந்தானாம் அலெக்ஸாண்டர்.

● நூல்: அலெக்ஸாண்டர் (1954) பக்கம்-183.
நூலாசிரியர் :கௌதமன்

## அதி வீர ராம பாண்டியர் (1564-1604)

அதி வீர ராம பாண்டியர் என்பவர், தென்னாட்டில் தென்காசியிற் செங்கோல் செலுத்திய சந்திரவம்சத்துச் சிற்றரசர்களில் ஒருவர். இவர்காலம் ஏறக்குறையஆயிரம் வருஷங்களுக்கு முன்பென்றும், இவருடைய ஜ்யேஷ்ட சகோதரரது பெயர் வரதுங்க ராமபாண்டியரென்றும், அவர்திருக்கருவையில் அரசாண்டு கொண்டிருந்தனரென்றுங்கூறுவர். இவர்செய்த நூல்கள்-நைடதம், கூர்ம புராணம் இலிங்கபுராணம், காசிகாண்டம், திருக்கருவைக் கலித்துறை யந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவை வெண்பாவந்தாதி, நறுந்தொகை எனப்படும் வெற்றிவேற்கை முதலியன. கொக்கோகம் எனப்படும் மதனநூலும் இவர்செய்ததென்பது, சிலர் கொள்கை.

இவர் இந்த அந்தாதிகள் இயற்றியதற்குக் காரணம்: இவர்க்குக் காமவொழுக்க மிகுதியால் தொழுநோய் நேர்ந்தது பற்றிக் கழிவிரக்கங்கொண்டு திருக்கருவைத் தலத்தில் வந்து சிவபிரான்மீது அந்தாதிகள் மூன்றையும் பாடித்துதித்த மாத்திரத்தில் அந்நோய் நீங்கப்பெற்று நற்கதியடைந்தனர் என்று கூறுவர்.

○ நூல்: திருக்கருவை வெண்பாவந்தாதி. (1930 இரண்டாம் பதிப்பு) உரையாசிரியர்: சே. கிருஷ்ணமாசாரியர் வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியர். பக்கம்-2.

## ஆலிஸ் பெரெர்ஸ்

ஆரம்பத்தில் வெற்றிகளுடன் துலங்கிய மூன்றாம் எட்வர்டின் ஆட்சிக் காலம் கடைசி பதினைந்து ஆண்டுகளில் பெருமை குன்றி, கழிந்தது. (1372-ல்) இரண்டு நாள் நீடித்த **லா ரோஷெல்** (LA ROCHELLE) கடற்போரில் இங்லிஷ் கடற்படை அழிந்தது. லா ரோஷெல் தோல்விக்குப் பிறகு இந்தக் கடலாட்சியை இங்லண்டு இழந்தது. 1375-ல் மற்றொரு சமாதானம் ஏற்பட்டது. இத் தோல்விகளின் மூல காரணம் இங்கிலிஷ் துரைத்தனத்தில் ஒற்றுமையின்மையாம். நிறைந்த ஆண்மையும் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டிய சமயத்தில் எட்வர்ட் மன்னர் அறிவீனமாக நடந்து கொண்டார். **ஆலிஸ் பெரெர்ஸ்** (ALICE PERRERS) என்னும் சுயநலமிக்க துஷ்டை யொருத்தியின் மோகவலையில் சிக்கி அவர் தமது அரச பொறுப்புக்களைக் கவனியாதிருந்தார். ப்ரான்ஸில் தம்வசத்திலிருந்து நழுவிக் கொண்டே போன நாடுகளை மீட்க அவர் யாதொரு முயற்சியும் செய்யாதிருந்ததோடு துரைத்தனத்திலும் தம் பிடியை நெகிழவிட்டயர்.

- நூல்: பிரிட்டன் வரலாறு (1940) (இரண்டாம் பதிப்பு) பக்கம்-142, 143. மொழிபெயர்த்தவர் : ம. சண்முகசுந்தரம் எம். ஏ. எல். டி. (சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தலைமையாசிரியர்)

## இந்தூர் மஹாராஜா துகோஜிராவ் ஹோல்கார்

பட்டந்துறந்த இந்தூர் மஹாராஜா துகோஜி ராவ் ஹோல்காருடைய முதல் கதை !

ஜே. டபிள்யூ. பிளேக் என்பவர் லண்டன் "வீக்லி டெஸ்பாட்ச் பத்திரிகையில் இவ்வாறு எழுதியிருந்தார்.

"ஒரு எளிய முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவள் மும்தாஜ் பீகம். ஆனால் எழில் நலம் வாய்ந்தவள். உல்லாஸ நடையுடை பாவனைகளை உடையவள். அதனால் மஹாராஜா மோகங்கொண்டவராய்த் தமது அரண்மனை அந்தப்புரத்தில் அவளுக்கு முதன்மையான இடங்கொடுத்தார். அவளுக்கு எது தேவையானாலும் சரி, அதன் விலையைப் பற்றிக் கவலையில்லை. உடனே வரவழைத்துக் கொடுத்துவிடுவார்.

1921-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் மஹாராஜா இங்கிலாந்துக்குப் புறப்பட்டபோது மும்தாஜ்பீகத்தையும் அழைத்துக்கொண்டு சென்றார். கமலாபாய் என்னும் மாறு பெயருடன் விவகரிக்கச் செய்தார்......மும்தாஜ் இங்கிலாந்துக்குப் போய்விட்டு வந்த பிறகு ஒரு ஆண்டில் கர்ப்பவதியானாள்.

அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். பிறந்தபோது குழந்தை உயிருடன் நன்றாகவே இருந்தது. ஆனால் சிறிது நேரத்திற்குள் தாதிகள் அக்குழந்தை இறந்து விட்டது என்று தெரிவித்தார்கள். இதனால் மும்தாஜ் பீகத்தின்மனம் முறிந்து விட்டது. மஹாராஜாவின் சம்பந்தத்தை எப்படியேனும் அறுத்துக் கொள்ள வேண்டும் என்றுதீர்மானித்து விட்டாள்.

● நூல்: லீலா விநோத சமஸ்தானங்கள் (1939) பக்கம் 46, 47, 48. நூலாசிரியர்: வி. ரா.

## கோபி சந்தராஜன்

கோபி சந்தராஜன்— உத்தர கண்டத்தில் கௌட பங்கால் என்னும் ராஜ்யத்திலுள்ள காஞ்சன புரிக்கு அரசனாகிய திரிலோசந்து என்பவன் ஒருவன் இருந்தான். அவன் பாரி மைனாவதி. அவன் தவத்தால் பிறந்த குமரன் கோபிசந்தன். இந்தக் கோபிசந்தன் தந்தைக்குப்

பிறகு பட்டமேற்று அரசாளுங் காலத்தில் ஆயிரத்து இரு நூறு மனைவிகளை விவாகஞ் செய்தும் ஆயிரத்து அறுநூறு போகமாதர்களை வைத்துக் கொண்டும் விஷயானந்தத்தை அனுபவித்து வந்தான்.

ஓர் நாள் தனது புதல்வன் சந்தன முதலிய வாசனைத் திரவியங்களை அணிந்து உலாவிக் கொண்டிருத்தலைக் கண்டு இவ்வகைக் களிப்புடன் இருக்குமிவன் யமன்கை யில் பட்டு மாள்வனே என்னும் வருத்தத்தால் மேல்மாளி கையினின்றும் அழுங்கண்ணீரானது இவன்மேல் துளிப்ப இந்நீர் யார் தெளித்தாரென்று மேலே பார்க்க அது தனது தாயின் கண்ணீரென்றறிந்து இவளை யழுதற்குக் காரணமென்னவென்று கேட்க 'உன் தந்தை முதலிய முன்னோர் உன்னைப்போலவே போகங்களை அனுப வித்து யமன் கையிற்பட்டு மாண்டனர். அவ்வாறே நீயும் யமன் கைப்பட்டு மாள்வாயென்று வருந்தி அழுகின்றேன் என்றனள்.

● நூல்: அபிதான சிந்தாமணி (1910) பக்கம்—321, 322. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார்.

## கைக்கோ பாட்

கீராவின் மகனாகிய கைக்கோ பாட் 1286 வருடத்தில் தன் பாட்டனுக்குப் பின்பு பட்டத்துக்கு வந்தான். இவன் தனக்குத் தோழனாக அயோக்கியனான நைஜாமுட்டீன் என்பவனைத் தெரிந்து கொண்டு அவன் வசத்தில் இராச் சிய பாரத்தை ஒப்பித்துவிட்டுச் சிற்றின்ப லீலைகளில் தன் நாட்களைச் செலவழித்தான். அவனுடைய தகப்பன் வங்காளத்திலிருந்து திரும்பின போது, பல முறை கடிந்து கொண்டும் அவன் தன் துஷ்டக் கிரியைகளை விடவில்லை. கடைசியில் அவனுடைய தேகத்தில் சகல வியாதியுங் குடிகொண்டு பெலன்குன்றி அவனுடைய

மனோதத்துவங்கள் குறைந்து சகலராலும் இழிவாய் எண்ணப்பட்டு அவனும் அவனுடைய கைக்குழந்தையு மாக ஒன்றாய்க் கொலை செய்யப்பட்டார்கள்.

- நூல் : சரித்திரச் சுருக்கம் அதிகாரம்—1. பக்கம்—14.

## சரபோஜி

ஸரபோஜியின் காலத்திலே தஞ்சை மாளிகையில் வண்ணாத்தி ஒருத்தி இருந்தாள். அவள் மகா ரூபவதி. அவளது இயற்பெயர் குப்பிஜி. காரணச் சிறப்புப் பெயரோ ரூபிஜி. பார்வைக்கு அவளை வண்ணாத்தி என்று சொல்ல முடியாது. ராஜாத்தி என்றே சொல்ல வேண்டும். ஸரபோஜிக்கு அவள் காமக்கிழத்தியானாள்; உடனே ராஜாத்தி ஆகிவிட்டாள்! அந்தப் புரத்திலே அவளுக்குத்தான் அக்கிர ஸ்தானம்.

- நூல் : தேச ஜோதி (1946) பக்கம்—134. நூலாசிரியர் : எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்.

## சிரோப் சிங்

அவுரங்கசீபின் அதிகாரத்துக்கு அடங்கி, தக்ஷண தேசத்தில் நவாபாய் விளங்கிய ஸுல்பிர்சர்கான் என்ப வன் 1698 வருடத்தில் பெரும் போர் செய்து வெற்றி அடைந்தான். அதனால், செஞ்சிக்கோட்டை மகமதிய ரின் வசமாய் நின்றது. அம்மகமதிய நவாப், அவுரங்க சீபின் உத்தரவின்படி **சிரோப் சிங்** என்னும் ஒரு ராஜ புத்ர வீரனை, அக்கோட்டைக்குச் சிற்றரசனாக ஏற் படுத்தினன்.

சிரோப் சிங், தன்னுடைய ராணுவத்தில் காதர் என்னும் பெயருடைய போர் வீரன் ஒருவனை வைத்

திருந்தனன். அவனுக்கு, **சான்ட் பீபி** என்னும் அழகுடைய மகள் ஒருத்தியிருந்தனள். அவள் ஒருநாள் தன் தந்தையின் வீட்டுக்குப் பின்னுள்ள, ஒரு நந்தன வனத்தில் தன் தோழிகளுடன் உலாவி இருந்தனள். சிரோப் சிங், அவ்வழியாக வேட்டையாடி வரும்போது அவளைக் கண்டனன். அவளது பேரழகு அவனுடைய மனத்தை உருக்கியது, அவள், செயற்கை அழகாம் ஆபரணங்கள் முதலியன இல்லாமலே, உலகிற் சிறந்த உருவினளாய் இருத்தல் கண்டு, மன்னவன் அவளை மணம்புரிய எண்ணம் கொண்டான். என்றாலும், அவன் முன்னதாகவே ராம்பாயை மணம் செய்து கொண்டமையின், அவன் தன் இளமையின் சேஷ்டையால், அப்பெண்ணைப் பிறரறியாதபடி நேசித்து, அவளுடன் வாழ்ந்து வந்தனன்.

சான்ட்பீபி, சில நாட்களுக்குப் பின் ஒரு மகனைப் பெற்றனள். அதை அறிந்த மன்னன், இனி அவளைத் தன்னூரில் வைத்திருப்பது, தன்னுடைய கௌரவத்திற்குக் குறைவாகும் என்று அறிந்து, அவளை அவன் தந்தையுடன் வேண்டிய பொருள்களைக் கொடுத்து வேற்றூருக்கு அனுப்பி விட்டனன். அவள் சென்றஒரு வருடத்திற்குப் பின்னரே, ராம்பாய் தேஜஸ்சிங்கைப் பெற்றனள். சாட்ன் பீபி தன் தந்தையுடன் ஹைதராபாக்கத்துக்குச் சென்றாள். அங்கு சில வருடங்களுக்குப் பின் காதரும் இறந்தான். அவன் மகள் தன் தந்தையின் பிரிவால் வருந்தி, அவ்வருத்தத்தை ஒருவாறு தனது மகனால் மாற்றிக் கொண்டு, அவனைப் பள்ளிக்கு விட்டனள். பள்ளியில், அப்பாலகன் மிகவும் திறமையாய்ப் பாடங்களைப் படித்து அக்காலத்தில் இன்றியமையா வித்தையெனக் கருதப்பட்ட போர்த் தொழிலிலும் பழகி வந்தான். அவனுக்கு, சான்ட்பீபி **தாவுத் கான்** என்னும் பெயரிட்டனள்.

- நூல்: தேசிங்கு ராஜன் (1917) பக்கம்-13, 17, 18, நூலாசிரியர் : சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்.

## சிவாஜி (1627-1680)

பல வாசகர்கள் சிவாஜிக்கு ஒரு மனைவி என்றும், மூன்று மனைவியர் என்றும், ஆறு மனைவியர் என்றும் பலவிதமாக எழுதியுள்ளனர். எட்டு மனைவியர் என்பதே சரி என்கிறார், மாநிலக் கல்லூரி வரலாற்றுத் துறை துணைப் பேராசிரியர், திரு. ந.க. மங்கள முருகேசன். "நியூ ஹிஸ்டரி ஆஃப் தி மராத்தாஸ்" என்ற நூலின் ஆசிரியர் சர்தேசாய் (பக்கம் 257) சிவாஜியின் எட்டு மனைவியரின் பெயர்களையும் அறிவிக்கிறார்.

1. சாய் பாய் நிம்பலகார்
2. சகுணா பாய் ஷிர்கே
3. கோயரா பாய் ஷிர்கே
4. புட்லி பாய் மொஹைடி
5. லட்சுமி பாய் விச்சாரே
6. சக்வார் பாய் கெய்க்வார்
7. காஷி பாய் ஜாதவ்
8. குணவந்த் பாய் இங்ளே

இவை அவர்களுடைய பெயர்கள். இவர்களைத் தவிர திருமணம் செய்துகொள்ளாத இரண்டு மனைவியரும் இருந்தனர். இவர்களில் சிவாஜி இறக்கும்போது மூவர் மட்டுமே உயிருடன் இருந்தனர். சிவாஜி இறந்தபோது புட்லிபாய் என்பவரே உடன்கட்டை ஏறினார் என்கிறார்,

- இதழ்: ஆனந்த விகடன்

## சுல்தான் சஞ்சர்

சுல்தான் சஞ்சருடைய அவையில் ஆதரவு பெற்ற புலவர்களில் அலீஅவ்ஹாதுத்தீன் அன்வரியும், அமீர் முயிஸ்ஸியும் முக்கியமானவர்கள். அமீர் முயிஸ்ஸியிடம் சஞ்சர் மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார். ஒரு தடவை ஸஞ்சர் எய்த அம்பு ஒன்று தற்செயலாக வழிதவறி முயிஸ்ஸியின் மீது தைத்துவிட்டது. அதனால் (கி,பி. 1148) முயிஸ்ஸி மாண்டார். இவருடைய திவானில் பதினையாயிரம் பாட்டுக்கள் உண்டு. சஞ்சருடைய காலத்தில் மிஹஸ்தி என்றொரு பெண் கவியும் இருந்தாள். இவள் மிகப் பிரபலமாகியிருந்தாள். மகிழ்ச்சி துள்ளும் இதயமும், ஒழுக்கங்கெட்ட நடத்தையும் உடைய இப்பெண் துடுக்கான நாவும், கூர்த்த மதியும் உடையவள். இவள் சுல்தான் சஞ்சரின் ஆசை நாயகியும் கூட என்கிறார் தௌலத்ஷா. இவளுடைய வெற்றிமிகு ருபாயியாத் யாவராலும் போற்றப்பட்டன.

- நூல்: பாரசீகப் பெருங்கவிஞர்கள், 1955, பக்கம் - 19. ஆசிரியர்: ஆர்.பி.எம். கனி, பி.ஏ., பி.எல்.,

## தித்தா க்ஷேமன் (கி.பி. 950)

பர்வ குப்தனுக்குப் பிறகு அவன் புதல்வனாகிய **க்ஷேம குப்தன்** கி.பி. 950-வது ஆண்டில் அரசனானான். அவன் நடத்தை மிகவும் வெறுக்கத் தக்கதாயிருந்தது. சூதாடுவதிலும், மது பானம் செய்வதிலும், பிறருடைய பெண்டிர்மீது காதல் கொள்வதிலும் அவனுக்கு விருப்பம் அதிகம். அவன் உயர் குலத்திற் பிறந்தவர்களையும், கலைகளைக் கற்றவர்களையும், நல்லொழுக்க முடையவர்களையும் ஏளனம் செய்தான்; தன்னைக் காணவந்தவர்கள்மீது பைத்தியக்காரனைப்போல எச்சில் உமிழ்ந்

தான்; பிரம்பினால் அவர்களைத் தலையில் அடித்தான். அவன் சபையில் தாசிகளும், பாட்டுக்காரர்களும், கூத்தாடிகளும், சூதாடிகளுமே நிரம்பி யிருந்தார்கள். அரசன் அவர்களுக்கே பட்டுப் பீதாம்பரங்களையும் முத்து மாலைகளையும் அளித்தான். அவன் 36 கிராமங் களைக் கூச அரசர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தான். சிங்கராஜன் என்பவன் பெண்ணை மணந்து கொண் டான். அவளுக்குத் **தித்தை** என்பது பெயர். அரசன் அவளிடம் அதிக அன்பும் பிரீதியும் வைத்து, அவள் சொற்படியே எவ்விதத்திலும் நடந்து வந்தான். அதனால், அரசனுக்குத் தித்தாக்ஷேமன் என்னும் பெயரும் வழங்கிற்று.

- நூல்: இராஜ தரங்கிணி பக்கம் - 83, 84.

## திருமலை நாயகர்

திருமலை நாயகர் ஒரு பட்டர் மனைவியுடன் தகாத வழியில் நடந்து வந்ததாகவும், அவளிடமிருந்து இரவில் திரும்பி வரும்போது, ஒரு கிணற்றில் விழுந்து இறந்த தாகவும் அந்தப் பட்டர் அக் கிணற்றைத் தூர்த்து விட்ட தாகவும் சொல்கின்றனர்.

- நூல் : தமிழ் உணர்ச்சி (1947)பக்கம் - 20. நூலாசிரியர் : யோகி. சுத்தானந்த பாரதியார்.

## நெப்போலியன் (1769-1821)

நெப்போலியனுக்குக் காதலிகள் அதிகம். ஓர் பெண்ணைப் பார்த்து மனதைப் பறிகொடுத்தால் எவ்வாறும் அவளை அடைவதையே கருத்தாகக் கொண் டிருப்பான். மேடம் டி போரஸ் என்னும் மங்கையின் மீது ஆசை கொண்டானாம்; அவளைச் சந்தோஷப்

படுத்த வேண்டி அவளுக்கும் அவளுடைய சிநேகிதைகளுக்கும் ஓர் விருந்து அளித்தான். விருந்து நடந்து கொண்டிருந்தபோது வேண்டுமென்றே போரஸ் மீது குளிர்ந்த பானத்தை ஊற்றிவிட்டு அதைத் துடைக்கும் பாவனை காட்டி அவளை அப்படியே தன் தனியறைக்குத் தூக்கிச் சென்று விட்டானாம். வெகு நேரம் வரையில் அவர்கள் வெளி வராததால் விருந்துக்கு வந்தவர்களுக்கு விஷயம் தெரிந்து விட்டது. பின்னர் அப்பெண்ணின் கணவன் வந்தான். விஷயத்தை அறிந்து கோபித்துக் கொண்டான். போரஸ் கணவனிடமிருந்துவிவாகரத்து பெற்று நெப்போலியனுடன் பலர் அறிய வாழ்ந்தாள். சில காலங் கழித்து போரஸ் மீது பற்றுதல் நீங்கவே அவளை தானே முன் நின்று வேறொருவனுக்கு மணம் செய்து விட்டான்.

● இதழ்: மானிட இன்பம். செப்டம்பர் 1950. மலர்-3 இதழ்—9. பக்கம்—77.

## பண்டரிபுரத்தரசன்

கானோபாத்ரை—இவள் மங்களவேடு என்னும் கிராமத்திலிருந்த அழகுமிகுந்த தாசி. இவள் மிக்க அழகுள்ளவளாதலால் பூமியிலுள்ள மனிதர் ஒருவரும் தான் விரும்பத்தக்கவரல்லர் என்று ஆசையொழித்துப் பண்டரிபுரத்துப் பெருமாள் விஷயத்திலீடுபட்டு ஆண்டுச்சென்றனள். அவ்விடத்தில் பெருமாளைப் பஜனை செய்து வருகையில் ஒருவன் அரசனிடஞ்சென்று இவளது அழகு முதலியவைகளைக் கூற அரசன் இவளைத் தனது சமூகத்திற்கு வரும்படி கட்டளையிட்டனன்,

● நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம் - 266. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார். (சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ் உபாத்தியாயர்)

## பப்பா

குகனும் அவனது சந்ததியாரும் ஒன்பது தலைமுறைகளாக 250 வருஷகாலம் ஆண்டு வந்தனர். ஒன்பதாவது நாகதீதன் என்பவன் மலை நாட்டாரோடு சண்டை போட்டு அவர்களால் கொல்லப்பட்டான். அவனுடைய மைந்தனாகிய பப்பா சிறு பையனாயிருக்கும்போது பசுக்களை ஓட்டிக்கொண்டு காட்டுக்குப் போய் அவைகளை மேய்த்து வருவது வழக்கம். ஒருநாள் காட்டில்மேய்த்துக் கொண்டிருக்கும்போது, அருகிலுள்ள சோளங்கி ராஜ புத்ரத் தலைவனது புத்திரி சில கன்னிகைகளுடன் அதே காட்டிற்கு ஊஞ்சலாடி விளையாடி பொழுதுபோக்கும் வண்ணம் வந்தாள். வந்தவர்கள் மரத்தில் ஊஞ்சல் கட்டக் கயிறு கொண்டுவர மறந்து விட்ட தனால் பக்கத்தில்மாடு மேய்த்துக்கொண்டிருந்தபப்பாவினிடம்சென்று ஒரு கயிறு இரந்தனர். இதற்குப் பப்பா அவர்கள் ஊஞ்சல் விளையாட்டுக்கு முன் ஒரு விவாக விளையாட்டுக்கு உடன்பட்டால் தான் கயிறு கொடுப்பதாகச் சொன்னான். அவ்வாறே விவாக விளையாட்டு ஆரம்பித்தார்கள். பப்பாவையும் அந்த ராஜபுத்ர கன்னிகையையும் சேர உட்காரவைத்து அவர்களுடைய வஸ்திரங்களின் நுனியை முடிபோட்டு உட்காரவைத்து அவர்களைச் சுற்றிலும் விவாக கோலமாகவே நின்று கொண்டு இவ்விளையாட்டை உண்மையான விவாகம் போலவே நடத்தினார்கள். பின்னால் இவ்விளையாட்டு வினையாகவே முடிந்தது.

இது நடந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் இந்த ராஜ புத்ரியின் கல்யாணத்திற்காக அவள் தகப்பன் தன் புரோகிதனை அழைத்து அவளுடைய ஜாதகத்தைப் பார்த்தபோது அப்புரோகிதன் அவளுக்கு முந்தியே விவாகம் நடந்திருக்கவேண்டுமென்றான். இச் செய்தி கேட்டதும் தகப்பன் இன்னதுசெய்வதென்று தெரியாமல்

திகைத்தான். காட்டில் நடந்ததை வெளியில் யாருக்கும் தெரிவிக்காமல் இருக்கும்படி அக் கன்னிகைகளைப் பப்பா வேண்டிக் கொண்டிருந்த போதிலும் இது எப்படியோ அத்தகப்பனுக்குத் தெரிந்துவிட்டது. தனக்கு என்ன நேரிடுமோ என்று பயந்து உடனே பப்பா அருகிலுள்ள மலையாளிகளுள் முக்கியஸ்தர்களான பலேவன், தேவன் என்னும்இருவரையும்சினேகித்துத்துக் கொண்டான், அவ்விருவரும் பப்பாவை அதிக விசுவாஸத்துடன் காத்து வந்ததோடு பலேவன் தன் கைவிரல் ரத்தத்தையே எடுத்து அவனுடைய நெற்றியில்ராஜதிலகமிட்டான். பின்னால் பப்பா அதே ராஜபுத்ரியை மணஞ்செய்து கொண்டதோடு கூட அக்கன்னிகைகள் எல்லாரையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

● நூல்: ராஜபுத்ர வீரர்கள் (1938) பக்கம். 3, 4. : நூலாசிரியர் : லக்ஷ்மிநாராயண ஐயங்கார்.

## பதினைந்தாவது லூயி

பதினைந்தாவது லூயி தன் வாழ்நாள் முழுவதும் பெண்களின் உறவிலேயே கழித்தான், "அளவு மீறுகிறது உயிருக்கே ஆபத்து" என்று அவனுடைய வைத்தியர்கள் எச்சரித்த பிறகும் அவன் தன் காமக் களியாட்டங்களை நிறுத்தவில்லை.

● இதழ்: செக்ஸ் லைஃப் (ஜனவரி, 1974)

## பிம்பிசாரன்

மகத ராஜனான பிம்பிசாரன் பிரசித்தி பெற்ற காமாதுரன். அவனுக்கு அழகிய பெண்கள் மீது கொள்ளை ஆசை; காம சாஸ்திரம் மனப்பாடம். வைசாலி, கோசலம், ராஜக்கிருகம் ஆகிய இடங்களில்

எங்கெங்கே எந்த விலைமாது இருக்கிறாள் என்பது நெட்டுரு. அவர்களுக்குள் அழகில் சிறந்தவர்கள் அவனுக்குச் சொந்தம்; குடிகளும் அவனை அதற்காக வெறுக்காமல் அவனுடைய ஆண்மையைப் போற்றினார்கள்.

பிம்பிசாரனுடைய கண்மூடித்தனத்தால் விலைமாதர் கொம்மாளம் அடித்தார்கள். தனக்குப் பிம்பிசாரன் மூலம் குழந்தை பிறந்ததென்று ஒவ்வொருத்தியும் சொல்லிக் கொண்டாள். அதன் செலவுக்குப் பணம் வேண்டும் என்று சொல்லி, அரண்மனைக் கஜானாவையே அவர்கள் காலி செய்தார்கள்.

பிம்பிசாரன் அம்பாபாலியின் அழகுக்கு வசியமாகி அவளுடன் ஒரு நாளைக் கழித்தான். அவள் ஓர் இரவுக்கு ஐம்பது 'தக பணம்' (தொகை) வசூலிப்பவள். அவளுக்கு ஒரு பிள்ளை பிறந்தான். 'அபயன்' என்பது அவன் பெயர். பின்பு அவன் பௌத்த பிட்சுவாகி, விமலகன் என்று பெயர் பெற்றான்.

● இதழ் : மஞ்சரி (ஜூலை-1953) கட்டுரையாளர்: அட்ஸூ மில்லி.

## பலக்புகார்

பலக்புகார்—ஒரு மிலேச்ச அரசன். இவன் கபீர்தாசரிடத்தில் உபதேசம் பெற்று அதை மறந்து ஒருநாள் தன் படுக்கையில் வந்து தன்னைக் கூடாது ஒரு புறமாகப் படுத்துறங்கின தாசியை நான்கு சவுக்குகள் முறியுமளவு அடிக்கும் படி கூறித் தானும் பார்த்திருக்கையில் தாசி அடிபட்டும் தான் அழாதவளாய்ச் சிரித்துக் கொண்டு வருதலை நோக்கி அரசன் அவளை என்னே சிரிக்கின்றனை என்றனன். தாசி படுக்கையின் ஒரு புறத்திலுறங்கின எனக்கு இவ்வளவு தண்டனையானால் முழுவதிலும் படுத்துறங்கின உமக்கு எவ்வளவுண்டாகுமெனச் சிரித்

தேன் எனக்கேட்டு அரசன் திடுக்கிட்டு ராச்சிய முழுதும் மந்திரி வசமாக்கித் துறவடைந்து ராம நாமம் பஜித்துக் காடடைந்து பெருமாளைத் தரிசித்து அவ்விட நீங்கியப் பாற் சென்று ஒரு பகீரையடைய, அப்பகீர் தனக்குப் பெருமாள் கொடுத்த இரண்டப்பத்தை வைத்துக் கொண்டு இவரைக் கண்டு இவர்க்கு ஒரு அப்பம் போதுமேயென்று எண்ணி, இவரை நீ புதியவனிங்கிருத் தல் கூடாதெனப் பலக்புகார் சற்றகல இருந்தனர்.

● நூல்: அபிதான சிந்தாமணி (1910) பக்கம் 646, 647, நூலாசிரியர்: ஆ. சிங்கார வேலு முதலியார்.

## பிலிப்

ராணி ஒலிம்பியாஸ்—பிலிப்பின் பட்டமகிஷி! அரியணை ஏறக்காத்திருந்த அலெக்ஸாண்டரின் தாய்! கண்டோர் வியந்து—சம்பந்தப் பட்டோர் பொறாமைப் படுகின்ற அளவுக்கு பிலிப்பின் காதற் பயிற்சிகள் வளர்ந்து காதலியர்களின் பட்டியல்களும் உயர்ந்து வந்த நிகழ்ச்சிகள் கொஞ்ச நாட்களாகவே மாஸிடோனிய அரண்மனையில் சலசலப்பை உண்டாக்கி வந்தன! சூழ்நிலையின் வேகத்தால், கிரேக்க அரச பீடத்தையே கவர்கின்ற அளவிற்கு இந்த சலசலப்பு வளர்ந்தும் விட்டது. இல்லை வளர்த்து விட்டான் பிலிப்!! தளபதி அட்லாஸின் தங்கை மகள் **'கிளியோபாட்ரா'** வைத் தன் காதற் பயிற்சிக் கூடத்திலேயிருந்து அரண்மனைக்கே கம்பீரமாக அழைத்து வந்து விட்டான் பிலிப்!

● நூல்: அலெக்ஸாண்டர் (1954) பக்கம்- 12, 13, நூலாசிரியர்: கௌதமன்.

# ரஞ்சித் சிங் (1780-1839)

சிறு குழந்தையாக விருக்கும்பொழுதே நம் பஞ்சாப் சிங்கமாகிய இரஞ்சித் சிங்கருக்குக் கன்ஹயா வம்சத்தில் தோன்றிய குருபக்ஷ சிங்கனுடைய குமாரி **மாதாப் கூர்** என்னும் பெண்ணை விவாகம் செய்து வைத்தனர். இற்றைக்கும் பாலிய விவாகம் நடந்தேறும் நமது தேசத்தில் அப்பொழுது நடந்தது ஆச்சரியமன்று.

இரஞ்சித் சிங்க மகாராஜாவிற்கு மாதாப்கூரைத் தவிர அனேக மனைவியர் உண்டு. ஆனால், மாதாப்கூரே பட்ட மகிஷியாக விருந்தாள். அவளுக்கடுத்தாற்போல் இராமசிங்கன் என்னும் ஒரு சிற்றரசனுடைய புதல்வியாகிய **இராஜ்கூர்** என்னும் சீமாட்டியை அவர் மணம் புரிந்திருந்தார். அவள் காரக் சிங்கன் என்னும் புதல்வனைப் பெற்றாள். அவன் ஒருவனே இரஞ்சித் சிங்கருடைய உண்மைப் புத்திரன் எனச் சொல்லப் படுகின்றது.

மற்றும் இரஞ்சித் சிங்கர், **குல் பீகம்** என்னும் தாசியையும், **மோரான்** என்னும் தாசியையும் மணந்திருந்தார். மோரான் சிறிது காலம் மிக்க அதிகாரம் பெற்றிருந்தாள். மகாராஜா கூட அவளால் பதுமைபோலஆட்டப் பட்டார்.

அவருடைய அந்திய காலத்தில் **ஜிண்டான்** என்னும் ஒரு பெண்ணை மணந்தார். அவள் சீக்கிய சேனையின் தளகர்த்தனுடைய குமாரி யென்றும், நாட்டியத்தில் தேர்ந்தவளென்றும், அரசர் ஒரு சமயம் அவளைப் பார்க்க நேரிட்டதென்றும், உடனே அவளை அவர் மணந்தாரென்றும் சொல்லப்படுகின்றது.

○ நூல்: வீர மன்னர்கள் (1930) பக்கம்- 63, 66, 67, நூலாசிரியர்: T. V. கணேசன், பி.ஏ; எல். டி. (சரித்திராசிரியர், பச்சையப்பன் உயர்தரக் கலா சாலை, சென்னை)

## ராஜா உதயசிங்

ஜாப்வா சமஸ்தானாதிபதி ராஜா உதயசிங் 1934-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மொத்தம் ஒன்பது கலியாணங்களைச் செய்திருந்தார். அந்த ஒன்பது பத்தினி மார்களின் பெயர்கள் வருமாறு :—

திமெகர் ராணி
தரம்புரி ராணி
கெரோட் ராணி
ஷிமெபூர் ராணி (கௌ ராணிஜி)
தரியாவாட் ராணி
சந்த்ரம்பூர் ராணி
குரவாட் ராணி
பராட் ராணி
பல்லீ ராணி

இந்த ஒன்பது பத்தினிமாரும் போதவில்லை என்று பஸ்வான்கள் என்னும் பெண்கள் இருபத்தாறு பேரைக் கொண்டு வந்து வைத்திருந்தார். பஸ்வான்கள் என்றால் யார்? சமஸ்தானாதிபதியின் கலியாண சம்பந்தமற்ற காதல் கிழத்திகள்! இவர்கள் மற்றவர்களின் மனைவி மாராயிருந்தாலும் இருக்கலாம். எனினும் இவர்களுக்கு விவாகரத்து அவசியம் இல்லையாம். சமஸ்தானாதி பதியின் காமக்கண்ணுக்குக் குறியானால் போதும். அவள் எப்பேர்ப்பட்ட பெண்மணியானாலும் அவருக்கு உட்பட்டே தீரவேண்டும்; இன்றேல் தன்னுயிரையும், தன்னைச் சேர்ந்தவர்களின் உயிர்களையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். இந்த ஜாப்வா ராஜாவின் காமக் கிழத்திகளான பஸ்வான்களைப் பற்றிய விவரங் கள் வருமாறு:

| பஸ்வான் பெயர் | புருஷன் இருந்தால் அவர்கள் பெயர் |
|---|---|
| பகிரதிபாய் | கிஷன் (ரட்லம்) |

| | |
|---|---|
| நவரதன்பாய் | ஜகந்நாத் |
| சந்திராபாய் | ஸுவ |
| நாபீபாய் (ஜுனியர்) | செயின் சிங் |
| மோதி | இறந்தாள் |
| காமிரா | நாராயணன் இறந்தான் |
| கன்வேரி | ராம |
| குலி | மதன் |
| காசிபாய் | ஜகந்நாத் |
| கோதி | பட்டா (11 மீனா தாய்) |
| மீனா | (10 கோதி மகள்) |
| ராமஜோதி | மதன் (நாபியின் தாய்) |
| சுந்தரி | |
| மேதாய் | மோஹன் இறந்தான் |
| பார்வதி | |
| லலிதா (தியோகர்) | (ஜானி தங்கை) |
| நாபி (ஸீனியர்) | |
| கெஷி | கன்யலால் |
| ராமன் வரூபி | ராம |
| மோதி | பாபாஜான் |
| தேவ் தபயான் | |
| ஸாமத் | ஜக்கு இறந்தான் |
| ஸுர்ஜி | கம |
| ஜாபீபாய் | புருஷன் தெரியவில்லை |
| வஸந்தி | பிரதாப் (மஹா ராஜாவே இப் பெண்ணைக் கன்னிகா தானம் செய்தவர்) |
| லலிதா | கிஸோர்ஸிங் (இந்தப் பெண்ணுக்கும் மஹா ராஜாவே கன்னிகாதானக் கர்த்தர்) |

போகட்டும். இத்துடனாவது இவருடைய காம வேட்கை தீர்ந்ததா? அப்பப்ப! இல்லவே இல்லை. ஜீஜ்.

மகியா, சாந்தகுமாரி என்ற மூன்று வேசிகளையும் வைத்துக் கொண்டார்!

● நூல் : லீலா விநோத சமஸ்தானங்கள் (1939). பக்கம், 56, 57, 58, 59. நூலாசிரியர் : வி. ரா.

## லக்கா

மீவாரநாட்டு ராணாவாகிய லக்கா ரானாவுக்கு விருத்தாப்பியம் வந்து விட்டபடியால், தனது மற்றப் பிள்ளைகளையும் பேரன்மார்களையும் தக்க ராஜ்ய பாரங்களில் அமர்த்தி, சண்டனுக்கு முடிசூட்ட இருக்கும்போது, இளவரசனுக்குப் பெண் கொடுப்பதாக மாண்டார நாட்டரசனிடமிருந்து மங்களகரமாய் ஒரு தேங்காய் வந்தது. சண்டன் அரண்மனை யில்லாமலிருந்ததால் வந்த தூதர்களை லக்கா தானே நேராக வரவேற்றுத் தக்கபடி உபசரித்து "இருங்கள், இளவரசன் சீக்கிரம் வந்து விடுவான். தாடி நரைத்த என்னைப் போன்ற கிழவனுக்காக அத் தேங்காய் கொண்டுவரப் படவில்லை என்று நம்புகிறேன்" என்று மீசை மீது கை போட்டவனாய் அவர்களைப் பார்த்துச் சொன்னான். சண்டன் திரும்பி வந்ததும் இதே வார்த்தைகள் உரைக்கப் படவே, தனது தகப்பன் ரஸத்திற்காகவாயினும் வினயமில்லாமல் தனக்காக என்று கேட்டதற்கு மனம் வருந்தினவனாய் அத் தேங்காயை ஒப்புக் கொள்ள மாட்டேனென்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டான்.

மகனோ ஹடம் பண்ணுகிறான். மாண்டார நாட்டரசனுக்கு அதைத் திருப்பி யனுப்புவதும் மரியாதை யன்று. ஆகையால் கிழவர் அத் தேங்காயைத் தானே எடுத்துக் கொண்டு தனக்காகவே அவ்வரனை ஒப்புக் கொண்டார்.

● நூல்: ராஜபுத்ர வீரர்கள் (1938). நூலாசிரியர்: T. லக்ஷ்மி நாராயண ஐயங்கார், B.A.

## வேங்கடதேவ மஹாராயன்

வேங்கடதேவ மஹாராயனுடைய புத்திரன் கிருஷ்ண தேவமஹாராயன் 30-வருஷம்; அவன் புத்திரன் வாசு தேவ மஹாராயன் 30-வருஷம்; அவன் புத்திரன் அஸ்வ தேவ மஹாராயன் 25-வருஷம்; அவன் புத்திரன் வேங்கட தேவ மஹாராயன் 28-வருஷம்; அவன் புத்திரன் வாசு தேவ மஹாராயன் 18-வருஷம்; அவன் புத்திரன் கிருஷ்ணதேவ மஹாராயன் 24-வருஷம்; அவன் புத்திரன் அஸ்ததேவ மஹாராயன் 28-வருஷம்; அவன் புத்திரன் 38 வருஷம் அவன் புத்திரன் வாசுதேவ மஹாராயன் 29-வருஷம்; இவ்விதமாக இராய வேலூரை ஆண்டு வந்தனர்கள். பின்பு அவன்சுதனாகிய வேங்கட தேவ மஹாராயன் 29-வருஷம் ஆண்டு வரும்போது நியமித்திருந்த இலக்கினத்தில் தன் மனைவிக்கு வீட்டு விலக்கம் நேரிட துன்பமுற்று தன் அரண்மனையில் தீபமிடுகிற ஓர்நாயகியைக் கூடிப்புணர்ந்த காலையில் அவள்கருப்பத்தில் ஓர் ஆண் பிள்ளை பிறந்து கிருஷ்ணதேவ மஹாராயனென்னும் பெயர்பூண்டு கல்வி கற்று பட்டாபிஷேக துரந்தரனாகி அரசாண்டு வருகையில் தனது வீட்டு வண்ணானுக்கோர் துருகமும், பாதரக்ஷை செய்யுஞ் சக்கிலிக்கோர் துருகமும் செய்துகொடுத்ததனால் இப்போதும் இவ்வூருக்குத் தென்றிசையில் வண்ணான் துருகமென்றும், சக்கிலி துருகமென்றும் விளங்க வேலூரை 15-வருஷம் செங்கோல் செலுத்தி வந்தனன்.

● நூல்: இராயவேலூர் என வழங்கும் வேலைமாநகர் சரிதை (1909) பக்கம் - 40, 41.

## ஜார் மன்னன்

இங்கிலாந்துக்கு ஒரு ஷேக்ஸ்பியர், இத்தாலிக்கு ஒரு தாந்தே, பிரான்சுக்கு ஒரு வால்டேர், ஜெர்மனிக்கு ஒரு கதே — அதுபோல் ரஷ்யாவுக்கு ஒரு புஷ்கின்.

இவன் தனது முப்பத்திரண்டாவது வயதில் 'கோன் சரோவா' என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். அவள் உலக அழகிகளுள் ஒருத்தி, அதனால் எல்லோருக்கும் அவள்மீது இச்சை ஏற்பட்டது.

ஜார் மன்னன் சாகசமாகப் புஷ்கின் மனைவியைத் தன் காமப் பத்தினியாக்கிக் கொண்டான். மன்னனுக்கும் அவளுக்கும் இந்த 'இரவு நேர நடத்தை' நிற்காமல் நீடித்துக் கொண்டே இருந்தது. அவள் செய்து வந்த இந்த ஆரம்ப அயோக்கியத்தனம் புஷ்கினுக்குத் தெரியாது.

● நூல்: எப்போதும் இருப்பவர்கள் (1952) பக்கம்-6, 7. நூலாசிரியர்: கவிஞர்சுரதா.

## ஜூலியஸ் ஸீசர் [கி.மு. 102 - கி.மு. 44]

அலெக்ஸாந்திரியாப் போருக்குப்பின் ஜூலியஸ் ஸீசர் எகிப்தின் அரசுரிமையைக் குளியோபாத்திராவிற்கும் அவளது தம்பிக்கும் வழங்க விரும்பி, அவ்விருவரையும் தன்னிடம் வரவழைத்து, "என்னுடைய ஆட்சிக்குட்பட்ட நாடாக நான் எகிப்தைக்கருதியபோதிலும், இந்நாட்டின் முடியரசின் உரிமையை உங்களிருவர்க்கும் அளித்து, உங்களைக் கூட்டாட்சி செய்யுமாறு ஆணையிடுகிறேன்." என்று சாற்றி ஸீஸர் அவ்விருவருக்கும் அரசுரிமையை வழங்கினான்.

ஜூலியஸ் ஸீசர் எகிப்தில் தங்கியபோது, அந் நாட்டு அரசியான குளியோபாத்திராவுடன் களித்துத்

வேடிக்கையாகவும் உல்லாசமாகவும் காலங்கழித்தான் என்று பழங்கால வரலாற்றில் கூறப்படுகின்றது.

● நூல்: வெற்றி வீரன் ஜூலியஸ் ஸீசர்(1955) பக்கம் - 57 நூலாசிரியர்: R. பத்மநாபன் B. A., B. T., (துணைத்தலைமையாசிரியர், முனிசிபல் உயர்நிலைப் பள்ளி, வேலூர்)

## ஷெர்ஷா

ஷெர்கான் ஷெர்ஷா என்று பட்டஞ்சூடி, டில்லியிலே 1540-ம் வருஷம் சிம்மாசனம் ஏறினான். ஐந்தே வருஷ காலந்தான் அரசாண்டான். ஷெர்ஷாவோ ஆளழகன், அதிசூரன், மகாவீரன் - அவன் புகழோ வட-இந்தியா வெங்கும் பரவி யிருந்தது. ஆதலின் அத்தகையானை மணக்க மங்கையர் சிலர் ஆசை வைத்தல் இயற்கை. அன்னவரிடம் திரவியமிருந்தால் போதும். அழகு, அன்பு, அறிவு, குணம் இவை உண்டா—என அவன் எண்ணிப் பாரான். அன்னாரை உடனே மணந்து கொள்வான்.

மல்லிகா எனும் மாதொருத்தி. அவள் ஒரு மாகாண கவர்னரின் மனைவி. இளையாள் மைந்தன் அரசை நச்சி அப்பனைக் கொன்றான். மல்லிகாவுக்கோ அம் மைந்தனைப் பழிவாங்கவேண்டுமென்று ஆவல். ஷெர்ஷா வுக்குத் தூது விடுத்தாள். அவளிடமோ நிரம்பப் பணம் உண்டு. அம் மாகாணமும் வளமை மிக்கது. அவள் கருத்தைப் பூர்த்தி செய்து, அவளை மனைவியாகக் கொண்டு களித்தான் ஷெர்ஷா.

பீஹார் வேந்தனது காமக் கிழத்தி ஒரு கட்டழகி. அவளிடம் செல்வம் திரண்டு கிடந்தது. அவளுக்கு ஒரு

மகன். அம் மகனுக்கு உற்ற துணைவனாக ஷெர்ஷா விளங்கினான். அம் மகன் மரித்ததுதான் தாமதம்· அவளைத் தேவியாக அடைந்தான். அவளது செல்வத்தையும் ஆண்டனுபவித்தான்.

அயோத்தியிலே நவாபாக இருந்தவனுக்கு ஒரு குமாரி. அவள் அழகற்றவள். ஆயினும் தலைமுறை தலைமுறையாக அயோத்தி நவாபின் அரண்மனையில் பொன்னும் மணியும் குவிந்து கிடந்தன. தந்தை இறந்ததும், அவள் பொன் மகளாகவே துலங்கினாள். அதனை யறிந்த ஷெர்ஷா அவளை மனையாளாகக் கொண்டான். அவள் பொக்கிஷத்தையும் பெற்றான்.

சம்பல் பிரதேச அதிபன் நஸாகான். அவன் காலமாகி விட்டான். அவன் மனையாள் தனியே நின்றாள். ஷெர்கான் மீது அவள் இச்சை கொண்டாள். இதனை அவன் அறியான். எனினும் அவளிடம் மிகுந்த பொன்னுண்டெனக் கேள்வியுற்றான். உடனே பரியைத் தட்டி விட்டான். சம்பல் பிரதேசஞ் சேர்ந்தான். அம் மாதினைக் கண்டான். இனிய சொல்லால் அவளை மயக்கினான். அவளும் கருதிய கணவன் கிட்டினானெனக் களித்தாள். முந்நூறு மணங்கு தங்கம் அவளிடமிருந்து கிடைத்தது.

களிஞ்சர் என்று ஒரு பிரதேசம். அது ஒரு ராஜ புத்திரன் ஆட்சிக்கு உட்பட்டது, அங்கே அழகின் அவதாரமான கணிகை யொருத்தியிருந்தாள். அவளிடம் தனம் குன்றுபோல் குவிந்திருந்தது.

அது கேட்டு ஷெர்கான்படை கொண்டு பாய்ந்தான். அப்பிரதேசத்தின் மீது. கணிகையர் குலத்தினாளாயினும் அவள் கற்பரசி. அவள் பொருட்டு அன்னியன்

படையுடன் வந்ததும் ராஜபுத்திர சமூகம் திரண்டெழுந்தது. கோட்டையோ பணியவில்லை. அதனைத் தகர்த்தான் ஷெர்கான். உள்ளே புகுந்து பார்த்தான். ஆடவர் அனைவரும் வீரசுவர்க்கம் புகுந்து விட்டனர். பெண்டிரோ அக்கினிக் கடவுளுக்கு அர்ப்பணமாகி விட்டனர். காதலி தென்படவில்லை. கடுந்தனமும் கிட்டவில்லை.

- நூல்; தேச ஜோதி (1946) பக்கம் - 56, 59, 60, 61. நூலாசிரியர்: எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்.




## கூத்தாள்

ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகட்கு முன்னர் தொண்டை நாட்டிலே செங்காட்டங் கோட்டத்தைச் சேர்ந்த துறையூரில் பொய்யாமொழிப் புலவர் பிறந்தார்.

ஒருகால் அப் புலவர் பெருமான் காளையார் கோயில் என வழங்கும் திருக்கானப்பேர் என்னுஞ் சிவத்தலத்துக்குச்சென்று, அங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அடிகளாரை வழிபட்டு மீளுங்கால் பெருமழை பெய்யக் **கூத்தாள்** என்னுந் தேவ மாது ஒருத்தி அகத்தை அடைந்தனர். ஆண்டு சிறிது நேரம் தங்கியிருந்த போது, அவளும் அவள் தமக்கையும் தாயும் பாட்டியும்

ஆகிய நால்வருங் குருடராய்க் கையால் தடவித் தடவிச் செல்வதை நோக்கி, மனங்குழைந்து, அந்நால்வருக்கும் கண் வருதல் வேண்டுமெனத் திருவுளங்கொண்டு,

'கூத்தாள் முகத்திரண்டு கூர்வேல்கள்; கூத்தாள்தன்
மூத்தாள் முகத்தில் முழுநீலம்- மூத்தாள்தன்
ஆத்தாள் முகத்தில் அரவிந்தம்; ஆத்தாள்தன்
ஆத்தாள் முகத்திலிரண் டம்பு'

என்றோர் அரும்பாட்டு இசைப்ப, அனைவரும் அழகு மிக்க ஒளி வீசும் விழிகளைப் பெற்றுக் கங்கு கரையற்ற இன்பமுடையவராய்ப் புலவர் பெருமானைப் போற்றி வழிபாடாற்றினர்.

பின் அங்குச் சின்னாள் வைகி, அத்தலத்தை விட்டு நீங்கிப் பல அறிய திருப்பதிகட்குச் சென்று வணங்கிச் சிறிதுகாலம் சென்றபின் கானப்பேருக்கு மீண்டனர். அங்குப் போந்ததும் தாம் முன்னர்க் கண் பெறப்பாடிய கணிகையர் செவ்வியை உணர விரும்பி, அவர் இருக்கையைத் தேடிச் சென்றனர். அவர்களோ கண் பெற்ற காரணத்தால் அழகு மிகப் பெருஞ் செல்வர் கண்களைக் கவர்ந்து, நன்னிதி பலவும் ஈட்டிச் செல்வத்திற் சிறந்திருந் தனர். அஃதுணர்ந்த உத்தமக் கவிஞர் அவரது பெரு வாழ்விற்கு உவந்து, அவரது மாளிகையிற் சென்று கதவைத் தட்டினர். அவர்கள் இவரை இன்னாரென அறிந்தும்,

"முந்திரிமேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும்".

என்னுந் திருவாக்கின்படி தம்மைத் தாமறியாமலும், கண்கொடுத்த தெய்வம் என அவரை மதியாமலும், கதவைத் திறவாது வாளாவிருந்தனர். அவர்தம் இறுமாப்பையும் நன்றியறியாக் கயமையையும் கண்டு, செந்தமிழ் வாணர் சினமீக் கூர்ந்து 'பழைய குருடி கதவைத்

திறடி' என்று கூறினர். கூறியவுடன் அந்நால்வருள் மிக்க இளையாளாகிய ஒருத்தியின் கண்கள் இரண்டும் பொட்டென அவிந்தன.

> ''வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
> சொல்லேர் உழவர் பகை''.

என்னும் புலவர் வாக்குப் பொய்ப்படுமோ? அப்போது அவளும் மற்றையோரும் புலவர் செந்தாமரைச் சேவடிகளில் அடியற்ற பனையென விழுந்து கைகட்டி வாய் பொத்தி, 'எங்குல தெய்வமே, அடிச்சிமார்கள் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். எமது அறியாமையால் யாம் பிழை செய்தலும் இயல்பே; அவற்றைப் பொறுத்தருளலும் தேவரீருக்கு இயல்பே,' என்று பலவாறு பன்னிப்பன்னி ஏத்தி நடுநடுங்கி அவர் அருளை எதிர்பார்த்தவண்ணம் நின்றனர். அருள்மிகுந்த நெஞ்சினராகிய அருந்தமிழ்ப் புலவர், அவர் செருக்கொழிந்து பிணம்போற் கிடத்தலைக் கண்டு இரங்கி, அகந்தையால் அவிந்த கண் மீண்டும் பெறும்படி அருள் புரிந்தார்.

● நூல் : தொண்டை நாட்டுக் கவிகள் (1948), பக்கம் 73, 79, 80. நூலாசிரியர்: மணி திருநாவுக்கரசு முதலியார்.

## மாதவி

பெரியகடலாற் சூழப்பட்ட உலக மதிக்கும்படி அந்தப் பெண்ணுக்கு அன்பாய்க் கண்ணகியென்னு மழகிய பெயரிட்டு, முன்னே தாங்கலாற்றில் பேசிக் கொண்டபடி சிறந்த நூலினெறிப்படி விவாகஞ் செய்வித்தார்கள். மேகம் போலக் கொடுக்குங்கையனாகிய கோவலன் அக்கண்ணகியை மணஞ்செய்தான்.

திருமணஞ்செய்துவருங் கல்யாணப் பந்தலிடத்து, தாசியின் தாயாகிய சித்திராவதியிடத்திற்போய் உனது

மகளை நடனஞ் செய்யச் செய்வாயென, அச்சித்திராவதியானவள் ''ஐயா என் மகள் மங்கைப் பருவமடைந்து புஷ்பவதியாகி ஒருவர் வீட்டிலும் நடித்ததில்லை. ஆதலால் அந்தப் பெண் மூங்கிலின் மேலேறி நடனஞ் செய்வாள். இதை அறிந்து கொள்ளுங்கோ'' ளென்றாள்.

அவள் தன் கழுத்திலணிந்த பொன்மாலையைச் சுழற்றி வீச அம்மாலையானது மனமகிழும்படி மணப்பதற்குரிய மாலையாக யார் கழுத்தில் விழுகின்றதோ அவர் அம்மாதவிக்குப் பொருள் முதலியவை தந்து சம்ரட்சணை செய்து வருங் கணவராகும்படி கிருபை செய்வீராகில் என் மகள் வந்து நடனஞ் செய்யத் தடையில்லையென்றாள்.

இவ்விதமாகச் சித்திராவதி சொல்ல, பூர்வசன்மத்தின் வினையால் வாணிபர் ஒப்புக்கொண்டமையால் மணப்பந்தலிடத்து மலைபோலும் பெருத்துக் குவிந்த தனங்களையு மிளமைப்பருவமுமுடைய அழகிய மாதவி நடனத்தைக் கண்டோர் நல்லது நல்லது என்று மகிழும்படி நடனஞ் செய்தாள். தெய்வ போகத்து அரம்பை நடனமுமிதற்கொவ்வாதென்றும், இந்த நடனத்தின் தன்மையை உரைப்பது அரிது அரிது என்றும் சொல்லினார்கள்.

நாட்டியஞ்செய்து பின்பு மூங்கிலொன்றைவைத்து மாதவியானவள் அதன் மேலேறி யாவருக்கும் இனிமையைத் தரும்படி வசனித்து இன்னிசையைப் பாடி, தன் கழுத்திலணிந்த ஆபரணமொன்றைக் கழற்றியெறிய அது அம்மணப்பந்தலில் அமர்ந்திருக்கும் கோவலனார் கழுத்தில் வந்து விழவே, அன்று முதல் பெருமையாகிய முலையையுடைய மாதவியோடுஞ் சுகித்து வாழ்ந்திருந்தார்.

**அங்கே அவளுடைய அன்பின் தன்மையைக் கண்டு அந்த வாணிபன் ஆசை கொண்டவளுக்கு வேண்டிய**

**அனைத்தையுந் தந்து மனைவி போலப் பாராட்டி ஆசை கொண்டிருந்தான். இப்படி நடந்த பதினான்கு வருடத்திற்குள் அவன் செல்வமெல்லாம் ஒழிந்துவிட்டமையால் அவனோடு பிணங்கி நீக்கினான்.**

- நூல் : வைசிய புராணம் மூலமும்-உரையும். (1874) சிலப்பதிகாரம் பெற்ற சருக்கம்— பக்கம் 230, 231, 232. நூலாசிரியர் : சூடாமணிப் புலவர். உரை: கோமளபுரம் இராசகோபால் பிள்ளை.

## தேவ தேவி

திருச்சினாப் பள்ளிக்கு மேற்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் உறையூர் என்ற ஒரு வைஷ்ணவ ஸ்தலமுண்டு. அதற்கு நிசுளாபுரியென்ற ஒரு பெயருமுண்டு. அதுதான் அந்தக் காலத்தில் சோழ நாட்டின் தலைநகராக விளங்கிற்று. அந்தக் காலத்தில் அரசாண்டு வந்த ஓர் அரசன் ஸ்த்ரீகளைக் கண்டு களிப்பதும், அவர்களுடைய சுகங்களில் ஈடுபட்டு அவர்களுக்கு ஏராளமாய்ப் பணம் கொடுப்பதுமாயிருந்தான். அந்த ஊருக்குப் பக்கத்தில் இரண்டு மைல் தூரத்தில் திருக்கரம்பனூர் என்றும் உத்தமர் கோயில் என்றும் பெயருடன் கூடின ஒரு வைஷ்ணவ ஸ்தலமுண்டு. அங்கே ஒருவரையும் ஈடு சொல்லக்கூடாத அழகுடன் கூடின ஸ்த்ரீ ஒருத்தி இருந்தாள். அவள்தான் தேவதேவி. தேவலோகத்திலுண்டான பெண்களுக்கெல்லாம் தேவியாக விளங்கக் கூடிய அழகுடன் கூடியதால் அவளுக்கு அந்தப்பெயர் உண்டாயிற்று.

அவள் அந்த அரசனிடம் போய் அவனைத் தன் வலைக்குள் சிக்கும்படி செய்து, அவனிடமிருந்து வேண்டிய பணத்தை சம்பாதித்துக் கொண்டு, மறுபடியும் ஊருக்குப் போனாள். இந்த நந்தவனத்தின் அழகைப்

பார்த்ததும் அவளுக்குஅந்த நந்தவனத்தின் புஷ்பங்களை அனுபவிப்பவனைத் தானும் அடைய வேண்டுமென்று மனசில் தீர்மானித்துக் கொண்டாள். பாத்தி கொத்திக் கொண்டிருந்த தொண்டரடிப் பொடி ஆழ்வார் முன்னிலையில் போய் தன்னாலான மட்டிலும் அவரை வசப் படுத்தப் பார்த்தாள். ஒன்றும் முடியவில்லை. அவளுடன் வந்த அவள் தமக்கை, அவர் பக்தர் என்றும் அவரைக் கெடுக்க முயலுவதில் ப்ரயோஜனமில்லை யென்றும், பலவாறு சொல்லியும் தங்கை கேட்கவில்லை. தங்கையை அவள் மனம்போல் விட்டு விட்டு, தோழிமார்களும் தமக்கையும் ஊர் போய் விட்டார்கள்.

இவள் ஆடை ஆபரணங்களைத் தமக்கையிடம் கொடுத்து அனுப்பி விட்டாள். உடனே ஒரு காவிப் புடவையைத் தறித்துக் கொண்டு மறுபடியும் அவர் முன்னிலையில் போய் விழுந்து விழுந்து நமஸ்காரஞ் செய்தாள். யார் என்று ஆழ்வார் கேட்க, அவள் பின் வருமாறு கபடமாய் பதில் சொன்னாள்.

''ஸ்வாமி! என் தாயார் ஒரு வேசி. முன் ஜன்மாவில் செய்த பாபத்தினால் அவளுக்கு நான் பெண்ணாகப் பிறந்தேன். வேசித் தொழிலைச் செய்ய எனக்கு மனமில்லையென்று என் தாயிடம் சொல்ல, அவள் என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டாள். நீர் செய்து வரும் செயல்களைக் கேட்டு உமக்கு ஊழியஞ் செய்ய வந்திருக்கிறேன். பாத்தி பிடிக்கிறேன். ஜலம் பாய்ச்சுகிறேன். களை பிடுங்குவேன். பூப் பறிப்பேன். மாலை கட்டுவேன். சொன்ன வேலையைச் செய்து உமக்கு அடிமையாய் இருக்க எனக்கு உத்தரவு வேண்டும்.''

இதை எல்லாம் நிஜம் என்று ஆழ்வார் எண்ணி அவளை அங்கேயே இருக்கச் சொன்னார். தான் சாப்பிட்ட மீதத்தை அவளுக்குக் கொடுக்க இருவரும் வேலையைச் செய்து வந்தார்கள். ஒருநாள் நல்ல மழை பெய்

தது. ஆழ்வார் ஒரு சிறு குடிசைக்குள் ஒதுங்கி நின்றார். தேவதேவியோ அந்த மழையைக்கூட கவனியாமல் நனைந்து கொண்டே இவர் இருக்கும் குடிசைக்குப் போனாள். இவருக்கு அவளிடத்தில் மிகவும் இரக்கம் தோன்றி தன் வேஷ்டியினால் அவளைத் துடைத்தார். தேவதேவி செய்த லீலைகளாலும் பாசாங்குகளாலும், இவர்களுக்கு ஸ்நேக ஸம்பந்தம் ஏற்பட்டு விட்டது. ஆழ்வாருக்கு உடனே அதில் ஞாபகம் சென்றது. ஈச்வரனுக்குச் செய்து வந்த ஊழியத்தை மறந்து விட்டார். தேவதேவியின் நிழல்போல அவளை ஆழ்வார் பின் தொடர்ந்து கொண்டே சென்றார். அவள் தான் நினைத்த கார்யம் ஆகிவிட்டதென்று எண்ணி, இவரை கவனியாமல் தன் வீட்டுக்குப் போய் இவரை உள்ளே வராதபடி வெளியில் துரத்தி விட்டாள்.

● நூல்: ஆழ்வார்கள் சரித்ரம் பக்கம்-95, 96, 97, 98.

## பத்மாவதி

அம்பாபாலியின் காலத்தில் உஜ்ஜயினியில் பத்மாவதி என்னும் விலைமாது ஒருத்தி இருந்தாள். பிம்பிசாரன் அவளுடன் ஓர் இரவு தங்கினான். என்ன காரணத்தாலோ, அவனால் அவளை உள்ளன்புடன் நேசிக்க முடியவில்லை. ஓர் இரவிலேயே அவளைக் கைவிட்டான். ஆனால் அவள் அவன் கொடுத்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டாள். தான் கருத்தரித்து விட்டதாகச் சாதித்தாள்; (ஏற்கெனவே அவள் இரண்டு மாதக் கர்ப்பிணி). அவன் அவளுக்கான செலவை ஏற்க வேண்டியதாயிற்று.

● இதழ் : மஞ்சரி, (ஜூலை-1953) கட்டுரையாளர் : அட்ஸா மில்வி.

# பூங்கோதை

நீர்வளம், நிலவளம் பொலிந்து விளங்கும் மதுரை மாநகரில், இற்றைக்கு இருநூற்றெழுபது வருடங்களுக்கு முன் பூங்கோதை யென்னுங் கணிகை ஒருத்தி இருந்தாள்.

இவள் கல்வியாலும் செல்வத்தாலும் அழகாலும் ஆடல் பாடல்களாலும் சிறந்தவள். இவள் செல்வம் முதலிய அனைத்தாலும் பல்லோரும் மதிக்கத்தக்க பக்குவமுடையவளாயிருந்தும், நீர்க்குமிழி போன்ற நிலையற்ற யௌவனத்தோடு கூடிய சரீரத்தை விற்று, வாழ்க்கையை விரும்பித் தேடும்பொருளில் நிறைவற்ற நெஞ்சுடையளா யிருந்தாள்.

இங்ஙனம் இவளுள்ளத்திற் குடி கொண்டிருந்த பொருளைக் குறித்த பேராசையால், தன் குலாசாரத்திற்கு அடாததும், சகல பழி பாவங்கட்கு ஏதுவாயுள்ளதும், எவர்களாலும் அருவருக்கத் தக்கதுமான செயற்பாலவல்லாத இழிதொழில்களைச் செய்ய குலத்தார் அவமதித்து அவளை விலக்கினர்.

இங்ஙனம் குலத்தாரா லவமதிக்கப்பட்டு விலக்கப்பட்ட பின்னும் பொருள் மேற்கொண்ட பேரவா அடங்காது, அன்னிய சமயத்தானாகிய (சீதக்காதி) என்பானோடு அவனூராகிய காயற் பட்டணத்துக்குப்போய், அவனுடன் சுகித்திருந்து பெருநிதிதேடி, அவ்வளவிலும் பொருளவா நீங்காது, தான் சம்பாதித்த திரவியங்களனைத்தையுந் திரட்டிக்கொண்டு தன்னாடாகிய மதுரைக்குப் புறப்பட்டு வரும் வழியில். கள்வர் பலர்கூடி அப்பொருள்களோடு அணிந்திருந்த இரத்தினாபராதி ஆடை இறுதியாயுள்ள அனைத்தையும் கவர்ந்துகொண்டு தங்கள் மனக்கருத்தையும் நிறைவேற்றிச் சென்றனர். செல்லவே, பூங்கோதையாள் மனங்கலங்கி, ஐயையோ! நான் சாதி இழந்து, சனமிழந்து, சமையமிழந்து, சம்பாதித்த தனமிழந்து தங்கம்போலப் பங்கமிலாச் சரீரமு

மழிந்து தெருவில் நின்று கதியற்றவளானேனே என்று அலறி தலைமோதி மார்பிலறைந்து நிலத்தில் விழுந்து,

தினங்கொடுக்குங் கொடையானே
 தென்காயற் பதியானே சீதக் காதி
இனங்கொடுத்த உடைமையல்லத்
 தாய்கொடுத்த உடைமையல்ல எளியாளெந்தன்
மனங்கொடுத்தும் இதழ்கொடுத்தும்
 அபிமானந் தனைக்கொடுத்தும் மருவி ரண்டு
தனங்கொடுத்த உடைமையெல்லாம்
 கள்ளர்கையிற் பறிகொடுத்துத் தவிக்கின்றேனே

என்று சொல்லி ஏக்கமுற்றிறந்தாள்.

- நூல் : உருத்திரகணிகையர் கதாசாரத் திரட்டு (1911), பக்கம்- 173, 174, 175. நூலாசிரியர் : க. அஞ்சுகம்.

## பொன்னி

பொன்னி—இவள் கம்பநாடரைத் தமக்கு அடிமையாக்குகிறேன் என்று அரசனிடம் சபதஞ் செய்த தாசி. இவள் கம்பரிடம் 'தாசி பொன்னிக்குக் கம்பனடிமை' யென எழுதிவாங்கி, அவர் அரசர் முன் அதற்கு வேறு பொருள் கூற ஏமாறியவள்.

- நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம்-743, நூலாசிரியர் : ஆ. சிங்கார வேலு முதலியார், (சென்னைப் பச்சை யப்பன் கலாசாலைத் தமிழ் உபாத்தி யாயர்).

## ஸாலவதி

ராஜக்கிருகத்தில் ஸாலவதி என்னும் ஓர் விலைமாது வசித்தாள். அவள் ஓர் இரவுக்கு நூறு 'தகபணம்' வசூலிப்பவள். பருவம் தொடங்கியவுடனே அவளுக்குக்


குழந்தை பிறந்தது. அவள் ஈவிரக்கம் இல்லாமல் அதைக் குப்பை மேட்டில் போடச் செய்தாள். அந்தச் சமயம் பிம்பிசாரனைப் பார்க்கப்போன அபயன், குளிரில் விறைத்துக்கொண்டு காக்கைகள் சூழக்கிடந்த அந்தப் பச்சிளங் குழந்தையைக் கண்டான்; எடுத்து வளர்த்தான். அந்தப் பாலகன், பின்னால் நாடு முழு வதும் புகழ்ந்த வைத்தியனானான். அவன்தான் ஜீவகன்.

● இதழ் : மஞ்சரி (ஜூலை-1953), கட்டுரை யாளர் : அட்ஸா மில்லி.

## விமலா

அம்பாபாலியின் காலத்திலேயே பின் பகுதியில் பிரசித்தி பெற்றவள் தாசி விமலா. இவள் ஏழைக் குடும் பத்தில் பிறந்தவளானாலும் செலவு செய்வதிலும், ஆடம் பர வாழ்க்கைநடத்துவதிலும்நிகரற்றவள். பலசாலிகள், மனத்தை அடக்கிய பிரம்மச்சாரிகள், உறுதியான நன் னடத்தை உள்ளவர்கள் ஆகிய எல்லாரையும் கெடுப் பதே இவளுடைய விரதம். அதனால் அரசர்களுக்காக வும், பெரிய அந்தஸ்து உள்ளவர்களுக்காகவும் தவங் கிடக்காமல் சாதாரண மனிதர்களையும் சற்றுப் பசை உள்ளவர்களையும் நாடுவாள்; தன் யௌவனம் முடியும் தறுவாயில் இவள் பௌத்த பிட்சு **போக்காயனரை** விரும் பினாள். அவரை வசப்படுத்த படாதபாடுபட்டபின், இவள் தானே ஒரு பிச்சுணி ஆகிவிட்டாள்.

● இதழ் : மஞ்சரி, (ஜூலை-1953) கட்டுரை யாளர் : அட்ஸா மில்லி.




## அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் மனைவி

வீரராகவ முதலியாரென்ற தொண்டை நாட்டு வேளாளத் தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் பிறவியிலேயே கண்ணை இழந்தவர். அவர் யாவரும் வியக்கும்படி கவிபாடும் திறமை அவருக்கு அமைந்திருந்தது. சைவ சமயத்திற் பற்றுடையவராதலின் பல பிரபந்தங்களை அவர் இயற்றினார்.

ஒரு நாள் காலையில் அவர் வெளியே புறப்படுகையில் நீராடுதற்காக வெந்நீர் வைத்திருக்கும்படி தம் மனைவியாரிடத்தில் சொல்லிவிட்டுப் போனார். சில நாழிகையளவில் வீட்டுக்குத் திரும்பி வந்தார்; வந்தவுடன் நீராட எண்ணினார், அவர் தேவியார் நீரைக்

கொணர்ந்து வைத்தனர். தொட்டுப் பார்க்கையில் அது சூடற்றதாக இருந்தது. "இது வெந்நீராக இல்லையே; தண்ணீராக இருக்கிறதே" என்று முதலியார் கூறினார். அது கேட்ட அவர் மனைவியார், "உங்களுடைய சம்பாத்தியத்துக்கு இந்த ஜலம் போதாதோ!" என்று சற்று இகழ்ச்சியுடன் சொன்னார். அவ்வுரை செவியிற் பட்டபோது அக்கவிஞரது உள்ளம் மிக வருந்தியது. "நம் கல்வியின் மதிப்பையறியாது அறிஞர்களால் மதிக்கப்படாத செல்வத்தை நினைத்தன்றோ இவள் நம்மை அவமதிக்கிறாள். இனி இங்கே இராமல் எங்கேனும் சென்று இதுகாறும் பெறாத பெருஞ் செல்வத்தைப் பெற்று வருவோம்" என்று அவர் உறுதி கொண்டார். ஆனால் தம்முடைய கோபத்தை ஒரு சிறிதும் வெளியிடாமல் மறுநாள் மாணாக்கன் ஒருவனை அழைத்துக் கொண்டு வெளியூர் போய் வருவதாக மனைவியாரிடம் சொல்லி வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

- நூல் : லாங்மன்ஸ் செய்யுள் வாசகத் திரட்டு, முதற்பாகம், (1937). பக்கம், 51, 52. ஆசிரியர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதையர், வித்துவான் R. விசுவநாதையர்.

## ஜார்ஜ் ஷீட்டின் மனைவி

நியூஜெர்ஸி என்ற நகரத்தில் மிஸ்டர் ஜார்ஜ் ஷீட் என்பவரின் மனைவி, தன் கணவர் தன் பிரியமில்லாமல், முத்தமிட்டாரென்று கோர்ட்டில் முறைப்பாடு செய்தாள். கோர்ட்டார் அவரை 25 பவுன் அபராதம் போட்டு, நல் நடத்தைக்கு ஜாமீன் வாங்கினார். அதோடு, அவள் பிரியத்தைச் சம்பாதித்தே முத்தமிட வேண்டுமென்றும் உத்தரவு செய்தார். அதன்மேல்

அவள், அவர்கணக்கில்லாத படிமுத்தமிட்டதாக முறைப்பாடு செய்தாள். கோர்ட்டார் ஒரு நாளைக்குப் பத்துத் தரம் அதாவது மத்தியானம் வரை 5 முத்தமும் இராச்சாப்பாட்டுவரை 5 முத்தமும் இடவேண்டுமென்று உத்தரவு கொடுத்தாராம். அவள் புருஷனும் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படிந்து கையெழுத்துப் போட்டாராம்.

● இதழ் : வித்தியாபாநு, விரோதிகிருது-ஆடி (1912), தொகுதி-3, பகுதி-4.

## அம்பர் நாட்டரசன் மனைவி

அம்பர் நாட்டு அரசனாகிய பேர் பெற்ற ஜயசிங் என்பவன் கோட்டா நாட்டரசன் மகளை மணம் புரிந்து கொண்டான். ஒருநாள் ஜயசிங் தன் மனைவியுடன் தனித்திருந்த சமயத்தில் அவளது உடையைப் பார்த்து, "இது என்ன உங்கள் வீட்டார் தங்கள் உடையை இவ்வளவு தூரம் பெருகவிட்டிருக்கின்றார்கள். எங்கள் மாதரது உடைகள் எவ்வளவு கச்சிதமாயிருக்கின்றன. பார்" என்று விளையாட்டாகச் சொல்லிக் கொண்டு ஒரு கத்திரிக்கோலைக் கையிலெடுத்து " ஏன் இதைச் சரியாகக் கத்தரித்து விடக்கூடாது?" என்றான். தனது பிறந்த வீட்டாரை இங்ஙனம் ஏளனம் செய்வதைச் சகியாதவளாய் உடனே அவள்தன் நாயகனுடைய வாளைப் பிடுங்கிக் கொண்டு, "இனி எங்களை இம்மாதிரியாக அவமதித்தால் நீங்கள் அக்கத்திரிக்கோலை உபயோகப் படுத்துவதைவிட அதிக சாமர்த்தியத்துடன் கோட்டா நாட்டரசன் மகள் இவ்வாளை உபயோகப்படுத்துவாள்.

நடந்த விவாக சம்பந்தங்களெல்லாம் நிஷேதிக்கப்படும்'' என்றான்.

● நூல் : ராஜபுத்ர வீரர்கள் (1938). பக்கம் 27-28. நூலாசிரியர்: T. லஷ்மி நாராயண ஐயங்கார். B. A.

## அனங்க லேகை

பாலாதித்தியனுக்கு அனங்க லேகை என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் சிறுமியாயிருக்கையில் அவள் ஜாதகத்தை ஆராய்ந்த சோதிடர்கள் 'இப்பெண் தனது வாழ்க்கையில் மிக்க சுகத்தைப் பெறுவாள். இவளை மணக்கும் கணவன் காஷ்மீர தேசத்திற்கு அரசனாவான்' என்றுரைத்தார்கள்.

நாளடைவில் பெண்ணுக்கு மணம் செய்விக்க வேண்டிய பருவம் வந்தது. அரசன் தன்னிடம் குதிரை லாயத்திற்கு எஜமானனாக வேலைப் பார்த்து வந்த துர்லப வர்த்தனன் என்பவனுக்கு தன் பெண்ணை மணம் செய்து கொடுத்தான். அனங்க லேகையை மணந்த சிறிது காலத்திற்குள் துர்லப வர்த்தனன் மிக்க துயரத்திற்காளாயினன். அனங்க லேகை தன் கணவனைக் கொஞ்சமேனும் மதிக்கவேயில்லை.

''நமக்கு வாய்த்திருக்கும் கணவன் நம் தகப்பனாரிடம் வேலை பார்த்து வந்தவன். ஒருவிதமான செல்வமும் செல்வாக்குமில்லாதவன். நாமோ, அரசருடைய மகள்; அரசரிடம் மிகவும் செல்வாக்குப் பொருந்தியவள். மணத்திற்கு முன் தகப்பனாருடன் செல்லுங்கால், நம் கணவன் நம்மைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்து தலைவணங்கி வந்தனம் செய்தவன். இவன் நம்முடைய

அழகுக்கும் நாகரிகத்துக்கும் பெருமைக்கும் சிறிதேனும் தகுந்தவனல்லன். இவனுடன் வாழ்ந்து நாம் என்ன இன்பம் பெறக்கூடும்? ஆகையால் இவனைச் சிறிதும் பொருட்படுத்தாமல், நம்மிஷ்டப்படியே நாம் இருக்கலாம். இவன் நம்மை என்ன சொல்ல முடியும்?'' என்று எண்ணித் தன் மனம் போனபடி நடந்து வந்தாள். கணவனை உலர்ந்த புல்லுக்குந் தாழ்ந்தவனாக நினைக்கலானாள்.

● நூல்: இராஜ தரங்கிணி பக்கம் 41, 42.

## ஆப்ரகாம் லிங்கனின் மனைவி

ஆப்ரகாம்லிங்கன் அமெரிக்காவின் சுதந்திரத்தை நிலை நாட்டிய மேதை-வீரத்தியாகியும் ஆவார். அவருக்கு வாய்த்த மனைவியோ ஆத்திரக்காரி! அறுபது நாழிகையிலும் அவரை தொந்தரவு செய்தவண்ணமிருப்பாள். அவரது வேலைகள் அனைத்துக்கும் அவள் இழைத்த இடையூறுகளும் தீங்குகளும் எண்ணிலடங்கா. ஒரு முறை அவர்களுக்குள் நேர்ந்த வாக்கு வாதத்தின் பயனாக, அந்த அம்மாள் ஆபிரகாம்லிங்கனின் முகத்திலே ஒரு கோப்பை சூடான காப்பியைக் கொட்டிவிட்டாளாம்! இந்தத் தம்பதிகளின் இல்வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்? உலக மேதைக்கு வீட்டிலே இந்த வரவேற்பா?

● இதழ்—அன்னை, (1959)

## இராம பாயி

இராமாபாயி—இவள் காசியிலிருந்த சந்தராசன் மகள். அரிபக்தியும் பாகவத பக்தியும் கொண்டவள். இவளை மணந்தவன் புலால் உண்பவன். அவன் ஒருநாள்

அரிதினத்தில், ஓர் ஆட்டைக்கொலை செய்து சமைக்கும் படி கூற, இவள் மறுத்துவிட்டாளாம். தன் குழந்தைக்கு விஷங்கொடுத்துக் கொன்றுவிட்டாளாம்.

- நூல்: அபிதான சிந்தாமணி (1910). பக்கம் 121. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார்.

## சரவணப் பெருமாளையரின் மனைவியர்

திருத்தணிகை கந்தப்பையர் திருத்தணிகையில் வாழ்ந்திருந்தார். இவர் வீரசைவர். இவர்க்கு இரண்டு மனைவியர் உண்டு. இவர்களுக்குப் பிள்ளைப் பேறில்லாமையால் திருத்தணி முருகனை வேண்டிக் கொண்டனர். பிள்ளைப்பேறுண்டாகவில்லை. பிறகு இவ்விரு மனைவியரும் திருப்பதிப் பெருமாளை வேண்டிக்கொண்டனர். பிறகு இவர்களுக்குப் பிள்ளைப் பேறுண்டாயிற்று. பிள்ளைகளுக்குப் பெயரிடும் போது தணிகைமலை முருகன் பெயரைச் சூட்டக் கந்தப்பையர் விரும்பினார். ஆனால், மனைவியர் அதற்கு இணங்கவில்லை. திருமால் திருவருளால் பிறந்த பிள்ளைகள் ஆதலால் பெருமாள் பெயரைச் சூட்ட வேண்டும் என்று பிடிவாதம் செய்தார்கள். வீரசைவராகிய கந்தப்பையர் என்னசெய்வதென்று சிந்தித்தார்.

மனைவியரையும் திருப்திப் படுத்தித் தமது சைவக் கொள்கையையும் நிலை நிறுத்தி அப்பிள்ளைகளுக்குச் சரவணப்பெருமாள், விசாகப் பெருமாள் என்று பெயரிட்டார். சரவணன், விசாகன் என்பன முருகனுடைய பெயர்கள். பெருமாள் என்பது சிறப்பாகத் திருமாலுக்குரிய பெயர். ஆனால், அப்பெயர் முருகனுக்கும் வழங்குவது உண்டு. பெருமாள் என்னும் பெயரைச் சூட்டிய படியால் மனைவியர் மகிழ்ச்சியடைந்தார்

கள். முருகன் பெயரைச் சூட்டியபடியால் கந்தப்பையர் மகிழ்ச்சியடைந்தார்.

● நூல்: பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (1962) பக்கம் - 273, 174. நூலாசிரியர் : மயிலை, சீனிவேங்கடசாமி

## சீதாதேவி

பித்தாபுரம் மகாராஜா மிகவும் நல்லவர். முற்போக்குக் கொள்கையுடையவர், மக்களிடம் நன்மதிப்புப் பெற்றவர். அரசியலில் தீவிரபற்றுடையவர். 1937—ஆம் ஆண்டில் தமிழக அரசியலில் பெரும் பங்கு கொண்டவர். காங்கிரசின் முன்னேற்றப் போக்கு போதாதென்று கருதிய அவர் **'மக்கள் கட்சி'** என்ற பெயரால் ஒரு கட்சியை ஏற்படுத்தினார்.

ராணி சீதாதேவி, அக்காலத்தில் புகழ்பெற்ற சமஸ்தானாதிபதியாக விளங்கிய பித்தாபுரம் மகாராஜாவின் புதல்வி.

சீதாதேவி எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகும் இனிய குணவதி, அதே சமயத்தில் 'சோஷியல்' நாகரிகம்' என்ற பெயரால் ஆண்களைப்போல் சுருட்டுக் குடிக்கும் பழக்கத்தையும் பெற்றிருந்தாள். பலர் கூடியிருக்கும் பொது இடங்களில் கூட கூசாமல் தொடர்ந்து பல சுருட்டுகளைப் புகைத்துத் தள்ளும் அதிசய நாகரிக மங்கையாக அவள் வளர்ந்திருந்தாள்.

இந்நிலையில் அவளுக்கும் இன்னொரு குட்டி ஜமீன்தாரின் மகனுக்கும் திருமணம் நடந்தது. அவனோ ஒரு அப்பாவி, கடவுள்பக்திமிக்கவன். மனைவியுடன் ஏதாவது பேச வேண்டுமென்றால் கூட அவளிடம்

அனுமதி கேட்டுக் கொண்டுதான் பேசுவான். சீதாதேவிக்கு அவனைக் கட்டோடு பிடிக்கவில்லை. எனவே எந்நேரமும் குதிரைப்பந்தய மைதானமே கதி என்று கிடந்தாள்.

● இதழ்: பாரதம் 10-3-1963

## டால்ஸ்டாயின் மனைவி—ஸோன்யா

ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய் உலகப் பிரசித்தி பெற்ற இலக்கிய சிருட்டி கர்த்தா என்பது எல்லோரும் அறிந்ததுதான். அவர் குடும்ப வாழ்க்கை எவ்வளவு துயர் மிகுந்திருந்தது தெரியுமா? சில போக்கிரிகளிடம் அவர்பட்ட தொல்லைகள் போதாதென்று தனது மனைவியிடமும் பட்டபாடு சொல்லமுடியாது!

டால்ஸ்டாய் எளிய வாழ்க்கைப் பிரியர். அவர் மனைவியோ ஆடம்பர வாழ்க்கையில் அதிகப் பற்றுடையவள். அது மட்டுமா? வெறும் தொண தொணப்புக் காரியும் கூட.

வில்லம்புகள் போலிருக்கும் அவள் சொல்லம்புகள் எல்லாம். டால்ஸ்டாயை அபினியைத் தின்றோ அல்லது கிணற்றில் விழுந்தோ உயிரை மாய்த்துக் கொள்ளச் சொன்ன உத்தமி அவள்! ஒருநாள் அவளது தொந்திரவையும் கோபக்கணையையும் பொறுக்க முடியாமல் டால்ஸ்டாய் வீட்டை விட்டு வெளியேறினார்.

அப்பொழுது கடும்பனிக்காலம். பத்து நாட்களாகியும் அவர் வீடு திரும்பவில்லை. அவர் மனைவி அதற்காகச் சிறிதும் கவலைப்படவில்லை.

● இதழ்—அன்னை, 1959.

## துய்ப்ளேக்ஸின் மனைவி

அக்காலத்தில் புதுச்சேரிக்குக் கவர்னராயிருந்த துய்ப்ளேக்ஸ் அரசாங்க அதிகாரியாயிருந்தும், புதுச்சேரிக் குடிமக்கள் ஆனந்த ரங்கப் பிள்ளையையே தங்களை ஆள்பவராகக் கருதி வந்தார்கள். அதையறிந்து துய்ப்ளேக்ஸ், ஆனந்த ரங்கப் பிள்ளையை இந்திய மக்களின் தலைவராக நியமனம் செய்து விட்டார். ஆனந்த ரங்கப்பிள்ளை துய்ப்ளேக்ஸிடத்தில் எவ்வளவு அன்பும், நட்புங் கொண்டிருந்தாரோ, அவ்வளவு துய்ப்ளேக்ஸின் மனைவியார்பால் அவர் வெறுப்புக் கொண்டிருந்தார். துய்ப்ளேக்ஸ் மனைவியாரின் குணம் அவருக்கு ஒரு சிறிதும் பிடிக்கவில்லை, பல செயல்கள், முக்கியமாக அரசியல் சம்பந்தப்பட்டவை அவ்வம்மையாரால் கேடுற்றனவென்பது தெரிய வருகிறது. துய்ப்ளேக்ஸ் தம் மனைவியாரின் தீக்குணத்திற்கஞ்சி நடக்க வேண்டியிருந்தது.

"துய்ப்ளேக்ஸ் தம் மனைவியார் முன் மூக்குக் கயிற்றுக்கடங்கிய காளை போல அமைதியாகப் பேசுவார்" என்று ஆனந்தரங்கப் பிள்ளை தம் குறிப்புகளில் ஓரிடத்தில் எழுதியிருக்கிறார்.

- நூல்: ஆனந்தரங்கப் பிள்ளை (1941) பக்கம்-3, 9, 81 நூலாசிரியர்: ரா. தேசிக பிள்ளை, பி, ஏ; பி. எல், புதுச்சேரி.

## ராணி ஓலாஜா

ஓலாஜா இராணியாருக்கும் அவரது கணவனாகிய **பங்கெல்** என்ற தேசத்தின் ராஜாவுக்கும் ஏற்பட்டிருந்த சில மனஸ்தாபங்களால் ஒருவரையொருவர் சந்திக்காமலிருந்தது மன்றி அந்த ராஜாவால் விவாக சமயத்தில் அளிக்கப்பட்ட ஆபரணங்களும் அவரால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. அதைக்கண்ட ராஜா கோபங்கொண்டு

தமது மனைவியாகிய ஓலாஜா இராணியை ஒடுக்க வேண்டி போர்த்துகீஸாரின் உதவியைக் கோரினார். அக்கணவனது அறிவீனம் என்னே! அம்மாது வெங்கடப்ப நாய்க்கனின் உதவியைக் கோரினாள். இருதரத்தாரும் போர்புரிய முடிவில் பங்கெல் ராஜா முறியுண்டார். அவரது ராஜ்யத்தை வெங்கடப்ப நாய்க்கன் பிடுங்கிக் கொண்டான், ஆனால் இராணியாருடைய தேசத்திலும் சிலவற்றைப் பிடுங்கிக்கொண்டான். இதனால் அவமானம் இராணியாருக்கு உண்டாயிற்று.

● *நூல்: நமது பரதகண்டம் (1926) பக்கம் 161. நூலாசிரியர்: வை. சூரியநாராயண சாஸ்திரி M. A. L. T.*

## நெப்போலியன் மனைவி கௌண்டஸ் யுஜின்

மகாமேதை நெப்போலியனின் மனைவி கௌண்டஸ் யுஜின் எப்படிப் பட்டவள் தெரியுமா? படாடோபவாழ்க்கையில் பிரியம் மிகக் கொண்டவள். பேருக்கும் புகழுக்கும் பேராசைப் பட்டவள், ஆனால், நெப்போலியனோ அதற்கு நேர்மாறானவன். எளிய வாழ்க்கை அவனது ஒரே லட்சியம். பேரும் புகழும் அவனுக்குச் சிறுபுழுவுக்குச் சமானம். எனினும் எடுத்த காரியத்தில் வெற்றி காண்பதையே குறியாகக் கொண்டவன்.

யுஜின் அவன் அலுவல்களில் எல்லாம் குறுக்கிட்டு அவற்றை அவன் நிறைவேற்ற முடியாதபடி பல விதத்திலும் தொந்தரவு கொடுத்துக்கொண்டே வந்தாள். எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டிதான்!

● இதழ்—அன்னை, 1959.

## மகாகவி மில்டனின் மனைவி மேரி பவல்

மில்டன் என்னும் மகாகவியும் தனது மனைவியிடம் மிகத்தொல்லைப் பட்டாராம். அவர் மனைவி இன்ப வாழ்க்கையில் இச்சை மிகுந்தவள். அதிரூபவதி. நல்ல யுவதியும்கூட. மில்டன்அவளது இளமைக்கு அடிமையாக இருந்து வந்தார். ஆனால் அவளது கடும் சொற்களைக் கேட்டு நடுநடுங்குவாராம்! ஒருநாள் மில்டனின் நண்பர் ஒருவர் அவரைக் காண வந்திருந்தார். அவர் மில்டனின் மனைவியைப் பார்த்து விட்டு தனது நண்பனிடம் (மில்டனிடம்) ''நண்பரே! உமது மனைவி மலர்ந்த ரோஜாவைப் போன்று இருக்கிறாள்'' என்று கூறினாராம்.

அதற்கு மில்டன் ''நண்பா! நானோ குருடன். அழகு மிகுந்த அந்த ரோஜாவைக் கண்டு களிப்பதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை! ஆனால், அதன் முட்கள் தினமும் என்னைக் குத்துகின்றன! அந்த வேதனையைத் தான் சிறிதும் பொறுக்க முடியவில்லை'' என்று பதில் அளித்தாராம்.

● இதழ்—அன்னை, 1959.

## மகான்ஷைகு சாஅதியின் மனைவி

சாஅதியின் குடும்ப வாழ்க்கைபற்றிப்பரிபூரணமான விவரங்கள் கிடைக்கவில்லை. நாற்பது வயதுக்கு முன்னர் அவர் மணஞ் செய்துகொண்டாரா, அல்லது அதுவரை லட்சியமற்ற நாடோடியாக ஊர் சுற்றிப் பார்க்கும் கவனத்தில் இதுபற்றி நினைக்கவே இல்லையா என்பது தெரியவில்லை. தனது பிற்காலத்தில் அவர் அரேபியாவில் ஒரு தடவை மணம் செய்துகொண்டதாகவும், அந்த

மனைவிக்குப் பிறந்த புத்திரன் காலமாகிவிட்டதாகவும் சாஅதி எழுதிய இரங்கற்பா ஒன்றிலிருந்து தெரியவருகிறது. இந்த மணத்துக்கு முன்பு அவருடைய நாற்பதாவது வயதுக்குப் பின்னர் அவர் சுற்றுப்பிரயாணம் செய்த சமயம் ஒரு தடவை திருமணம் புரிந்து, ஆற்றொணாத் துன்பத்தை அனுபவித்திருக்கிறார்.

திருமணம் நடைபெற்ற சில நாட்களில் சாஅதியின் மனைவி தன் சொரூபத்தைக் காட்டலானாள், தன் திரையைக் கிழித்தெறிந்தாள்! எடுத்ததற்கெல்லாம் சாஅதியைத் திட்டலானாள். சாஅதி மகிழ்ச்சியையே மறந்தவரானார். "சாஅதி சொல்கிறார். "நரகமும் சுவர்க்கமும் வீட்டில்தான் இருக்கின்றன. நல்லவனுக்குத் தீய மனைவி கிடைத்தால் அவன் இவ்வுலகிலேயே நரகத்தில்தான் இருப்பான்" என்று.

அவள் எப்போதுமே அவரை ஏளனமாகவே பேசுவது வழக்கமாகிவிட்டது. இதைச் சாஅதியால் சகிக்கவே முடியவில்லை. துடுக்கும் அஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதர்! அரசாங்கச் சட்டங்களையெல்லாம் துச்சமாக மதித்தவர் கேவலம், ஒரு பெண்பிள்ளையிடம் வசமாக அகப்பட்டுக்கொண்டு தமது இதயத்திலிருந்து இரத்தம் சொட்டவிட்டுக் கொண்டிருந்தார்.

- நூல்: மகான் ஷைகு சாஅதி (1956) பக்கம் 41, 42, நூலாசிரியர்: ஆர். பி. எம். கனி பி. ஏ. பி. எல்.

## மூன்றாவது முராத்தில் மனைவி

இரண்டாவது ஸலீமுக்குப்பின் 1574-இல் கலீபாவாக வந்தார் மூன்றாவது முராத் ஆவார். இரண்டாவது ஸலீமுக்கு 6 குமாரர்கள் இருந்தும், அவர்களுள் வீரராக இருந்த முராத் என்பவரே பட்டத்துக்கு வந்தார்.

இவர் வெனீஷிய அடிமைப் பெண் ஒருத்தியின் அழகில் ஈடுபட்டு, அவளை மணந்தார். அவள் முஸ்லிமானபின் ஸபிய்யா என்ற பெயருடன் விளங்கினாள். *ஸபிய்யா தன் கணவரைத் தன் விருப்பத்திற் கிணங்க நடத்தி வந்தாள். முராத் அவள் கருத்திற்கு மாறாக நடப்பதே கிடையாது. முராத் ஆட்சியில் இந்த ஸுல்தானாவின் அபிமானம் பெற்றவர்கள்தாம் உயர் பதவிகளை அடைய முடிந்தது. இதனால் நாட்டு நிர்வாகம் சீர்கேடடையத் துவங்கியது.

- நூல்: வீரத் துருக்கி வல்லரசு ( ) பக்கம் - 31
நூலாசிரியர்: பு. செல்வராஜ்(உதவிஆசிரியர் "தாருல் இஸ்லாம்")

* துருக்கியில் இப் பெண்மணி சுல்தானா வலீதா என்ற பெயருடன் விளங்கினாள்.

## ராஜபுத்ரன் மனைவி

முன்னொரு காலத்தில் மீவார நாட்டு ராணா ஒருவர் தமது மகளை ஓர் அந்நிய நாட்டு ராஜபுத்ரனுக்கு மணம் புரிவித்து அவளைத் தமக்குட்பட்ட ஸாத்ரி ஜில்லாவின் ஜாகீருக்குத் தலைவனாக்கினார். ரானாவின் மகள் தனது புருஷனுடைய குறைந்த அந்தஸ்தைப் பற்றி அவளைச் சட்டைபண்ணாதிருந்தாள்.

ஒரு நாள் அவன் தனது மனைவியைப் பார்த்து, "ரானாவத்ஜீ கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா" என்று சொல்ல, அவள், "நாலு அரசர்களுக்கு அரசான ரானாவின் மகள் கேவலம் ஸாத்ரி ஜில்லாத் தலைவனுக்குத் தண்ணீர் தூக்கிவர முடியாது" என்று உதாசீனமாய்ப் பதிலளித்தாள். "நல்லது, எனக்குப் பிரயோஜனம் இல்லாமல் நீ என் வீட்டில் இருக்கவேண்டிய அவசியமில்லை. உன் தகப்பன் வீட்டிற்கே போகலாம்" என்று சொல்லி

விட்டு, உடனே அத்தலைவன் ஒரு தூதன் வழியாய் ரானவுக்கு நடந்ததையெல்லாம் சொல்லியனுப்பினான். அவளும் அத்தூதனோடேயே தன் தகப்பன் வீட்டிற்குப் போய் விட்டாள்.

● நூல்: ராஜபுத்ர வீரர்கள் (1938) பக்கம்-26
நூலாசிரியர்: T. லக்ஷ்மிநாராயணஐயங்கார்.

## வேதநாயக சாஸ்திரியாரின் மனைவி மிக்கேல் முத்தம்மாள்

வேத நாயகம் என்ற பெயரில் நல்லிசைப் புலவர் மூவர் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் மூவருமே தமிழிசையால் இறைவனைப் பாடித் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்துப் புகழ் பெற்றவர்கள். அவர்களுள் ஒருவர் தமிழுலகம் நன்கு அறிந்த மாயூரம் வேதநாயகம் என்பவராவர். மற்றொருவர் மறைத்திருவாளர் சேர்வை வேதநாயகம் என்பவராவர். மற்றுமொரு வேதநாயகம்ஆண்டு 1774இல் திருநெல்வேலியில் பிறந்து, பின்னர் தஞ்சையில் வாழ்ந்து தமிழ் பாடிய வித்தகராவர். வேதநாயகம் சாஸ்திரியார் என்று இன்றளவும் ஆயிரக்கணக்கான அன்பர்களால் நினைந்து போற்றப்படுகிற பாவலர்இவர்.பலப்பலகீர்த்தனைகளையும்கீதங்களையும் வர்ணங்களையும் உருவாக்கிப் பொதுவாகத் தமிழுலகிற்கும், சிறப்பாகக் கிறித்து நெறித் திருச் சபைக்கும் வழங்கியிருக்கிற இவர், நூற்றிருபதற்கும் மேலான எண்ணிக்கையுள்ள சீரிய கவிதை நூல்களைப் படைத்த பெரும் புலவராவர்.

முதல் மனைவியாரின் மரணத்திற்குப் பின்னர் இரண்டாம் மனைவியாராக வாய்த்த மிக்கேல் முத்தம்மாள் இக் கவிராயருடைய நெஞ்சில் முள்ளாக மாறினார். கல்வியில் தேர்ச்சியுற்றிருந்த அந்த அம்மையார் அவரை

விட்டுத் தாயகம் சென்று விட்டார். வேத நாயகர் வேதனையுற்று, பல முறை முயன்றும் அந்த அம்மையார். திரும்பி வரவில்லை. பாவலர் என்ன செய்வார்

"எண்ணறக் கற்றும் எழுத்தறப் படித்தும்
பெண்புத்தி பின்புத்தியே"

என்று பாட்டெழுதி வருந்தினார். வேறு என்ன செய்வார்?

● நூல்: தஞ்சை வேதநாயகர் தமிழ்விருந்து (1975) நூலாசிரியர்: பொன்னு ஆ. சத்திய சாட்சி பக்கம்- 1,38 சென்னைக் கிறித்தவக் கல்லூரி)

## ஸாந்திப்பே

சாக்ரட்டீஸ் கி.மு. 469-இல் பிறந்தவர். அவரது பிதா ஸோப்ரானிஸ்கஸ் (Sophroniscus) என்ற ஒரு சிற்பி. அவர் தாய் பானரீட் (Phaenarete) என்ற ஒரு மருத்துவச்சி. ஸாக்ரட்டீஸ் இளமைப் பருவத்திலேயே தமது குல வித்தையிற் கை தேர்ந்து பல சிலைகளைச் செதுக்கினார். அவற்றில் மூன்று பிற்காலத்தில் வெகு நாள் வரை இவருடைய வேலைப்பாடென்று **ஆதன்ஸ்** காட்சிச்சாலையில் (Acropolis) நிறுத்தப்பட்டிருந்தன. ஸாந்திப்பே (Xanthippe) என்ற ஒரு பெண்ணை அவர் மணந்து மூன்று ஆண் மக்களைப் பெற்றார். இவளை அவர் மணந்த வருஷம் நமக்குத் தெரியாது.

இவள் மிகவும் கொடியவள்; பிடாரி: கணவனையும் குழந்தைகளையும் கடிந்து பேசுவாள்; திட்டுவாள்; தினமும் வீடு அமர்க்களம்போல் விளங்கும். வெடித்த சொல்லை வேண்டும் போதெல்லாம் அங்குக் கேட்கலாம். தனது துர்க்குணங்களால் மிகவும் பொல்லாதவளென்று பேர் வாங்கின அவள் இழைக்கும் கொடுமைகளையெல்

லாம் அவர் அதிகப் பொறுமையுடன் சகித்து வந்தார். ஒரு நாள் தம் மனைவி கூறும் தீ மொழிகளைப் பொறுக்கக்கூடாமல் அவர் தமது வீட்டை விட்டு வெளியேறி, வாயிற்படியில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தாரெனவும், கோபாக்கினியால் தபிக்கப்பட்ட அவரது மனைவி மேல்மாடி சென்று அசுத்த நீர் நிறைந்த பாண்டத்தை எடுத்து அவரது தலைமேல் கவிழ்த்து விட்டாளெனவும், பாவம்! ஸாக்ரட்டீஸ் ஒன்றுஞ் செய்யத் தோன்றாமல் சிறிது திகைப்படைந்து, பின்னர் புன்னகையுடன், 'முன்னே இடியிடித்தது; இப்போது மழை பெய்தது!' என்று சொல்லிக் கொண்டே வீட்டை விட்டுப் போய் விட்டாரெனவும் கூறுவர். இன்னும் அவள் தனது குழந்தைகளையும் கொடுமையாக நடத்தி வந்தாளென்றுங் கூறுவர்.

● *நூல்: ஸாக்ரட்டீஸ் சரித்திரம் (1919) (இரண்டாம் பதிப்பு) பக்கம் - 5, 6, நூலாசிரியர்: R. ரெங்காசாரியர், எம்.ஏ; எல்.டி; (மதனப்பள்ளிக் காலேஜ் ஆசிரியர்)*

## சந்தனு மகாராஜனின் மனைவி

பிரதீபனுடைய இளையமகனாகிய சந்தனு மகாராசன் வேட்டைக்குச் சென்று தாக சாந்திக்காகக் கங்கையை அணுகி வருகையில் ஒரு மரத்தடியில் அழகிய பெண் ஒருத்தியைக் கண்டு "நீ தனியே வந்த காரணமென்னவென்று வினவ, சாபத்தினால் இவ்விடம் வந்திருக்கிறேனென்றாள். சந்தனு அவளைக் கலியாணஞ் செய்ய விரும்பியபோது அவள் "தன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளைக் கொன்றுவிடுவேன். அதற்கு நீ தடை செய்யேனென்று உறுதிசொன்னால், உன்னைக் கூடுகிறே" னென்றாள். காமவெறி கொண்ட ராசன் அதற்குடன்பட்டு அவளை கூடி வாழுங்கால், அவள் ஒரு புத்தி

ரனைப் பெற்றுச் சலத்தில் எறிந்துவிட்டாள். இவ்வாறு ஏழு புத்திரர் போக எட்டாவது பிள்ளையைப்பெறுகிற தருணத்தில் இந்த ஒன்றை மாத்திரம் கொல்லாதிருக்க ராஜன் பிரார்த்தித்தான். நீ என் கருத்துக்குக் கெடுதி செய்தபடியால் உன்னைவிட்டு நீங்குவேனென்று அவள் வெளிப்பட்ட உடனே, சந்தனு மிகவும் ஆற்றாமைப் பட்டு மறித்தான். நான்சாபத்தினால் வந்தவள். என் கருத்து நிறைவேறிற்று. நீ இனி என்னை நம்பாதே. அந்தச் சாபத்தை உனக்குச் சொல்லுகிறேன் கேளென் றாள்.

- நூல் : மகாபாரத சங்கிரகம் (1870) ஆதிபர்வம் பக்கம் - 22, நூலாசிரியர் : தரங்கை மாநகரம் ந. உ. சுப்பராயலு நாயகர்.

## ஒரு குடியானவன் மனைவி

ஔவை பசியால் ஒரு சமுசாரியை அன்னங்கேட்க அவன் பெண்டாட்டி கோபித்தபடியால்,

இருந்து முகந்திருத்தி ஈரொடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப- வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடினான் தான்.

எனவும்,

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே-வீணுக்கென்
என்பெலாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பிலான் இட்ட அமுது.

எனப் பாடித் தம்மை வணங்கிய அச்சமுசாரியின் இல் வாழ்க்கையை யிகழ்ந்து,

சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே-
தொண்டா
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன
செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

எ—ம்,

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்-சற்றேனும்
ஏறுமாறாக விருப்பளே யாமாயிற்
கூறாமல் சந்நியாசம் கொள்.

எனக்கூறி நீங்கி ஒரு காட்டின்வழிச் சென்றனர்.

- நூல்: அபிதான சிந்தாமணி (1910) பக்கம் 190. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார்.




## அயூப் கான்

அழகி கீலர், ''காதலால் கிடைத்த அனுபவங்கள்'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதப் போகிறாள். இந்தக் கட்டுரையில் தான் பல அரசியல் தலைவர்களின் அந்தரங்க வாழ்க்கை வெளிப்படப் போகிறது.

கிளைவேதன் என்ற இடத்தில் பாகிஸ்தான் பழைய ஜனாதிபதி அயூப்கானும் கீலரும் ஒரே குளத்தில் நீச்சலடித்தபோது நடந்த சுவையான சம்பவங்களும் அதில் வெளிவரப் போகின்றன. இதனால் அயூப்கான் உள்பட பல அரசியல் தலைவர்கள் ஆட்டம் கண்டு இருக்கிறார்கள்.

● தினத் தந்தி (1963)

# இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுகர்ணோ (1901-1970)

22 ஆண்டுகளுக்கு முன், 3000 அழகிய தீவுகளைக் கொண்ட நாட்டின் அதிபராகி, 1 கோடி மக்களின் தலைவனாகப் போற்றப்பட்டு, "சகோதரனே" என்று அவர்களால் அன்பொழுக அழைக்கப்பட்டு வந்த இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுகர்ணோ ஒரு காதல் மன்னன். வாழ்க்கையின் அழகிய பொருள் அனைத்திலும் மனதைப் பறிகொடுத்த சுகர்ணோவைச்சுற்றிலும் எப்போதும் என்றுமே ஆரணங்குகள் கூட்டம்; கன்னியர்களுடன் தன் 'தலைவன்' நடத்தும் களியாட்டங்கள் கண்டு, முகம் சுளிக்காத வெள்ளை உள்ளம் கொண்ட மக்களைத் தன் நாவன்மையால் மகுடிக்கு உறங்கிய பாம்புகள்போல் ஆக்கிப் பகட்டான வாழ்க்கை நடத்தியவர் சுகர்ணோ.

தன்னைப் பெரிய காதல் மன்னன் என்று சுகர்ணோவே கூறிக் கொண்டார். "என் நாட்டை, நாட்டு மக்களை, மாதரை, கலையை, அதற்கெல்லாம் மேலாக என்னையே நான் நேசிக்கிறேன்" எனத் தனது சுயசரிதையில் சுகர்ணோ கூறியுள்ளார். சுகர்ணோவின் மனைவிகள், ஆசை நாயகிகள் எவ்வளவு பேர் என்பது பற்றிப் பல பேர் பலவிதமாகப் பேசுகின்றனர்.

மாணவப் பருவத்திலேயே சுகர்ணோ ரகசியமாக ஒரு பெண்ணை மணந்து கொண்டார். இந்தத் திருமணம் சில காலம் நீடித்தது. இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த சுகர்ணோ மத வழக்கப்படி, பத்மாவதி என்பவரை முதலில் மணந்து கொண்டார். பின்னர் 1954-ல் ஏற்கெனவே ஐந்து குழந்தைகள் இருந்த ஹார்தினி என்ற விதவையை இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டார். பின்னர் புகைப் படங்களுக்குப் "போஸ்"

கொடுக்கும் ரத்னாசாரி தேவி என்ற ஜப்பானிய அழகியை மணந்து கொண்டார்.

● இதழ்: சுதேசமித்திரன் 22-6-1970

## சிகானூக்

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றாகிய கம்போடியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே புதுடெல்லியில் சமரசப் பேச்சுகள் நடந்தன. ஆனால் அவை வெற்றி பெறவில்லை. தமது பிரதிநிதிகளைக் கம்போடியாவுக்குத் திருப்பி அழைத்து விட்டார் அதன் பிரதம மந்திரி சிகானூக்.

பலவகைகளில் இவர் ஒரு அதிசய மனிதர். இவர் 19-வது வயதில் 1941-ல் சிம்மாசனம் ஏறினார்.

இவருக்கு மனைவிகள் 6 பேர். மகன்கள், மகள்கள் 14. இவரது கடைசி மனைவி மோனிக் என்பவள் இதாலியருக்கும் கம்போடியருக்கும் பிறந்த பேரழகி! 1951-ல் அழகுப் போட்டி ஒன்றில் இவளுக்குப் பரிசு கொடுக்கும்போது முதன் முதலாக இவளைச் சந்தித்துக் காதல் கொண்டு திருமணம் செய்து கொண்டார் சிகானூக்.

இந்தப் பிரதம மந்திரிக்குக் காவியம் புனையத் தெரியும்! ஓவியம் தீட்டத் தெரியும்! குதிரை சவாரியில் கெட்டிக்காரர். பல விளையாட்டுகள் விளையாடத் தெரியும். பன்மொழிப் புலவர். சினிமா காமிராவை இயக்கத் தெரியும்!

இவர் தமது அரண்மனையிலேயே சொந்த ஸ்டுடியோ அமைத்து, தர்மத்திற்காக சினிமா படம் எடுத்து வெளியிட்டார். அதில் இவரே கதா நாயகன்! அரசாங்க ஊழியர்களே, துணை நடிகர்கள்.

''நான் மன்னனாக இருந்தபோது 1941-லிருந்து 10-ஆண்டுகளுக்கு என் மீது பல அழகிகள் மோகம் கொண்டதும், நான் பாப காரியங்களைச் செய்ததும் உண்மையே'' என்று ரேடியோ பேச்சு ஒன்றில் அப்பட்டமாகத் தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட இவர், தமது 5 வயது குழந்தை ஒன்று செத்தவுடன் முழுக்க முழுக்க நல்லவராக மாறிவிட்டார்.

● இதழ்: தினத் தந்தி. கட்டுரையாளர்: அருண்

## துளசி தாசர்

அக்பர் பாதுஷாவினிடம் நீதியில் மிக்க அமைச்சர் திலகராகத் துளசிதாசர் இருந்த காலத்தில், அத் தாசரைச் சோதித்து ஆட்கொள்ள மாமாயன் திருவுள்ளங் கொண்டான். அதனால் துளசிதாசர் மனம் வேறுபட லாயிற்று. துளசிதாசர் தக்க வாலிப தசையை யடைந்திருந்தார். அதனால் அவர், தம்மை யொத்த வயதையுடைய சில கொடிய வாலிபர்களுடன் நட்புக் கொள்ளலானார். கெட்டவர் கூட்டத்துள் கலந்ததால் துளசிதாசரைக் கேடுகள் பல விரைவிற் சூழ்ந்தன. அவருடைய நண்பர்களாகிய கொடிய வாலிபர்கள், அவரை டில்லி மா நகரின்கண் மூலைக்கு மூலை யழைத்தேகினார்கள்; தெருக்கள் தோறும் அழைத்துச் சென்றார்கள்; ஆங்காங்குப் பல கொடிய தொழில்களைச் செய்யலானார்கள்; முடிவில் துளசி தாசரை ஒரு விலைமாதின் வீட்டிற் குடியிருக்கச் செய்தார்கள். அறிவிழந்து, அரசரிடம் செல்லுதலையு மொழித்துத் தாசியின் வீட்டிலேயே வாழ்ந்திருக்கலானார் துளசிதாசர்.

● நூல்: துளசிதாசர் (1926) பக்கம் - 19, 20, 21 நூலாசிரியர்: ம. க. ஜெயராம் நாயுடு (திருவல்லிக்கேணி, கெல்லட் ஹைஸ்கூல் தமிழாசிரியர்)

## மராட்டிய முதல்வர் ராம்ராவ் ஆடிக்

மராட்டிய மாநிலத் துணை முதல்-மந்திரியாக ராம் ராவ் ஆடிக் இருந்து வருகிறார்.

அவர் கடந்த வாரம் விமானம் மூலம் புறப்பட்டு மேற்கு ஜெர்மனி நாட்டுக்குப் போனார். விமானத்தில் பயணம் செய்யும்போது, அதில் இருந்த விமானப் பணிப் பெண்ணிடம் குடிபோதையில் ராம்ராவ் ஆடிக் முறை தவறி நடந்தார்.

இந்தச் சம்பவம் மராட்டிய மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வெளிநாட்டில் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று (14-1-1984) ரோம் நகரில் இருந்து விமானம் மூலம் பம்பாய் திரும்பினார்.

விமான நிலையத்திற்கு ராம்ராவ் ஆடிக்கின் ஆதர வாளர்கள் திரளாக வந்து அவரை வரவேற்றனர்.

அதேபோல அவர்மீது தங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டுவதற்காக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் விமான நிலையத்துக்கு வந்தனர். ராமராவ் ஆடிக்குக்கு எதிராக அவர்கள் குரல் எழுப்பினார்கள்.

ஒரு பெண் கையில் செருப்பு மாலையுடன் ராமராவ் ஆடிக்கை வரவேற்க விமான நிலையம் வந்தார். விமானப் பணிப்பெண்ணிடம் தவறாக நடந்த ராம்ராவ் ஆடிக்குக்குப் போடுவதற்காக இந்தச் செருப்பு மாலை யைக் கொண்டு வந்ததாக அந்தப் பெண் கூறினார்.

● இதழ்: தினத்தந்தி, சென்னை 15-4-1984

## அமெரிக்க உதவி ராணுவ அமைச்சர் ரோஸ்வெல்

39 வயதுப் பேரழகி ஜாக்குலின் அமெரிக்க ஜனாதி பதி (கென்னடியின் மனைவி) 68 வயது கிழவர் "அரிஸ்

டாடில்-சாக்ரடீஸ்-ஓனாசிஸ்சைத் திருமணம் செய்து கொண்டதற்குக் காரணம் என்ன? காதலா? அல்லது கோடீசுவரன் என்பதா?

தனது ஆடம்பரச் செலவுகளை ஏற்க ஒரு கோடீசு வரன் தேவை என்று ஜாக்குலின் தீர்மானித்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள்.

ஜாக்குலின், இந்த இரண்டாவது திருமணத்திற்கு முன்பு தன்னுடன் பழகிய பல ஆண்களைப் பொம்மை களைப் போல விளையாடி இருக்கிறார். இவருடன் அடிக்கடி காணப்பட்டவர்களில் அமெரிக்க உதவி ராணுவ மந்திரி ரோஸ்வெல், கவிஞர் சி.யோனார்டு, இங்கிலாந்து பிரபு லார்டு ஆற்லிக், ஸ்பானிஷ் தூதர் டியாஸ், டைரக்டர் மைக்னிக்கல்ஸ் (வயது 36), விளை யாட்டு நிருபர் ஜார்ஜ் (வயது 41) முதலியோர் உண்டு.

இங்கிலாந்து பிரபு லார்டு "ஆர்லிக்" சை ஜாக்குலின் திருமணம் செய்து கொண்டிருக்கலாமே என்று பலர் கருத்து தெரிவித்தனர். (இந்தப் பிரபு மனைவியை இழந்தவர்).

ஒருவருடன் ஜாக்குலின் பலநாள் வெளியே சென்றா லும், திடீரென்று அந்த நபரைக் கைவிடுவாராம், அந்த நபர் பல தடவை டெலிபோன் செய்தாலும், ஜாக்குலின் பேசமாட்டாராம்.

கடைசியாக ஓனாசிஸ்சுக்கு அடித்தது "அதிருஷ் டம்" சென்ற மே மாதம் முதல் திருமணத்திற்கு ஓனாசிஸ் வற்புறுத்தி வந்தார். செப்டம்பரில் டெலி போன் மூலம் அவருக்கு ஜாக்குலின் சம்மதம் தெரிவித்து உலகைப் பிரமிக்க வைத்தார்.

● இதழ்: தினத்தந்தி, கட்டுரையாளர் "அருண்"




## அதியமான் நெடுமான் அஞ்சி-ஔவையார்

தகடூரில் இருந்து நல்லாட்சி புரிந்த அதியமான்களில் நெடுமான் அஞ்சி மிக்க புகழ் படைத்தவன். தன்னை யுண்டாரை நெடிது வாழப்பண்ணும் நெல்லிக்கனியை ஔவையார்க் களித்துப் பெருநலம் செய்தவன்.

அதியமான் இறந்தபின் ஔவையாரை யுள்ளிட்ட சான்றோர் கூட்டத்தில் அஞ்சியின் கொடை நலமும், புலவர் முதலியோரை அவன் பேணுந் திறமும் பொருளாகப் பேசப்பட்டன. ஔவையார் அவனோடு இருந்து அவனது வள்ளன்மையைத் தெளிய அறிந்திருந் தாராதலின், அதனை பாட்டின்கண் விரியக் கூறியுள்ளார்.

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே

உரை : சிறிது அளவினையுடைய மதுவைப் பெறின்; எங்களுக்கே தருவன், பெரிய அளவினையுடைய மது வைப் பெற்றானாயின்; அதனை யாம் உண்டு பாட; எஞ்சிய மதுவைத் தான் விருப்பி நுகர்வான்.

- நூல்: புறநானூறு. பாடல்: 235, பாடியவர் ஔவையார் (அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது) விளக்கவுரை : சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (1951).

## அலெக்ஸாண்டர் (கி.மு. 356-323)

நண்பர்கள் தயாரித்திருந்த கப்பற்படையில் ஏறி யூப்ரடீஸ் டெல்டாவில் புதிய துறைமுகங்கள் கட்டத் தகுதியான இடங்களைப் பார்வையிட்டுவரச் சென்ற போது, தன் நண்பனைப் போலவே ஒரு கொடிய விஷ ஜுரத்தால், தாக்கப்பட்டான் அலெக்ஸாண்டர். தன் வாழ்க்கையிலேயே, நான்காவது தடவையாகவும், இறுதியாகவும் வந்துள்ள இந்தப் பேராபத்தைப்பற்றி அதிகமாகக் கவலை கொள்ளாமல், எந்த நோயையும் அளவு கடந்து குடிப்பதன் மூலம், சமாளித்து விடலாமென்ற அசட்டு தைரியத்தினால், அந்தச் சமயத்திலும், அளவு கடந்து குடிக்கத் தலைப்பட்டானாம், அலெக்ஸாண்டர்.

- நூல் : அலெக்ஸாண்டர் (1954), பக்கம்-219, 220. நூலாசிரியர் : கௌதமன்.

## அன்வரி

பாரஸீகப் பெருங் கவிஞர் அன்வரியின் பிறந்த வருஷத்தைப் போலவே அவர் இறந்த வருஷமும் தெளிவாகத் தெரியவில்லை. ஹி. 545-க்கும் 656-க்கும்

(கி.பி. 1150-1162) இடையில் அவர் காலமாகி யிருப் பார் என்று தெரிகிறது.

அன்வரி ஆடம்பரமற்ற எளிய உணவையே விரும்பி யதாக அவர் பாட்டுக்களிலிருந்து தெரிகிறது. எனினும் அவர் அரசவைத் தொடர்பால் ஒரு சிறிது மதுப்பழக்க மும் கொண்டவராய் இருந்திருக்கலாம் என்று சொல்லப் படுகிறது. காடியைக் குடித்தால் நியாயத் தீர்ப்பு நாளில் ஊறப்போட்ட ஊறுகாயாகத்தான் வெளியாக நேருமே, கொஞ்சம் மது கிடைத்தால் நலமாயிற்றே என்று அவர் எழுதிய பாடலும் ஒன்று உண்டு.

● நூல்: பாரஸீகப் பெருங் கவிஞர்கள் (1955), பக்கம்-68, நூலாசிரியர்: ஆர்.பி. எம். கனி, பி.ஏ.,பி.எல்.

## அக்பர் (1542-1605)

அக்பர் அன்பான ப்ரகிர்தி உள்ளவர்; அன்பில்லாத வரும் அன்படையுமாறு செய்ய வல்லவர். ஸுகபோக வைபவங்கள் சூழவிருந்தும், அவற்றால் மனம் மயங்கா மல் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருந்தார். உலக வின்பங்களிலும் அவருக்கு விருப்பம் இல்லை. பால்யத்தில் ஸுகபோகங்களிலும் மதுபானத்திலும் விருப்பமுற்றிருந் தும், சில காலத்தில் அவ்விருப்பத்தையெல்லாம் அகற்றி விட்டார்.

● நூல்: அக்பர் (1914), பக்கம்-38, 39 நூலாசிரியர்: தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ., (பச்சையப்பன் கலா சாலை).

## ஆஸ்கார் ஒயில்ட் (1856-1900)

ஆஸ்கார் ஒயில்ட் சிறந்த எழுத்தாளர் 1856-ல் பிறந்து 1900-ல் மறைந்தார். 44 வருஷங்களில் அவர் எழுத்திலே இலக்கிய மின்சாரத்தைச் சிருஷ்டி செய்தார்.

இவர் ஜரிஷ்காரர்; கவிஞர், நாவலாசிரியர், நாடகாசிரியர் கட்டுரையாளர், ஆராய்ச்சி மன்னர், சிந்தனை ஓவியர்.

பெண்மை எழில் நிறைந்த பார்வையான முகங்களோடு கூடிய அழகான பையன்களை அளவுக்கு மிஞ்சி ஒயில்ட் விரும்ப ஆரம்பித்தான். அழகான பையன்களைக் கண்டு காதலிக்கவே ஆரம்பித்து விட்டான். இது ஒரு பெரும்பிழை; ஜனங்கள் ஒயில்டை வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஒயில்டின் புகழ் ஓட்டம் பிடித்தது. எவ்வளவோ செல்வத்தையும் செல்வாக்கையும் ஆரம்பத்தில் பெற்றிருந்த ஒயில்ட், இறுதியில் எல்லாம் இழந்து நோய்வாய்ப் பட்டு, தனக்கு ஒரு முக்கியமான ஆபரேஷன் செய்து கொள்ளப் பணமின்றி உயிர் நீத்தான். குடித்தே குட்டிச் சுவராய்ப் போனான்.

- நூல் : சிறையனுபவம் (ஆஸ்கார் ஒயில்ட்) முன்னுரை பக்கம் : 3, 13, தமிழாக்கம்: வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ;

## இந்திரா

கபூர்தலா சமஸ்தானத்தைச் சார்ந்த ராஜகுமாரி இந்திரா, குடித்து விட்டு, மோட்டாரைத் தாறுமாறாக லண்டனில் ஓட்டிக் கொண்டு சென்றதற்காக, நவம்பர் 13—ம் தேதி, கைது செய்யப்பட்டு, லண்டன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டார். ஜாமினில் வெளி

வந்திருக்கிறார். ராஜ குடும்பத்தைச் சார்ந்த இந்த அம்மையின் வயது 34.

● இதழ் : திராவிட நாடு. 23-11-1947.

## உமர் கையாம்

சுத்தமான மதுவின்றி நான் வாழ முடியாது;
மதுவருந்தாது என் உடல் கனத்தைத் தாங்க
முடியாது.

என்று பாடிய உமர் கையாம் பகிரங்கமாகவே மதுக் கடையில் அமர்ந்து குடித்ததாகச் சொல்லப்படுகிறது. ''அவர் மது குடிக்கவே செய்தார், அதுவும் பகிரங்க மாகக் குடித்தார்'' என்கிறார் அல்லாமா ஷிப்லி. 'ஆனால் ஒரு காலிப் பயலைப் போல் அவர் மதுவருந்து வதில்லை, தத்துவ வாதியாகவே குடித்தார்'' என்று ஷிப்லி மேலும் சொல்கிறார்.

மதுவை எப்படி அருந்த வேண்டும்,யாருடன் சேர்ந்து அருந்த வேண்டும் என்றெல்லாம் உமர் ருபைகளில் விளக்கியுள்ளார். மிதமாகக் குடிக்க வேண்டும் என்றும் உபதேசிக்கிறார். மது குடிப்பது கெடுதலா? அப்படி யானால் அதைவிடக் கெட்ட காரியங்கள் செய்பவர் களும் இருக்கிறார்களே என்று தேறுதல் கூறுகிறார். சாராயம் கசப்பானதாய் இருக்குமாம். அது சாதாரண மான கசப்பா? உண்மையைப் போன்றதல்லவா என் கிறார் உமர் கையாம்.

● நூல் : பாரஸீகப் பெருங் கவிஞர்கள்(1955) பக்கம்-102, 103. நூலாசிரியர் ஆர்.பி.எம். கனி, பி.ஏ., பி. எல்,

## கஞ்சா சாமியார்

எழுத்து, சொல், பொருள், யாப்பு என்னும் நான்கு இலக்கணங்களையும் இவ்வண்ணமே இவர் (திரிசிரபுரம்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை) இவர் இளமை தொடங்கித் தக்கவர்களிடம் பாடங்கேட்டும் ஆராய்ந்தும் வாசித்து முடித்தார். பின்பு தண்டியலங் காரம் படிக்க வேண்டுமென்று விரும்பினார். அதைப் பாடஞ்சொல்லுபவர்கள் கிடைக்கவில்லை. யாரிடமிருந் தேனும் அந்நூல் கிடைத்தால் பிரதி செய்து கொண்டு படிக்கலாமென்று எண்ணிப் பலவாறு முயன்றார். அவ் வூரில் ஒவ்வொரு நாளும் வீடுதோறும் சென்று அன்னப் பிச்சையெடுத்து உண்டு காலங் கழித்து வந்த பரதேசி ஒருவர் தமிழ் நூல்களிற் பழக்கமும் அவற்றுள் தண்டி யலங்காரத்தில் அதிக பயிற்சியும் உடையவராயிருந்தார். ஆனாலும் அவர் பிறரை மதிப்பதில்லை. முறையாக ஒருவருக்கும் பாடம் சொன்னதுமில்லை. அவர் தாம் இருக்கும் மடத்திற் சில ஏட்டுப் புத்தகங்களைச் சேமித்து வைத்திருந்தார். அவர் தாமாக விரும்புவாராயின் ஏதேனும் சில தமிழ் நூல்களிலுள்ள கருத்துக்களை வந்தோருக்குச் சொல்லுவார், ''தானே தரக்கொளி னல்லது தன்பால், மேவிக் கொளக்கொடாவிடத்தது மடற்பனை'' என்னும் உவமைக்கு அவரை இலக்கிய மாகச் சொல்லலாமென்பர்.

அவர் நன்றாகப் படித்தவரென்பதையும் அவரிடம் தண்டியலங்காரப் பிரதியிருப்பதையும் கேள்வியுற்ற இவர், எவ்வாறேனும் அவரிடம் தண்டியலங்காரத்தைப் பெற்றுப் பாடங்கேட்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு அவர் பிச்சையெடுக்கவரும் காலமறிந்து தெருத்தோறும் கூடவே தொடர்ந்து பேசிக் கொண்டு சென்றும், அவருக்கு பிரியமான **கஞ்சாவை** வாங்கி வைத்திருந்து உரிய காலத்திற் சேர்ப்பித்தும் அவர் உவகையோடு இருந்த சமயத்தில் தம் கருத்தை மெல்லப் புலப்படுத்தி அவரிடமிருந்த புத்தகத்தைப் பெற்று எழுதிக் கொண்டு பாடமும் கேட்டார்.

● நூல் : மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்-முதற் பாகம் (1933) பக்கம் 19, 20. நூலாசிரியர் : டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

## கண்ணதாசன் (1927-1981)

நான் பாட்டு எழுதிவிட்டுக் குடிக்கிறேனே தவிர, குடித்து விட்டுப் பாட்டெழுதுவதில்லை.

கவிஞர். கண்ணதாசன்

## கிட்டப்பா (1906-1933)

தமிழ் பேசப்படுபவர்களிடையே ஸ்ரீமான் கிட்டப்பாவின் பெயர் வீட்டுச் சொல்லாகும். அவரது நடிப்பையும், ஸங்கீதத்தையும் கேட்டு மகிழ்ந்தவர் பலர், அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பவர்களின் தொகையோ அனந்தம்.

ஸ்ரீமான் எஸ்.ஜி. கிட்டப்பா நாடகங்களில் வெவ்வேறு வேடங்கள் பூண்டு தமது சங்கீதவன்மையினாலும், சாரீர சம்பத்தினாலும், அழகிய தோற்றத்தினாலும், இனிமை பொருந்திய பேச்சுக்களினாலும், ஒருங்கே பாமரர்களையும் பண்டிதர்களையும் பிரமிக்கச் செய்து, அவர்கள் உள்ளத்தை ஒரு நொடியில் கவர்ந்தார்.

"துஷ்ட சகவாசம் பிராண சங்கடம்" அல்லவா? ஸ்ரீகிட்டப்பாவின் விஷயத்தில் துஷ்ட சகவாசம் பிராணன் பிரிவதிலேயே முடிந்தது. தாமே தம்மைப் பெரிய மனிதர்களென அழைத்துக் கொண்டு திரியும் பலர் இவரோடு சேர்ந்துகொண்டு, தங்கள் சுய நலத்தை உத்தேசித்து, இவரிடையே தீய பழக்கங்களை விருத்தி செய்வதிலேயே முனைந்து நின்று, அதனால் தாங்களும்

ஏராளமாக லாபமடைந்து, இவரது திரேக நிலை கெடு வதற்குக் காரணபூதர்களாயிருந்தனர். இவரை மது வெனும் பேய் நன்றாகப் பற்றிக் கொண்டது. இவருக்கு அப்பழக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. பிறராலும் இவரை விடுவிக்க முடியாமற் போய்விட்டது.

- நூல்: ஸ்ரீமான் எஸ்.ஜி. கிட்டப்பா அவரது ஜீவிய சரித்திரம் (1934) பக்கம் - 10,21,33 நூலாசிரியர்: ஆக்கூர் அனந்தாச்சாரி

## குருச்சேவ் (1894-1971)

ஐந்தடி மூன்றங்குல உயரமுள்ள குள்ளமான ரஷ்யப் பிரதமரான இவர், பழரசம், பானம், அருந்துவது மட்டு மல்ல, இவர் கிண்ணம் கிண்ணமாக மதுபானம் அருந்திக் களியாட்டம் போடுவதில் பெருமைப்படுகின்றவர்.

இதழ்: தினத்தந்தி

## கொக்கோ

எஸ். எஸ். கொக்கோவின் சொந்தப் பெயர் - பசுப லேட்டி ஸ்ரீராமுலு நாயுடு என்பது. அவரது தாய் பாஷை தெலுங்காயிருந்தாலும் அவருக்கு முக்கியமான எல்லா இந்திய பாஷைகளும் தெரிந்திருந்தது. அதோடு கூட பர்மிய, சீன, மலேசிய, சிங்கள பாஷைகளும் அவருக்குப் பேசத் தெரியுமாம்.

'மெட்ராஸ் மெயில்' (1936) படத்துக்குப் பின்—'பக்கா ரௌடி' மின்னல் கொடி (1937)

தொடர்ந்து—'சத்யவாணி' (1940)
'சதி மகானந்தா' (1940)
'வன மோகினி' (1941)
'காலேஜ் குமாரி' (1942)

—இவற்றுக்குப் பின்னாலுள்ள பாட்டுப் புத்தகங்களிலோ சினிமாப் பத்திரிகைகளிலோ, எஸ். எஸ். கொக்கோ வேறு படங்களில் நடித்த தகவல் கிடைக்கவில்லை.

மாம்பலம் பாண்டி பஜாரில் எஸ். எஸ். கொக்கோ ஓர் அறையில் தனிமையில் வாழ்ந்து வந்ததாகவும், தனிமையை மறக்க ஒரு குரங்கை வளர்த்து வந்ததாகவும், வறுமைத் துயரை மறக்கக் குடிக்கத் தொடங்கியதாகவும், 1944-ஆம் வருஷத்தில் ஓர் நாள் மயிலாப்பூர் குளத்தங்கரையில் செத்துக் கிடந்ததாகவும் 1948-ஆம் வருஷத்தின் சினிமா பத்திரிகை யொன்றில் செய்தி கிடைத்தது.

● இதழ்: தினமணி கதிர், 7-4-85 பகுதி: நட்சத்திரத் தேடல்கள் 35. கட்டுரையாளர் : அறந்தை நாராயணன்.

## கோல்ரிட்ஜ்

உலகப் புகழ்பெற்ற இலக்கிய மேதையாகப்போற்றப் படுபவர் சாமுவேல் டெய்லர் கோல்ரிட்ஜ். இவர் தமக்கிருந்த நோயின் தொல்லையை மாற்றிக் கொள்ள அபின் உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.

● நூல் : 200 மேதைகள். பக்கம் - 154.

## சர்ச்சிலின் மகள் சாரா

சர் லியோனார்ட் ஸ்பென்சர் வின்ஸ்டன் என்பது தான் சர்ச்சிலின் முழுப் பெயர். சர்ச்சில் என்றதும் நம் மனத்திரையில் ""அவருடைய கை விரல்களால் காட்டும் ""வி'' பார் விக்டரி'' என்ற வெற்றிச் சின்னமும் சுருட்

டும்தான் நிழலாடுகின்றது. இவர், இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றிருக்கிறார்.

சர்ச்சிலின் மகள். சாரா. அவள் ஒரு நாடக நடிகை, அவளைப் பெற்றோருக்குப் பிடிக்காது. காரணம் அவள் குடிகாரி.

- இதழ்: சுதேசமித்திரன் வார மலர்
  கட்டுரையாளர்: கீதா

## சாக்ரட்டீஸ் )கி. மு. 470-400)

இவர் தமது வரம்பைக் கடந்து எவரினும் அதிகமாகச் சுராபானம் (மது) அருந்துவார்.

- நூல்: சாக்ரட்டீஸ் சரித்திரம் (1919) பக்கம்-7
  நூலாசிரியர்: R. ரெங்காசாரியர்

## சிங்கப்பூர் ஜனாதிபதி
## தேவன் நாயர்

(பிறந்த நாள்: 5-8-1923)

சிங்கப்பூர், மார்ச் 28 - உடல் நலம் குன்றியுள்ள சிங்கப்பூர் ஜனாதிபதி சி. வி. தேவன் நாயர் இன்று ராஜினாமா செய்துவிட்டார். தாம் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டதை ஒப்புக் கொண்டு அவர் ராஜினாமா கடிதம் எழுதியுள்ளார்.

பார்லிமெண்டில் பிரதமர் லீ குவான் யூ அக்கடிதத்தைப் படித்தார். பதவி விலகும் முடிவை நாயரே எடுத்ததாக அவர் கூறினார்.

தொழிற் சங்கத் தலைவரான நாயருக்கு 61 வயதாகிறது. பிரதமரின் நம்பிக்கையைப் பெற்ற அவருக்கு இரு வாரங்களுக்கு முன் உடல் நலம் பாதிக்கப்பட்டது.

குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட காரணத்தால் ஜனாதிபதி மனக்குழப்பமடைந்து காணப்படுவதாக ஆஸ்பத்திரியில் டாக்டர் குழு கருதியது.

- இதழ்: தினமணி, 29-3-1985.

## பி. யு. சின்னப்பா

பிரபல நடிகர் பி. யு. சின்னப்பா சென்ற மாதம் 26-ம் தேதி புதுக்கோட்டையில் போலீசாரால் 'மது வருந்திய' குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். பிறகு அவருக்குச்சொந்தமான இரு வீடுகளிலிருந்து மதுபானவகைகள் கண்டுபிடிக்கப் பட்டனவாம். அதோடு கூட மதுவருந்தியிருந்த சமயத்தில் சின்னப்பா தம் அண்டை வீட்டுக்காரர்களான செல்லையா, சந்தானம் பிள்ளை ஆகியோருக்குப் படுகாயங்களை ஏற்படுத்தியதாகவும் சொல்லப் படுகிறது. சின்னப்பா தற்போது ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் காலை 9 மணிக்கும், இரவு 9 மணிக்கும் பிரதி தினமும் அவர் நகர இன்ஸ்பெக்டர் முன் ஆஜராக வேண்டுமாம். அவர் மீது இ. பி. கோ 326—வது பிரிவின் கீழும், மதுவிலக்குச் சட்டத்தின் கீழும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. லைசென்ஸ் இல்லாமல் பிராந்திப் புட்டிகள் வைத்திருந்ததற்காக இருநூறு ரூபாய் (200) அபராதம் விதிக்கப் பட்டது. சின்னப்பா தாம் குற்றவாளியென ஒப்புக் கொண்டார்.

● இதழ்: குண்டூசி 26-7-1948

## சூ-யென்-லாய்

உலகிலேயே அதிக மக்கட்தொகை கொண்ட கம்யூனிச நாடான சீனாவின் பிரதமர் சூ—யென்—லாய் மது அருந்துவதில் விருப்பமுள்ளவர். இவருக்கு 'மாவ்தாய்' என்ற மதுதான் மிகவும் பிடிக்கும். 'மாவ்தாய்' மதுவை இவர் அடிக்கடி அருந்துவாராம்.

● இதழ்: கல்கண்டு (3-1-1974) பக்கம்—31

## டி. என். ராஜரத்தினம் பிள்ளை

நாதஸ்வர வித்வான் T. N. ராஜரத்தினம் பிள்ளை திருமலையில் சென்ற 15—2—1948 ல் மது விலக்கு விதிகளை மீறி நடந்து கொண்டதற்காக (சித்தூர் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டால் இம் மாதம் 17—ஆம் தேதி யன்று) ரூ 500/= அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்.

● இதழ் : குண்டூசி (ஜூன்—1948)

## நடிகர் வி. ஏ. செல்லப்பா*

சிறந்த பாடகரும், நடிகருமாகிய வி. ஏ. செல்லப்பா குடிமயக்கத்தில் இறந்தார்.

* முதல் தமிழ்த் திரைப்படமாகிய 'காளிதாஸ்' என்னும் படத்தில் டி. பி. ராஜலெட்சுமியோடு நடித்தவர் இவர்.

## தாகின் நூ

விடுதலை பெற்ற பர்மாவின் முதல் பிரதமரானார் தாகின் நூ என்பவர் 12—ஆம் வயதிலேயே குடிபோதையில் உருண்டு புரண்டு உள்ளூரில் போக்கிரிப் பட்டம் பெற்றவர். இவரது தந்தை இவரை நெற்களஞ்சியத்தில் பூட்டி வைத்தாராம். அங்கேயும் மது அவருக்குக் கிடைத்து வந்தது. அவருடைய நண்பர்கள் ஜன்னல் வழியாக அவருக்கு மது வழங்கி வந்தனராம்.

● நூல் : இருபதாம் நூற்றாண்டு மேதைகள் பக்கம்—90

## துரியகவி திருமலைக் கொழுந்து கவிராயர்

துரியகவி திருமலைக் கொழுந்து கவிராய ரென்பார் இற்றைக்குச் சுமார் 80 ஆண்டுகட்கு முன்னர் சிக்கிலி ஐயர் குளம் என்னும் ஊரிலே கம்மாளர் மரபிற் பிறந்த வர். இவர் மதுக்குடியில் நோக்கமுள்ளவர்போல் சில அடிகள் இயற்றியுள்ளார்.

"தா சீ சா வொன்றைத் தராவிடிலோ இன்றைக்கு
நீ சீ சா வென்றே நிகழ்த்துவேன்"

என்றது காண்க.

● நூல்: இலக்கிய வரலாறு (1953) பக்கம்-468
நூலாசிரியர்: கா. சுப்பிரமணிய பிள்ளை,
எம்.ஏ., எம்.எல்.,

## பாபர்

**பீரா, குஷாப்,** சீனாம் நதிகளுக்கு இடையில் உள்ள நாடுகள் பேபருக்குரிமையாயின. தமக்குப் பதிலாக அந் நாடுகளை ஆளச் சிலரை நியமித்துத் தாம் காபூலுக்குச் சென்றார்.

இது வரையில் அவரைப் பற்றாத குடியென்னுங் கொடிய பழக்கம் அவரிடம் குடி கொண்டது. எங்கு சென்றாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் குடிப்பதென்றா லவருக்குக் கொண்டாட்டம். இயற்கையழகு வாய்ந்த தோரிடத்தை அவர் காண்பார். உடனே தம் நேயரு டன் குடிக்க உட்கார்ந்து விடுவார். நீர் நிலவளங்களாற் செழித்து வளர்ந்த பயிர்களைக் கண்டவுடனே உடல் பூரித்துக் குடிக்கக் கருதுவார். சுருங்கக் கூறின் அவர் க்ாலைத் தெய்வ வழிபாடு குடியே; மாலையிலும் அப்படியே. குடியில்லாச் சமயமே இல்லை; என்றாலும்,

இக்கொடிய பழக்கம் அவர் முயற்சிகளுக்கும் செயல்களுக்கும் இடையூறாக இல்லை. யாவரும் மதிமயங்கி அறிவிழக்கும் குடிப்பேய் அவரை மட்டில் கெடுக்கவில்லையாம்.

பேபரைப்போல் குடித்தவர் எவருமிலர்; எனினும், அவரைப் போல் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தவருமில்லை. குடித்தவருள் தந்நிலை மாறாதிருந்தவர் இவர் ஒருவரே. ஏனையோர் குடிமயக்கத்தால் தம்மை மறந்து பிதற்றுவதைக் கண்டு அவர் மனம் நோவதுண்டு; ஒரு சமயம் அருக்குச் சுரநோய் கண்டது; அப்பொழுது குடியை விட்டுவிட நேர்ந்ததாம். குடிப்பவர்களுக்குக் கடவுள் அருளாரென்பது இவரது உறுதியான நம்பிக்கை; ஆதலால் இவர் குடித்து வந்த விலையுயர்ந்த பாத்திரங்களைக் கீழே போட்டு உடைத்து விட்டு 'இனிக் குடிப்பதில்லை' என்று சபதம் செய்தாராம்.

- நூல்: பேபர் வாழ்க்கை வரலாறு (1946) பக்கம் - 79. நூலாசிரியர்: வே. துரைசாமி தமிழாசிரியர், பி. எஸ். ஹை ஸ்கூல், மயிலாப்பூர்.

## பாரதியார்

பாரதியாரைப் போற்றுபவர் பலர். வெறுக்கும் பிரகிருதிகளும் உண்டு. அவரைப் பற்றிக் குறை சொல்லும் 'அதிருப்தி அண்ணாத்தை'களுமிருக்கிறார்கள். ஒரு மனிதன் என்றிருந்தால் அவனிடம் குறையிருந்தே தீரும். பாரதியைப் பற்றிக் கூறப்படும் குறைகளிலே ஒன்று அவர் **லாகிரி லோலர்** என்பது. லாகிரிலோலராயினும் எக்காலத்திலும் அவர் தம் நினைவிழந்தது கிடையாது; இருக்குமிடம் தெரியாது பிதற்றியது கிடையாது; தம் கொள்கையினின்றும் வழுவியது கிடையாது.

- நூல்: பாரதியார் (1950) பக்கம் - 58 நூலாசிரியர்: சக்திதாஸன் சுப்பிரமணியன்

## பீட்டர்

1696-ல் ஐவன் இறந்த பிறகு, பீட்டர் மட்டும் ஆட்சி செய்து வந்தார். அவருடைய ஆட்சிக் காலம், தற்கால ருஷ்யாவின் வரலாற்றின் தொடக்கத்தைக் குறித்துக் காட்டுகிறது என்று கூறப்படுகிறது.

வரலாற்று ஏடுகளில் காணக்கிடக்கும் விசித்திர மனிதர்களுள் பீட்டரும் ஒருவராவார். உடல் வலிமை பெற்றவர். அவர் மகா முரடர், எதற்கும் கட்டுப்படாதவர். கொடுஞ் செயல்களைச் செய்வதற்கு அஞ்ச மாட்டார். அவருடைய சகோதரி சோபியாவை அடைத்து வைத்தார். அவருடைய மனைவியைக் கன்னிமாடத்தில் சேர்த்துவிட்டார். அவருடைய மகனை, தன்னை எதிர்த்த காரணத்திற்காகச் சித்திரவதை செய்து கடைசியில் கொன்றார். அவர் ஒரு குடிகாரர். ஆகவே, அவர் இறந்தபொழுது மக்கள் எல்லோரும் பேராறுதல் அடைந்தார்கள்.

- நூல்: உலக வரலாறு (1968) (கி.பி. 1789 முதல் இன்றுவரை) நூலாசிரியர்: டி. ஆர். இராமச்சந்திரன், எம்.ஏ; எம்.லிட்; (பேராசிரியர், வரலாற்றுத்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை)

## பிரார் ராகோஜி பான்ஸ்லே

மஹாராஷ்டிரர்களுக்கும் நிஜாம் அரசனுக்கும் விரோதம் உண்டாயிற்று. அதன் காரணமாய் தோஸ்த்

அலியின் ஜில்லாக்களும் எதிர்க்கப்பட்டன. யுத்தத்தில் தோஸ்த் அலி மாண்டான். அவனுடைய குமாரனான ஸப்தர் அலியும், சந்தா சாஹெபும் தங்களுடையமனைவி மக்களுடன் புதுச்சேரியில் அடைக்கலமடைந்தனர். அதனால் மஹாராஷ்டிரர்கள் புதுச்சேரி கவர்னரிடம் ஒரு தூதனையனுப்பினார்கள். அப்பொழுது பிரஞ்சு கவர்னர் தம்முடைய இனத்தாருக்குக் குறைவு வராமலிருக்குமாறு தம்மை யடைக்கலம் பெற்றவர்களை முடிவு வரை காப்பாற்றுவதற்குத் தயாராயிருப்பதாய் விடையளித்து **பிரஞ்சு சாராயமும்** மரியாதையா யனுப்பப்பட்டது. மஹாராஷ்டிரத் தலைவனாய் படையெடுத்து வந்திருந்த பீரார் ராகோஜி பான்ஸ்லேயும் அவனது மனைவியும் அந்தச் சாராயத்தை ருசி பார்த்ததும் மயங்கி விட்டனர். ஊருக்குத் திரும்பலாயினர். இதனால் தென்னாட்டில் பிரஞ்சுக் காரர்களுக்கு அதிக கௌரவம் ஏற்பட்டது.

- நூல்: நமது பரத கண்டம் (1926) (இரண்டாம் பாகம்) பக்கம் - 196—197. நூலாசிரியர்: வை. சூரியநாராயணன் சாஸ்திரி, எம்.ஏ., எல்.டி.

## பேகம் பாரா

பேகம் பாரா என்னும் வடநாட்டு நடிகை ஒரு சமயம் குடித்துவிட்டுக் கண்மண் தெரியாமல் காரை ஓட்டிச் சென்று விபத்தை உண்டாக்கி விட்டார். உடனே அவர் மீது வழக்கு நடந்தது. இருபத்தைந்து ரூபாய் அபராதமும் ஐந்து வார சிறை தண்டனையும் விதித்தார்கள்.

அன்று ரத்ததானம் செய்யும் கைதிகளுக்குத் தண்டனையைக் குறைக்க சட்டம் இடமளித்தது. அதன்படி

இந் நடிகை பத்து நாட்கள் தண்டனையை அனுபவித்த பிறகு ரத்த தானம் கொடுத்து விடுதலை பெற்று வீடு திரும்பினாராம்.

● இதழ்: குண்டூசி (ஜூன், 1961) பக்கம் - 48

## மகாராஷ்டிர துணை முதல்வர் ராம்ராவ் அடிக்

பம்பாய், ஏப். 18—மகாராஷ்டிர துணை முதல்வர் ராம்ராவ் அடிக், தமது பதவியிலிருந்து ராஜிநாமா செய்துள்ளார். இதனை அவர் இன்று நிருபர்களிடம் அறிவித்தார்.

ராம்ராவ் அடிக் இம் மாதம் 7-ந் தேதி (7-1-84) மேற்கு ஜெர்மனிக்கு ஏர் இந்தியா விமானத்தில் பயணம் செய்தபோது குடிபோதையில் இருந்ததாகவும், விமானப் பணிப் பெண்ணிடம் முறை கேடாக நடந்து கொண்டதாகவும், மேற்கு ஜெர்மனி போய்ச் சேர்ந்த போதும் இதே போன்ற செயல்களைச் செய்ததாகவும் அவர் மீது புகார்கள் கிளம்பியது நினைவிருக்கலாம். மகாராஷ்டிர சட்ட சபையிலும் பார்லிமெண்டிலும் இந்த விஷயம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இந்தப் புகார்களைத் தான் அடிக் மறுத்துள்ளார். தம் மீதான புகார்களை மறுத்த போதிலும் மேற்கு ஜெர்மனிக்கு விமானத்தில் பயணம் செய்த போது இரண்டு மூன்று தடவை மது பானம் குடித்ததாக அவர் ஒப்புக் கொண்டார். "என் வாழ்க்கையில் இனி ஒரு நாளும் மதுவைத் தொட மாட்டேன்" என்று சபதம் செய்தார்.

அடிக்கிற்குக் குடிப் பழக்கம் உண்டு. இதன் காரண மாகவே அவருக்கு முதல்வர் பதவி கிடைக்காமல் போன தாக ஓரிரு நாட்களுக்கு முன் வந்த தகவல்கள் கூறின.

● *இதழ்: தினமணி, 19-4-84*

## பின்னணிப் பாடகர் பி.ஜி. வெங்கடேசன்

சிறந்த பாடகர் பி. ஜி. வெங்கடேசன் குடிபோதை யில் காலமானார்.

## ஜஹாங்கீர் (1605 - 1627)

ஜஹாங்கீர் ஒப்பில்லாத அழகு வாய்ந்த நூர்ஜஹான் என்னும்பாரஸீக ஸ்திரீயை அவளுடைய புருஷன் இறந்து போன பிறகு விவாகஞ் செய்து கொண்டு, ராஜ காரியங் களனைத்தையும் அவளிடம் ஒப்புவித்துவிட்டுத் தாம் உண்டு குடித்துச் சுகமாகக் காலங் கழித்து வந்தார்.

● *நூல் : இந்து தேச சரித்திரம் (1930) பக்கம் - 190*

## ஜார்ஜ் கார் ஷா

"என் தந்தையாரை விருந்திற்கோ ஒரு கூட்டத் திற்கோ அழைத்தால், அவர் ஒரு போதும் சுய நினை வோடு வருவதில்லை; திரும்பிச் செல்லும் பொழுதும் பரிகசிக்கத் தகுந்த நிலையில் மதுவருந்திச் செல்வார்... என் தாயார் தமது இசைப் பயிற்சித் திறமையால் இந் நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். ஒரு நாள் மாலை என் தந்தையார் மதுவருந்தி மயங்கி வீட் டில் நுழையும்போது வாயிற்படியில் விழுந்தது தாம் மது

வருந்தும் பழக்கத்தை நிறுத்த வேண்டும், அல்லது இறத்தல் வேண்டும் என்பதை அவருக்கு விளக்கியது.

— ஜார்ஜ் பெர்னார்டு ஷா

● நூல்: பொதுநலப் புரவலர் (1947), பக்கம் 3, 4, நூலாசிரியர் : வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.

## ஹேபேஸ்டியன்

இவன் மாவீரன் அலெக்சாண்டரின் பிரதம தளபதிகளுள் ஒருவன். அவனது சிறந்த நண்பன். இவன் அதிகமான விருந்துகளில் கலந்துகொண்ட காரணத்தினால், ஒரு கொடிய விஷ ஜுரத்தில் பீடிக்கப்பட்டானாம். அப்படி அவன் தாக்கப்பட்டிருந்தும்கூட, ஒரு மருத்துவனுடன் கூடிக்கொண்டு அளவுக்கு மீறிக் குடித்ததனால், நிலை மாறி இறந்து விட்டானாம் ஹேபேஸ்டியன்.

● நூல்: அலெக்சாண்டர். பக்கம் : 218.



# எச்சிலான பச்சிலைகள்

## இலங்கை ராணி

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இரண்டாவது ராஜாசிங்கன் இறந்த பிறகு, மக்களுக்குரிய சேவையைச் செய்வதைச் சிங்கள இலக்கியம் நிறுத்தியது. டச்சுக் காரர்களின் உதவியுடன் போர்ச்சுக்கீசியர்களை ராஜா சிங்கன் விரட்டியடித்தான். ஆனால் அது சிலோனை ஐரோப்பாவின் அருகில் கொண்டுவந்துவிட்டது. டாஸ் கன் கதைக்காகவும் ராஜாசிங்கத்தின் ஆட்சி நினைவில் இருக்கிறது.

டாஸ்கன், காஸ்கோயின் என்ற பெயர் கொண்ட போர்ச்சுகீசியன் என்று கருதப்படுகிறது. மன்னருடைய சேவகத்தில் அவன் அதிகாரி அல்லது மந்திரி பதவிக்கு

உயர்ந்தான். அந்தப் பதவியை வகித்ததற்கு அவன் அசாதாரணமானவனாகவும், சிங்கள மொழியில் திறமை யுள்ளவனாகவும் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் போர்ச்சுகீசியர்களை ராஜாசிங்கன் வெறுத்தான். அழகிய டாஸ்கன், தன் பணியின் மூலம் அரசனுடைய நன்றி யறிதலைப்பெற்று மந்திரியானான் என்றும், அரண்மனை யில் அவன் வரவேற்கப்பட்டு ராணியின் காதலன் ஆனான் என்றும் கதை கூறுகிறது.

ராணி நோயில் படுத்தாள். வைத்தியர்கள், ஜோஸ் யர்களின் ஆலோசனையின் பேரில் பலி (பேய் நடனம்) நடத்த முடிவு செய்தார்கள். அதற்காகக் களிமண்ணில் ராணியின் உருவச்சிலை தயாரிக்கப்பட்டது. அந்தச் சிலையைக் கண்ட டாஸ்கன், முழுப் பயன் கிடைக்க வேண்டுமானால் சிலையின் ஒவ்வொரு அங்கமும் உண்மையான பிரதியாக இருக்கவேண்டும் என்றும், ராணியின் தொடையில் உள்ள மச்சம் சிலையில் காணப் படவில்லை என்றும் சொன்னான். அவனுடைய இழி வான சொற்களை அரசர் கேட்டதும், டாஸ்கனைச் சிரச்சேதம் செய்யும்படி கட்டளையிட்டார். தண்டனை நிறைவேற்றுவதற்காகக் காத்திருக்கும் சமயம் அவனுக் காக ராணி துக்கப்பட்டாள். அதற்கு ஒரு பாட்டில் டாஸ்கன் பதிலளித்ததாவது,

நிறைவேறாத காதலுக்காகப் பழைய ராவணன்
பத்துத் தலைகளைக் கொடுத்திருக்க
அமுதம் போன்ற உன் முத்தங்களைப் பெற்றநான்
உனக்காக ஒரு தலையை ஏன் கொடுக்கக் கூடாது?

கொலைக்களத்திற்கு, ராணியின் சாளரத்தின் வழி யாக அவன் அழைத்துச் செல்லப்பட்டபோது, இந்தக் கவிதையை அவன் கூறியதாகக் கருதப்படுகிறது.

ஆ! நாம் சந்தித்ததும், என் இதழ்த் தேனை நீங்கள் பருகியதும் இந்தச் சாளரத்தில் அல்லவா! என் காதலரே!

இப்பொழுது பயணம் போகிறீரே! எனக்காக உமது உயிரைக் கொடுக்கப் போகிறீரா?

- நூல் : இலங்கைத் தீவு (1959), பக்கம்-87, 88, 89, நூலாசிரியர் : ஜே. விஜய துங்கா, தமிழாக்கம் : கே. வி. ராமச் சந்திரன்.

## குந்திதேவி

குந்தி, போஜன் எடுத்து வளர்த்த அபிமான புத்திரி. தேவமீடனுக்கு மாரிஷையிடத்துப் பிறந்த புத்திரி வசுதேவன் தங்கை. இவளுக்குப் பிருதையென்றும் பெயர். இவள் தந்தை அநுமதிப்படி துர்வாச விருஷியிடத்து ஏவல் செய்துகொண்டிருந்தாள். அவளுடைய ஏவற் பத்தியைப் பன்முறையுங்கண்டு மகிழ்ந்த இருஷி, ஒரு திவ்ய மந்திரத்தை யுபதேசித்து இதனை நீ யாரைநோக்கிச் செபித்தாலும் அவர்கள் பிரசன்னமாகிப் புத்திரோற்பத்தி செய்வார்களென்று கூறி விடையளித்தனர். இதனைக் குந்திதேவி பரீக்ஷிக்க நினைத்துக் கங்கையாடி அக்கங்கைக் கரையிலே நின்று சூரியனை நோக்கி அம்மந்திரத்தைச் செபித்தாள், உடனே சூரியன் பிரசன்னமாகிக் கன்னிகா பங்கமின்றி ஒரு புத்திரனைப் பெறுகவென்று கூறி மீண்டான். அவ்வாறே குந்தி சகஜ கர்ண குண்டலங்களோடு கூடிய கர்ணனைப் பெற்றாள். வசுசேனன் என்பதும் கர்னனுக்கொரு நாமதேயம். இதன் பின்னர்ப் பாண்டு ராசாவுக்குப் பாரியாகித் தருமன் முதலிய ஐவரையும் பெற்றாள். இவள் சித்தி வமிசம்.

- நூல் : அபிதான கோசம் (1902) நூலாசிரியர் : ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

## சற்மிஷ்டை

சற்மிஷ்டை-விருஷதபாவின் குமரி. இவள் சுக்கிரன் பெண்ணாகிய தேவயானியுடன் நீராடி அவள் சேலையை யறியாது உடுத்தினள். அதனால் அவள் கோபிக்க அவளைக் கிணற்றில் தள்ளினள். இதனால் சுக்கிரன் கோபித்து அரசனுக்கு அறிவிக்க, அரசன் தன் பெண்ணைத் தேவயானியாகிய சுக்கிரன் பெண்ணுக்கு அடிமையாக்கினன். அடிமையாகிய சற்மிஷ்டை தேவயானியறியாது அவள் கணவனைக் கூடித் துற்கிரன், அநு, பூரு என மூன்று குமரரைப் பெற்றாள். (பாகவதம்).

- நூல் : அபிதான சிந்தாமணி (1910), பக்கம் - 376, நூலாசிரியர் : ஆ. சிங்காரவேலு முதலியார், (சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ் உபாத்தியாயர்).

## சௌமினி

சௌமினி ஒரு பார்ப்பினி, இவள் மணங்கொண்டு சிலநாள் கணவனுடன் கூடிச் சுகித்திருந்து கைமையாய்க் கள்ளப் புணர்ச்சி செய்து கருவடைந்தனள். இதையறிந்த சுற்றத்தார் ஊரைவிட்டு நீக்க ஒரு வேளாளனைக் கூடிக் கள் குடித்து, வெறியால் ஆட்டிறைச்சி தின்ன எண்ணி இருளில் பசுவின் கன்றை யாடெனக்கொன்று விளக்கெடுத்துப் பார்க்கையில் பசுவின் கன்றாயிருக்கச் சிவசிவ என்று கூறி அதனைத் தின்றனள். வேற்றூர்க்குச் சென்ற கணவன் வந்து கன்றைக் கேட்கக் கன்றைப் புலி கொன்றதெனக் கூறிச் சிலநாளிருந்து இறந்தனள்.

- நூல் : அபிதான சிந்தாமணி (1910), பக்கம் - 479, நூலாசிரியர் : ஆ. சிங்காரவேலு முதலியார்.

## சுக்கிரீவன்

வாலி-சுக்கிரீவன் தமையன். அங்கதன் தந்தை. இவன் பாரி தாரை. இவன் சுக்கிரீவன் வேண்டுகோளின்படி ராமராற் கொன்றொழிக்கப் பட்டவன். இவன் இறந்த பின்னர்த் தாரை சுக்கிரீவன் மனைவியாயினாள்.

- நூல் : அபிதான கோசம் (1902), பக்கம் 372,

## சுமித்திரை

சாலிவாகனன்— விக்கிரமார்க்கனைக் கொன்று தன் பெயரால் சகவருஷம் நிலைநாட்டினோன். சுலோசனன் என்னும் பிராமணனுக்குச் சுமித்திரை என்னுமொரு புத்திரி பிறந்தாள். அவள் மணப்பருவம் அடைந்த போது, தன்வசந் தப்பியொரு சோரநாயகனைக் கூடி கர்ப்பவதியாயினாள். அஃது அவள் மனசை வருத்தச் சோரநாயகனைக் கண்டு, எனது ஒழுக்கத்துக்கிழுக்கு நேர்ந்தது. குலப்பழி தேடிக்கொண்டேன். இனி யாது செய்வேன் என்று கூறிச் கவன்றாள். அது கேட்ட சோரநாயகன் யான் மனுஷனல்லேன். யான்ஆதிசேஷன். உனது கருப்பத்திலிருக்கும் புத்திரன் மகா கீர்த்திப்பிரஸ் தாபனாகிய ஓரரசனாவான். அவனாலுன் குலம் விளங்கும். அவனைச் செவ்வே பாதுகாத்துப் பெற்று வளர்க்கக்கடவையென்றாசீர்வதித்துத் தனது நிசரூபத்தைக் காட்டி அந்தர்த்தானமாயினான்.

இவ்வாறு நிகழ்ந்தவற்றை யெல்லாம் சுமித்திரை தனது தந்தையிடஞ் சென்றுரைத்தாள். அவன் இது தெய்வசங்கற்பமெனக் கொண்டு தேறியிருக்கையில், சுமித்திரை சோரநாயகனைக் கூடி கர்ப்பவதியாயினா

ளென்று அயலார் அவ்வூரசனுக்கறிவுறுத்தினார்கள். அரசன் சுலோசனனை அழைத்து உன் புத்திரியை இந் நகரத்துக்கு வெளியே அனுப்பி வைக்கக் கடவையென்று அவனுக்கு ஆஞ்ஞை செய்தான். அவ்வாறே அவள் அந் நகரத்துக்குப் புறத்தேயுள்ளதாகிய ஒரு குலாலசேரியை அடைந்து ஒரு குலாலன் வீட்டில் அடைக்கலம் புகுந்து வசிப்பாளாயினாள். உரிய காலத்திலே புத்திரனும் பிறந் தான். அவனுக்குச் சாலிவாகனன் என நாமகரணஞ் செய்து வளர்க்கலாயினர்.

- நூல்: அபிதானகோசம்(1902),பக்கம்-130, 131 நூலாசிரியர் : முத்துத்தம்பிப் பிள்ளை

## தாரை

மகாபதிவிரதைகளுள் மற்றொருத்தி தாரை, இவள் தேவகுரு பிரகஸ்பதியின் மனைவி. இவள் தன் கணவன் ஊரில் இல்லாத சமயத்தில், தன் கணவரிடம் படிக்க வந்திருந்த சந்திரன் என்னும் மாணவனை மோகித்து அவனுடன் கலவி செய்து நீண்ட நாள் வரை அவனுக்கு ஆசை நாயகியாயிருந்து புதன் என்ற குழந்தையைப் பெற்றுக் கொண்டு மீண்டும் பிரகஸ்பதியின் மனைவி யானாள்.

- நூல் : சுந்தரமூர்த்தி நாயனார் விநோத கிரிமினல் கேஸ் (1948) பக்கம்-18 நூலா சிரியர் : சித்த வைத்திய அ. சி. சுப்பையா சிங்கப்பூர்.

## திரௌபதி

திரௌபதி மகா பதிவிரதைகளில் ஒருத்தி. இவ ளுக்கு ஐந்து கணவர்கள். இவர்கள் போதாதென்று ஆறாவதாகக் கர்ணன் என்பவனையும் மோகித்தாள்.

● நூல் : சுந்தர மூர்த்தி நாயனார் வினோத கிரிமினல் கேஸ் (1948) பக்கம் 18. நூலாசிரியர் : சித்த வைத்திய அ. சி. சுப்பையா சிங்கப்பூர்.

## பவுஸ்டினா

மார்க்கஸ் அரேலியஸ் கி. பி. 121-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இருபத்தாறாந்தேதி ரோமாபுரியில் பிறந்தான். இவனுடைய பெற்றோர்கள் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவனது தாயார், அப்பொழுது சக்ரவர்த்தியாக ஆண்டு கொண்டிருந்த அண்ட்டோனினஸ் பையஸ் என்பவனுடைய சகோதரி.

அண்ட்டோனினஸ் பையஸுக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த மார்க்கஸ் அரேலியஸ், அவனுடைய சகோதரி மகனும் மருமகப்பிள்ளையுமாவான்.

எகிப்தில் கிளம்பிய எதிர்ப்பை அடக்க காஷியஸ் என்ற ஒருவன் அனுப்பப் பட்டிருந்தான். இவன் திறமை வாய்ந்த சேனாதிபதி என்று பெயர் படைத்திருந்தான். இவனுடைய திறமையில் மார்க்கஸுக்கு அதிக நம்பிக்கையிருந்தது.

காஷியஸ் கொலையுண்டது மார்க்கஸுக்குத் தெரிந்தது. பின்னர், கலகம் நடைபெற்ற பிரதேசங்களைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று புறப்பட்டான் மார்க்கஸ். கூடவே இவன் மனைவி பவுஸ்டினாவும் சென்றாள். இவனுக்கு ஒரு மகனுண்டு. அவன் பெயர் கம்மோடஸ். அப்பொழுது அவனுக்கு ஏறக்குறைய பதினான்கு வயதாயிருந்தது. அவனையும் அழைத்துச் சென்றான் மார்க்கஸ். மேற்படி பிரதேசங்களைச்சுற்றிப்

பார்த்துக் கொண்டு வருகையில் பவுஸ்டினா திடீரென்று நோய்வாய்ப் பட்டு இறந்து விட்டாள்.

பவுஸ்டினா துர்நடத்தையுள்ளவளென்று சொல்லி பலவிதமான அவதூறுகள் மார்க்ஸின் காதில் விழுந்தன. ஆனால் இவன் இவைகளை நம்பவில்லை; அல்லது பொருட்படுத்தவில்லை. எப்பொழுதும் போல் அவளை விசுவாசத்துடனேயே நடத்தி வந்தான். அவள் இறந்த பிறகு அவளுக்கு வெள்ளியினால் உருவச்சிலைகள் சமைத்து அமைக்க ஏற்பாடுகள் செய்தான்.

- நூல்: சமுதாய சிற்பிகள் (1952), பக்கம்-78, 79, நூலாசிரியர்: வெ. சாமிநாத சர்மா.

## புலோமசை

ஒரு வனத்தில் பிருகு முனியானவர் தம் மனைவி புலோமசையோடு வாழ்ந்திருக்குங்கால், ஒருநாள் அஸ்தமனத்தில் சந்தியானுஷ்டானத்துக்குப் போகிற போது பூர்ண கர்ப்பமாயிருக்கிற தம் பெண்சாதியைப் பார்த்து தான் திரும்பி வருகிற வரையில் இந்த ஓம குண்டத்தை நடத்திக்கொண்டிருவென்று கற்பித்தார். அப்படியே அவள் நடத்திக்கொண்டு வருகையில் அக்கினிதேவன் பிரசன்னமாகி அவள் கொடுக்கும் ஆகுதியை ஒப்புக் கொண்டு அக்குண்டத்தின் மத்தியிலிருந்தான். அந்த வேளையில் ஒரு இராட்சதன் அந்த வெளிச்சத்தைக் கண்டு அவிடமணுகி, ஓமஞ் செய்கிற முனி பத்தினியைப் பார்த்து தான் துராத்மாவாகையால், கெடுநினைவை மனதிற்கொண்டு அக்கினி தேவனை நோக்கி, இவள் யாரென்று வினவ, பிருகு முனிவருடைய பத்தினியென்று சொன்னான். நீசொன்னது சரியல்ல, சிறுவயதிலே நான் இவளை விவாகஞ்செய்தேன். அவள் என்னை

மோசஞ்செய்து ஓடிப்போய் விட்டாள். இவளை இப்போது கண்டு பிடித்தேன், இனி நான் விடுவதில்லையென்று இராக்கதன் அவளைத்தூக்கித் தோள்மேற்கொண்டு போகும்போது, அவள் பயந்து கூச்சலிட்டதின் பேரில், பூரண கர்ப்பிணியாகையால் அவன் தோள்மீதே ஒரு புத்திரனைப் பெற்றாள்.

- *நூல்: மகாபாரத சங்கிரகம் ஆதிபர்வம் (1870), பக்கம்-4. நூலாசிரியர்: தரங்கை மாநகரம் ந. வ. சுப்பராயலு நாயகர்.*

## மாக்கஸ் ஔறிலியன் மனைவி (ரோம்)

மாக்கஸ் ஔறிலியன் என்னும் தனிக்கோலனைப் பலர் ஞானிவேடம் பூண்டு ஏமாற்றிச் சமயக்கோட்பாடுகளைப் பற்றிப் பேசி முகமன் கூறிப் பொருளும் பதவியும் பெற்றுத் தம் வாழ்நாளைப் போக்கினர். மாக்கஸ் தத்துவ ஞானியாயிருந்தும் பலரால் ஏமாற்றப்பட்டான். அவன் தன் மனைவி மகன், தம்பி, முதலிய சுற்றத்தாரின் ஒழுக்கத்தைக் கண்டிக்கவில்லை. மாக்கஸ் தத்துவஞானியாதலின் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தான். அவன் மனைவியோ ஐம்புலவின்பங்களை வெறுத்தாளல்லள். உருநலன் வாய்ந்தோர் இழிகுலத்தோராயினும் காமுறுவள். ஔறிலியன் தன் மனைவி எத்தகையளென வுணராது அவளை நனி புகழ்ந்தான். தன் மனைவியே இல்லக்கிழத்திகளிற் சிறந்தவளென நம்பினன். இப்பெருமனைக்கிழத்தியை அளித்த கடவுளை யென்றும் நினைந்து துதித்தான். அவள் இறந்தவுடன் அவன் துன்பக்கடலில் மூழ்கினான். மேன்மக்கட்சபை உடனே அவளுக்குக் கோயில் அமைத்து வழிபாடு ஏற்படுத்தியது.

- **இதழ்: செந்தமிழ் (MAY-JUNE 1940), தொகுதி-37 பகுதி-7 பக்கம்-313, 314.**

கட்டுரை: யவனர் வரலாறு; கட்டுரையாளர்: த. இராம நாத பிள்ளை, B A; (LOND)

## முருந்தை

தவ முனிவர் மனைவி முருந்தைக்கு ருக்மாங்கதன் மீது மோகம் வந்தது. அவனோ இவளைச் சேர மறுத்து விட்டான். அவளுக்கு ருக்மாங்கதன் மீது மட்டற்ற மையல் ஏற்பட்டு அதே விகாரத்திலிருக்கையில் இதையறிந்த இந்திரன் ருக்மாங்கதன் போல வேடம் பூண்டு அவளைப் புணர்ந்து மகிழ்வித்தான்.

- நூல்: சுந்தரமூர்த்தி நாயனார் வினோத கிரிமினல் கேஸ் (1948) பக்கம்-18 நூலாசிரியர்: சித்த வைத்திய அ. சி. சுப்பையா, சிங்கப்பூர்.

## ரத்னாதேவி

இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுகர்ணோவுக்குப் பல மனைவிகள் இருந்தும், அவர் தனது நான்காவது மனைவியான ஸ்ரீமதி ரத்னாசாரி தேவி என்பவரிடம் உயிரையே வைத்திருந்தார்.

ரத்னாசாரி தேவி ஜப்பான் நாட்டுப் பெண். 1965-ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் புரட்சியையடுத்து, 1967-ஆம் ஆண்டில் சுகர்ணோ வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட பிறகு அவரை விட்டுப் பிரிந்த ரத்னாசாரி தேவி உலக எழில் நகரமாம் "பாரீசின்" இரவு விடுதி வாழ்க்கையில் இரண்டறக் கலந்தாள்.

- இதழ்: சுதேசமித்திரன் 22-6-1970.

## ருஷ்ய ராணி மகா காத்தரைன்

*(1729 — 1796)*

உன் பெண் இங்கேயே இருக்கட்டும் என்று ஸோபியாவின் தாயை அனுப்பி வைத்தாள் மகாராணி. அவளுக்கு ரஷ்யக் கல்வி கற்றுத் தர ஏற்பாடு செய்தாள். இரண்டே ஆண்டுகளில் அவள் கிரேக்கத்தின் விசுவாசத்துடன் கிரேக்க பீடத்தைச் சார்ந்து தன் பெயரைக் காத்தரைன் என்று மாற்றிக் கொண்டபோது இவள் தான் பீட்டருக்கு உரியவள் என்று மனந் துணிந்து தன் மருமகளாக்கிக் கொண்டாள் மகாராணி எலிஸபத்.

பீட்டரின் மனைவியான ஆறு வருடங்களில் அவனோடு மகிழ்ந்திருந்த நேரம் வெகு குறைவே. என்றாலும் பிரான்சு நாகரிகத்துக்குட்பட்ட அந்தப் பெண், வந்த இடத்தில் பெற்ற ரஷ்யக் கல்வியும், மதியூகங்களும் ஏராளம். எனவேதான், தன் உடல் வேட்கைகளை அவள் தன் வழியில் தணித்துக்கொள்ள முடிவெடுத்து விட்டாள். இளைஞர்களை ஒரு ராணியாக இருந்து தருவித்துக் கொள்ள அவளுக்கு எளிதில் முடிந்தது.

● இதழ் : முத்தாரம், 9-10-1983. பக்கம்-5.

## வஞ்சுனை

வஞ்சுனை — ஒரு பார்ப்பினி. இவள் கணவன் விதுரன் என்போன். இவ் விதுரன் தன் மனைவியை விட்டுத் தாசி வீடே கதியாகத் திரிகையில், இவள் சோரத் தொழில் செய்யத் தொடங்கினள். இதை அறிந்த கணவன் இவளை அடிக்கப் போகையில் வஞ்சுனை புருஷனை நோக்கிக் காமம், புருஷர் பெண்கள் இருவர்க்கும் பொது. நீ என் ஆவலைத் தணிக்காததால்,

இவ்வகை புரிந்தேன் எனக்கூறக், கேட்டு இரக்கப்பட்டு ஆயின் உன் மனப்படி இருக்கவெனக் கூறி, அவள் பலரிடம் சம்பாதித்த பொருள்களை வேசைகளுக்குக் கொடுத்து இறந்து போயினன்.

- நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம் 839. நூலாசிரியர் : ஆ. சிங்காரவேலு முதலியார் (சென்னைப் பச்சையப்பன் கலா சாலைத் தமிழ் உபாத்தியாயர்)

## மருமகளைத் திருமணம் செய்துகொண்ட மாமனார்

பாஞ்சாலத்தில் ஒரு மாமனார் (தன் புதல்வனின் மரணத்தின் பின்னர்) மருமகளைக் கல்யாணம் செய்து கொண்டார். இந்த முறை சரிதானாவென கேள்வி பிறந்த போது லாகூர் கோர்ட்டார் 'ஜாத்' ஜாதியின ரிடம் அது செல்லுபடியானதென்று தீர்ப்பளித்தார்கள்.

- இதழ் : ஊழியன். 1-5-1936. இதழாசிரி யர் : ராய. சொ.




## அமெரிக்காவின் துணைஜனாதிபதி ஸ்பிரோ டி அக்னியூ

லஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக அமெரிக்காவின் உபஜனாதிபதி பதவியை ஸ்பிரோ டி. அக்னியூ ராஜினாமா செய்ய நேர்ந்ததை யாவரும் அறிவீர்கள். இப்போது அவருக்கு வேலையில்லாத் திண்டாட்ட அபாயமும் நேர்ந்திருக்கிறதென்று "யூ. எஸ். நியூஸ் அண்டு ஓர்ல்டு ரிப்போர்ட் பத்திரிகை அண்மையில் எழுதியுள்ளது. வருமானமுள்ள வேலை எதுவும் இல்லாததுடன் வழக்கறிஞர் தொழில் நடத்தவும் அவருக்குத் தடைவிதிக்கப் படலாம் என்று தெரிகிறது.

● இதழ் : சுதேசமித்திரன்.

## இராசகிருகத்து அமைச்சன்

இராச கிருகம் என்னும் நகரத்தை அரசாண்ட அரசனது மந்திரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்

குழந்தைக்குப் பத்திரை எனப் பெயரிட்டுப் பெற்றோர் சீராட்டிப் பாராட்டிவளர்த்தார்கள். இவ்வாறு வளர்ந்த அப்பெண்மகவு பெரியதாகி மணம் செய்யத்தக்க வயதினை யடைந்தது. ஒரு நாள், இப்பெண் தன் மாளிகையின் மேற்புறத்தில் உலாவியபோது தெரு வழியே கட்டழகு மிக்க காளை ஒருவனை அரசனது சேவகர் கொலைக்களத்துக்கு அழைத்துக் கொண்டு போவதைக் கண்டாள். கண்டதும் அக்காளையின் மேற் காதல் கொண்டாள். அவன் அரசனது புரோகிதன் மகன். வழிப்பறி செய்த குற்றத்திற்காகக் கொலைக் களத்திற்கு அழைத்தேகப்பட்டான். இக் குற்றவாளியின் மேல் காதல் கொண்ட பத்திரை அவனையே மணம் புரிவேன். அன்றேல் உயிர்விடுவேன் என்று பிடிவாதஞ் செய்தாள். இதனை யறிந்த இவள் தந்தை கொலையாளருக்குக் கூலி கொடுத்து அவனைமீட்டுக் கொண்டு வந்து நீராட்டி ஆடையணிகளை அணிவித்துப் பத்திரையை அவனுக்கு மணஞ்செய்வித்தனன்.

● நூல் : பௌத்தமும் தமிழும் நூலாசிரியர்: மயிலை சீனி வேங்கடசாமி.

## காசியபன்

காசியபன்— பாம்பு மந்திரம் வல்ல ஒரு பிராமணன். இவன் பரீக்ஷித்து மகாராஜன் விஷத்தினாலிறப்பானென்ப துணர்ந்து அவனிடஞ் சென்றபோது வழியிலே தக்ஷகன் கண்டு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து அவனை அங்குச் செல்லாமல் தடுத்தான்.

நூல் : அபிதான கோசம் (1902) பக்கம்—71.

## காரைக்கால் கடிதங்கள்
## மரியதாசு லஞ்ச கேஸ் (1890)

காரைக்கால் டௌன் போலீசு கொத்தவாலாகிய மெத்தவாலான "மரியதாசுதிரு'' என்பவர் அலமேலிடம் திருட்டுப் புடவை வாங்கிய குற்றத்திற்காக 5 ரூ லஞ்சம் வாங்கினார். நாடார்களின் சண்டையில் 6 ரூ பெறும் படியான கருப்பிட்டி வெல்லம் லஞ்சம் வாங்கினார். ஒரு பெண்பிள்ளைசண்டையில் 10ரூ லஞ்சம்வாங்கினார். இந்த மூன்று குற்றங்கள் ருசுவாகியதால் இவர் காவற் கூடத்தில் வைக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப் பட்டிருந்தார். பிறகு சூன் மீ 10தேதிசெஷன் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டபொழுது குற்றவாளியென்று கண்டு பிடிக்கப்பட்டு 6மாதம்கடுங்காவலும் 200பிறான்அவுதார மும் 50 பிறான் மானநஷ்டமுங் கொடுக்கும்படி புதுவை கனந்தங்கிய "நீதியதிபர்'' ஜுரிகளின் மூலியமாய்த் தீர்ப்பளித்தனர். புதுவை "அவுக்காஜெனரல்'' துரைய வர்கள் இவனுடைய லஞ்ச நடத்தைக்காக மிக கர்ண கடூரமாய்த் தண்டிக்கும்படி மிக வாதித்துப் பேசினார். எதிரியின் லாயர்ப் புலிகளாகிய "பையூ'' துரையும்" "ரொசாரியாமகனும்' வெகு நேரம் வாதாடி "நீதியதிபர்' கேட்ட கேள்விகளுக்கு தக்க மறுமொழி சொல்ல ஏலாமல் பெட்டிக்குள் பாம்பு அடங்கிக்கொள்வது போலடங்கி விட்டனர்கள். மேற்படி குற்றவாளி இன்னமனேகரிடம் லஞ்சம் வாங்கி யிருக்கிறார். அவைகளியாவும் வெளிவர வில்லை. எண்ணெய்க் கடை மாணிக்க செட்டியார் கூட 30 ரூ லஞ்சம் கொடுத்திருக்கின்றனர். தாசி மீனாக்ஷி யிடம் கூட 25 ரூ லஞ்சம் பெற்றிருக்கின்றார். இவர் அநேகரிடம் 2000 ரூக்கு மேற்பட்டு லஞ்சம் வாங்கியிருக் கிறார். அதையெல்லாம் எடுத்தெழுத சாவுகாசமில்லாத தால் நிறுத்திவிட்டனம்.

— கைலாச நாதர்

● இதழ்: ஸ்ரீ லோக ரஞ்சனி (1890)

## ரஷ்ய அதிகாரி என். எஸ். எஸ்ரமோவ்

லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ரஷ்ய அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொல்லத் தீர்ப்பானது.

என்.எஸ். எஸ்ரமோவ் என்ற இவர், கார்க் என்னும் இடத்தில் உள்ள சப்ளை டிப்போவின் பிரதம அதிகாரியாக இருந்தார். இவர் அதிக சம்பளத்துக்கு லாரி டிரைவர்களை வேலைக்குவைத்ததாகவும், அவர்களிடம் இருந்து லஞ்சம் வாங்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. மொத்தம் 32 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இவர் லஞ்சம் வாங்கினாராம், இவரைச் சுட்டுக் கொல்லும்படி தீர்ப்புக் கூறப்பட்டது.

● இதழ்: நவமணி, 22-2-1963.

## ராணா ஸங்கன்

ராணாஸங்கன்—பெற்ற தகப்பனைக் கொன்றவனுடையபெயரையும் சொல்லவேண்டுமோ! தனது பந்துக்களால் தள்ளப்பட்டு, நாட்டாராலும் வெறுக்கப்பட்ட இவன், தனக்கு வேண்டியவர்களுக்குத் தன் கீழுள்ள சிற்றரசர்களுடைய நாடுகளையும் ஜாகீர்தார்களுடைய நிலங்களையும் பிடுங்கிக் கொடுப்பதும், அயல் நாட்டரசர்களின் துணையை லஞ்சங்கொடுத்துத் தேடுவது மாயிருந்தான். தன்னை ஒப்புக்கொண்டால் டில்லியரசனுக்குத் தனது மகளையே விவாகம் செய்து கொடுக்கத் தான் தயாராயிருப்பதாகச் சொல்லியனுப்பினான். தேசாபிமானமும் மதாபிமானமும் சன்மார்க்கமுமே உருவெடுத்து வந்தாற் போலிருந்த சித்தூர் ராணாக்களின் குடியைக் கெடுக்க வந்த இக் கோடரிக் காம்பின் தலையில் ஒரு இடிவிழக்கூடாதா என்று யார் சாபமிட்டனரோ, டில்லியரசனது தர்பாரிலிருந்து வெளி

வந்தவுடனே அங்கே ஒரு மின்னல் மின்னி இடி இடித்து இவனைத் தரையில் வீழ்த்திற்று.

- நூல்: ராஜபுத்ர வீரர்கள் (1938) பக்கம் 32, 33, நூலாசிரியர்: T. லக்ஷ்மி நாராயண ஐயங்கார், B. A.

## ராவ்பகதூர் பெருமாள்

இப்பொழுது சிந்துநாட்டின் வடபுறவெல்லையில் டிப்டி கலெக்டர் **ராவ்பஹதூர் பெருமாள்** என்பவர் லஞ்சம் வாங்கினதாக 1000 ரூபாய் அபராதமும், மூன்று மாதம் சிறையும் விதிக்கப்பட்டார். **குஞ்சன்மேனன்** என்பவர் சப் சட்ஜியாயிருந்து லஞ்சம் வாங்கினதாக ருசுப்பட்டு வியாச்சியம் ஐகோர்ட்டுக்கும், தலைச்சேரிக்கும் அலைந்துக்கொண்டிருக்கிறது. இந்தக்கேஸ், கோயமுத்தூருக்கு அல்லது சேலத்துக்கு மாறும்போலும். இப்படியே **மிஸ்டர் ஆர்தர் கிராபோர்ட்,** ஸி. எம். ஜி. என்னும் கொங்கான் தேசத்துக் கமிஷர் லஞ்சம் வாங்கியதை கவர்ன்மெண்டார் கண்டுபிடித்து விசாரிக்கும்போது ஓட்டம் பிடித்து அகப்பட்டு விசாரணையில்விழிக்கிறார். இவர்க்குடன்பட்டிருந்த அனேகர் பிடிபட்டார்கள். ஒருவர் 40, 000 ரூபாய் செகுயூரிடியில்லாமல் ஜெயிலி லிருக்கிறார்.

- இதழ்: ஸ்ரீலோக ரஞ்சனி அனுபந்தம். பக்கம் 3 1888 ஆகஸ்டு 1 புத்—2 இல—1 இதழாசிரியர்: சி. கோ. அப்புமுதலியார் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## வாரன் ஹேஸ்டிங்ஸ் (1732-1818)

இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒரு சமயம் அபின் ஒப்பந்தம் ஒன்றைப் பெரும்

தொகையைப்பெற்றுக் கொண்டு 'சுலைவான்' என்ற அதிகாரிக்குக் கொடுக்க, அவன் பிறகு எதிர்பாரத விதத்தில் அபின் பழக்கமில்லாத வேறு பிரதேசத்திற்கு உத்தியோக முறையில் மாற்றப்படவே, தன் ஒப்பந்தத்தை வேறு ஒரு 'பின்' என்பவனுக்குப் பெரும் இலாபத்தோடு நாற்பதினாயிரம் பவுனுக்கு விற்க நேர்ந்தது. அதே நாளில் பின் என்பவன் பல கிராக்கிகள் ஏற்பட்டதை முன்னிட்டு இன்னொருவனுக்கு அந்த அபின் ஒப்பந்தத்தை அறுபதினாயிரம் பவுனுக்கு விற்றானாம்.

- நூல்: மூலதனம் (1987) பக்கம்: 56, 47. நூலாசிரியர்: ம.சிங்காரவேலு பி.ஏ.,பி.எல்.,

## வைஸ்ராய் இஸ்மேல்

தொண்ணூறு வருடங்களுக்கு முன்புகூட ஒரு வார்த்தையின் மதிப்பு 15 லட்ச ரூபாயாக இருந்திருக்கிறது. 1867-ம் ஆண்டு எகிப்து துருக்கி மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தகாலம். எகிப்தில் வைஸ்ராய்ஆக **இஸ்மேல்** என்பவன் இருந்தான். அப்போது பௌ_பாஷா என்பவன் துருக்கியின் மந்திரி பதவி வகித்தான். துருக்கி சுல்தானிடம் சிபாரிசு செய்து தனக்கு **'கேடிவ்'** என்ற பட்டத்தை வாங்கித் தருவதற்காக இஸ்மேல் மந்திரிக்கு 15 லட்ச ரூபாய் லஞ்சமாகக் கொடுத்தான்.

- நூல்: அதிசயச் செய்திகள் (1959) பக்கம் 103. நூலாசிரியர்: சரோஜினி சங்கர்



# இரவல் போன இல்லத் தரசிகள்

## இயற்பகை நாயனாரின் மனைவி

இயற்பகை நாயனார்— சோழ நாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்தில் வைசியர் குலத்திலுதித்துச் சிவனடியவர்க்கு வேண்டியவைகளைக் கொடுத்திருக்கு நாட்களிலே சிவ பெருமான் ஒரு காமுக வேதியருருக்கொண்டு வந்து அவர் மனைவியைத் தாம் பெற்றுச் செல்கையில் வழியில் சுற்றத் தார் தடுக்க நாயனார் அவர்களுடன் போரிட்டு விலக்கி மனைவியாரை வேதியர்க்குப்பின் அனுப்ப, வேதியர் திருச்சாய்க்காடு என்னும் சிவஸ்தலம்வரை நாயனார் பின்வரச் சென்று, நாயனார் நிற்றல் கண்டு ஏதோ பயந் தவர் போல் கூவ, நாயனார் கேட்டு விரைந்து செல்லச் சிவமூர்த்தி தரிசனந்தர முத்தி பெற்றவர்.

● நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம்—103. நூலாசிரியர் : ஆ. சிங்கார வேலு முதலியார்.

## சாந்தப்பை

உலகில் பல பாகங்களுக்கிடையில் மனைவியரை இரவல் கொடுக்கும் வழக்கம் இருந்து வந்தது. இது பலருக்கு வியப்பைத் தரலாம். கிரேக்கரிடமும், உரோமரிடமும் இவ்வழக்கம் சாதாரண வழக்கில் இருந்தது. கிரேக்கரின் தத்துவ சாத்திரியாகிய சாக்கிரட்டீஸ் என்பவரே தனது மனைவியாகிய சாந்தப்பை என்பவளைத் தனது முதல் மாணக்கராகிய அல்சிபியாதிஸ் (ALCIBIADES) என்பவருக்கு இரவல் கொடுத்தார்.

● நூல் : பெண்கள் புரட்சி. பக்கம்—37.

## சுருதசேனை

சாரதாண்டாயினி—இவன் கேகய தேசத்தரசன். இவன் சுருதசேனையென்பவளை மணந்து இருக்கையில் புத்திரரில்லாமையால் கணவன் சொற்படி ஒரு வேதியனைக் கூடித் துர்ஜயன் முதலிய (3) மஹாரதர்களைப் பெற்றுக்கொண்டனள். இந்தச் சுருதசேனை குந்தியின் சகோதரி.

● நூல்: அபிதான சிந்தாமணி (1910) பக்கம்-984. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார்.

## பணக்காரர்களின் மனைவியர்

ரெங்கப்பூரில் இரண்டு பணக்காரர்கள் பரஸ்பர இருவர் மனைவிகளின் பேரிலும் கவர்ச்சியடைந்து, அந் ஸ்திரீகளும் அவ்வகையிணங்க, குலஸ்திரீகளை மாற்றி கொண்டு விட்டதாக சீவில் மில்டெரி கெஸட் கூறுகின்றது.

● இதழ் : ஸ்ரீலோகரஞ்சனி 15—8—1890.

# பிரோஸ்பூரில் ஒருத்தி

பிரோஸ்பூரில் சில தினங்களுக்கு முன் ஒரு விநோதமான வழக்கு நடந்ததாம். இதில் ஒருவன் தன் பெண் ஜாதியை மற்றொருவன் இழுத்துக்கொண்டு போய் விட்டதாகக் குற்றம் சாட்டினானாம். ஆனால் விசாரணையில், குற்றம் சாட்டினவனிடத்தில் இவன் 16-ரூபா கடன் வாங்கிக் கொண்டதாகவும், அதைச் செலுத்துகிற பரியந்தம் வட்டிக்குப் பதிலாய் அவனிடத்தில் தன் பெண் ஜாதியை விட்டு வைத்ததாகவும் தெரிய வந்ததின் பேரில் வழக்கு தள்ளிவிடப்பட்டதாம்.

● இதழ் : ஸ்ரீலோகரஞ்சனி 1—9—1890.

# தேவநல்லூர்ப் பெரியப்பன் பிள்ளையின் மனைவி


தேவ நல்லூர்ப் பெரியப்பன் பிள்ளை என்பவர்-இவரது கொடையின் மகிமையை, ஒரு புலவர், திருவாங்கூர் அரசரிடம் புகழ, அரசர், பொறாமையுற்று இகழ்ந்தனராம். தாம் கூறியதன் உண்மையை நிரூபிப்பதாகச் சபதம் செய்து புறப்பட்டு ''ஏறும் குதிரைக்குப் புல்லும்'', என்னும் தொடக்கத்துச் சீட்டுக்கவியை முன் அனுப்பி, நள்ளிரவில் சென்றடைந்தனர். மற்றச் சௌகரியங்களையெல்லாம் செய்து கொடுத்துப் புலவரை உபசரித்த பெரியப்பன் பிள்ளை, அவர் படுக்கைக்கோர் பெண்பாலின்றித் தமது தரும பத்தினியையே இசையும்படி வேண்டினராம். இதையறிந்த புலவர் அவரைப் புகழ்ந்து கொண்டாடி, அரசரிடம் அவருடைய நிகரற்ற ஔதாரியத்தைத் தெரியப்படுத்தித் தாம் முதற்கண் கூறியதை நிரூபித்தனராம்.

● இதழ்: தமிழர் நேசன் (காளயுக்தி வருடம் ஐப்பசி மீ") தொகுதி—11 பகுதி—2 பக்கம்—87, 103.

## ஹிரோபி வட்னாபி

ஸ்ரீ ஹிரோபி வட்னாபி என்னும் 27 வயதுடைய ஜப்பானிய வாலிபர் டோக்கியோ நகரசபைத் தேர்தலில் ஓர் அபேட்சகராக நிற்க விரும்பினார். ஆனால் ஜாமீன் கட்ட 12 பவுன் வேண்டும். கையில் ஒரு காசு மில்லை. கடன் கொடுப்பவரைக் காணோம். நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் தேதியும் நெருங்கிவிட்டது. என் செய் வார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு விபசார விடுதிக்குச் சென்று 12 பவுனுக்குத் தன் மனைவியை விற்றார். தேர்தலிலும் போட்டியிட்டுப் பெரும்பாலான ஓட்டுக்களால் வெற்றி பெற்றார். இவர் அபேதவாத பாமரக் கட்சியைச் சேர்ந்தவர். டோக் கியோ நகர சபையில் இவர்தான் இளைஞர். இவருடைய அபேத வாதக் கட்சியினர் இவருடைய மனைவியை மீட் பதற்காக இதுவரை 10 பவுன் சேர்த்துவிட்டார்கள். கூடிய சீக்கிரம் இவ்வாலிபரின் மனைவி மீட்கப்படலாம்.

● இதழ் : கிராமணி குலம் 10—2—1937.




## தாத்தாச்சாரி

தாத்தாச்சாரி: இவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்திருந்த வைணவர். தம் காலத்திலிருந்த அப்பைய தீட்சிதர் என்னும் சைவாசிரியரைத் தாம் எந்த வகையிலும் வெல்ல முடியாமை கண்டு மனம் பெரிது புழுங்கி, நஞ்சு கலந்த பாலை அவர் பருகுமாறு கொடுத்தவர்.

- நூல் : சோமசுந்தர நாயகர் வரலாறு பக்கம்-78. நூலாசிரியர் : மறைமலை அடிகள்.

## பட்டினத்தார்

பட்டினத்து அடிகள் திருஅருணைக்கு எழுந்தருளிய காலத்துக் கருமவசத்தால் கோயில் – தாசியைக் கண்டு மோகித்தனர். அத்தாசி தன் தாயிடங் கூறத் தாய் பெண்ணை அழைத்துவருமுன் சுவாமிகள் வீரியத்தை அரசிலையில் வைத்து அவளது வரவறிந்து ‘‘உன்னை நினைத்தவன் தொன்னையில் இருக்கிறான்’’ என்றனர்.

- நூல்: அபிதான சிந்தாமணி (1910), பக்கம்-63, 64. நூலாசிரியர்: ஆ. சிங்கார வேலு முதலியார். (சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ் உபாத்தியாயர்)

## பட்டுக்கோட்டை வேங்கட சுப்பையா சுவாமிகள் (1803-1873)

ஞான சித்தர் ஸ்ரீ வேங்கட சுப்பையா சுவாமிகள் பட்டுக்கோட்டை நகரையடுத்த சொக்கநாதபுரம் என்ற சிற்றூரில் பிறந்தவர்கள் என்று தெரிகின்றது.

அச் சுவாமிகளுக்கு ஒரு சமயம்-தவறான "காம நோக்கம்" ஏற்பட்டதாகத் தெரிந்ததும் - உடனே அவர்கள் அருகாமையிலிருந்த ஓர் மூங்கிற் சோலைக்குச் சென்று ஒரு புற்றின் மேலே தட்டி "நாகம்மா! வெளியே வா" என அழைத்தார். உடனே அந்தப் புற்றிலிருந்து நாகப்பாம்பு ஒன்று சீறி எழுந்தது. சுவாமிகள் தமது குறியைக் காட்டி "இந்தப் பயலுக்குத் திமிர் அதிகம் உண்டாகி விட்டது. இவனுக்கு இரண்டு போடு" என்று சொல்ல, அந்தப்பாம்பும் சுவாமிகளின் குறியில் இரண்டு தடவை கொத்தி விட்டு புற்றுக்குள் போய் விட்டது! கொட்டும் இரத்தத்துடன் சுவாமிகள் கோவணத்தைக் கட்டிக் கொண்டு தன் போக்கில் போய் விட்டார். நாகப்பாம்பின் விஷம் அவரை ஒன்றும் செய்யவில்லை!!

- நூல்: ஞானசித்தர் ஸ்ரீ வேங்கட சுப்பையா சுவாமிகள் வரலாறு, 1973. பக்கம் : 5, 13, 14. ஆசிரியர் : P. S. தண்டபாணி செட்டியார். (பட்டுக்கோட்டை)

## பிரஞ்சு பாதிரியார்

பிரஞ்சு நாட்டில் புகழ்பெற்ற ஒரு நடிகைஇருந்தாள். அவள் நடிப்புக் கலையைத் தனது உயிராக மதித்து வந்தாள். மக்கள் அனைவரும் அவளது நடிப்பைப் போற்றிப் பாராட்டி வந்தனர். அந்த நடிகையோ நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் கிடந்தாள். அப்போது அவளுடைய படுக்கையருகே ஒரு பாதிரியார் இருந்தார். அக்காலத்தில் பிரஞ்சு நாட்டில் நடிப்புக்கலை ஓர் பாவ காரியம் என மதத் தலைவர் களால் நினைக்கப்பட்டு வந்தது. எனவே அந்தப் பாதிரியார் மரணப்படுக்கையில் கிடக்கும் நடிகையிடம் அவளது தொழில் வெட்கப்படக்கூடிய தொழில் என்று ஒப்புக் கொள்ளுமாறு கட்டாயப் படுத்தினார்.

நடிகையோ தன் நடிப்புத் தொழிலை உயர்வான கலைத் தொழில் என மதித்து வந்தவள். ஆகவே பாதிரி யாரின் சொற்களை ஏற்றுக்கொள்ளமறுத்தாள். கோபங் கொண்ட பாதிரியார் இறுதிக்கால மதச் சடங்கை நிறை வேற்றாமல் போய்விட்டார். மதச்சடங்கு எதுவும் நடை பெறாமலே நடிகை உயிர் நீத்தாள். உடனேபோலீஸார் விரைந்து வந்து பிணத்தைக் கைப்பற்றினர். பிறகு அப்பிணத்தைத் தூக்கிப்போய் குப்பை கொட்டுமிடத் தில் போட்டு அதன் மீது சுண்ணாம்புத் தூளைத் தூவி விட்டார்கள். நடிகையின் பிணம் இவ்வாறு மிகவும் கேவலப்படுத்தப்பட்டது.

● நூல்: வழிகாட்டிய பெருமக்கள் (1960) பக்கம்10,11. நூலாசிரியர்: தி.தண்டபாணி

## புத்த கீர்த்தி

தேவானந்த ஆசாரியரால் ஸம்வத் 990—ல்உஜ்ஜெயினில் எழுதப்பட்ட தரிசனஸாரத்தில் பார்சுவநாதருடைய

காலத்திற்கும் மஹா வீரருடைய காலத்திற்கும் நடுவில் பார்சுவநாதருடைய சிஷ்யனான புத்தர் கீர்த்தி என்ற ஸந்யாஸிமஹான் பண்டிதனாய் பலிச்சநகா மென்ற நகரத்திற்கு ஸமீபத்திலுள்ள ஸரயூ நதிக்கரையில் தபஸ் செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் சில செத்த மீன்கள் மிதந்து போவதைக்கண்டு அவைகளைத் தின்றால் ஜீவ ஹிம்சையல்ல வென்று நினைத்து தன் தபஸை விட்டு, சிவப்பு வஸ்திங்களைத் தரிக்க ஆரம்பித்து பௌத்த மதத்தை உபதேசித்து வந்தான் என்று சொல்லப் படுகிறது.

- *நூல் மஹாவீரர் (1925) பக்கம். 17 நூலாசிரியர்: ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங் கார், பி. ஏ., (சுதேசமித்திரன்)*

## ராபர்ட்—டி— நொபிலி

தத்துவபோதக சுவாமி இத்தாலி தேசத்தைச் சேர்ந்த தஸ்கனி மாகாணத்தில் ஓர் உயர்ந்த பிரபுக் குடுப்பத்திற் பிறந்தவர். நேப்பில்ஸ் நகரத்திலிருந்த ஏசுவின் சபையிற்கல்வி பயின்று, பின்னர் 1606ல் தமிழ் நாட்டிற்கு வந்தார். இவர் நமது நாட்டிற்கு வந்த நோக்கம் யாதென்றால், தமிழ்நாட்டு "உயர் ஜாதி இந்துக்களைக் கிறிஸ்தவ மதத்தில் திருப்பவேண்டும் என்பதே. அதன் பொருட்டு, மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல, இவர் தமது நடையுடை பாவனை களை முழுவதும் மாற்றிக்கொண்டு, இந்து 'சந்நியாசி வேடந்தரித்து வாழ்ந்து வந்தார். புலாலுணவை நீக்கி, "சைவ" உணவை ஒரே வேளை உண்டுவந்தார். நெத்தியிற் சந்தனம் அணிவார். மார்பிற்பூணூல்தரித்துக்

கொள்வார். ஐந்து புரியாக அமைக்கப்பட்டிருந்த அப் பூணூலில் மூன்று புரிகள் பொன்னாலானவை. மற்ற இரண்டு புரிகளும் வெள்ளியாலானவை. மூன்று பொற் புரிகளும் கிறிஸ்தவர்களின் மும் மூர்த்திகளைக் குறிப்பன என்றும், இரண்டு வெள்ளிப் புரிகளும் இயேசுகிறிஸ்து வின் உடலையும் உயிரையும் குறிப்பன என்றும் இவர் தத்துவார்த்தம் சொன்னார். அப்பூணூலில் சிலுவை யொன்று கட்டித்தொங்கவிட்டிருந்தார். ராபர்—டி—நொபிலி என்னும் தமதுபெயரை மாற்றி "தத்துவ போதகர்" என்று வைத்துக்கொண்டார். மதுரையிலி ருந்த பார்ப்பனர், இவர் தாம் பிராமணர் என்று சொல் லியதில் நம்பிக்கை கொள்ளாதபோது, பழைமையான ஓலையில், சமஸ்கிருதமொழியில், தாமே ஒரு சாசனம் எழுதிக்கொண்டு ரோமாபுரியிலுள்ள ஏசுவின்சபைக் குருமார் இந்து தேசத்துப் பிராமணர்களைப் பார்க்கி லும் பூர்வீக பிராமணர்கள் என்று காண்பித்து அவர் களை நம்பச் செய்தார்.

- நூல்: கிறிஸ்தவமும் தமிழும் (1936) பக்கம் 65, 66, நூலாசிரியர்: மயிலை, சீனி. வேங்கடசாமி.

## ஜி. யு. போப்பையர் (1820-1907)

உலகப் பொது மறை எனப்படும் திருக்குறளையும் உள்ளத்தை உருக்கும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவற்றின் வாயிலாகத் தமிழ் நூல் களின் சிறப்பை அயல் நாட்டவர்க்கு அறிவித்த பெருமை **டாக்டர் ஜி. யு. போப்பையர்** அவர்களையே சாரும்.

சமயத் துறையில் தாமிரபரணி ஆற்றுக்கு வடபால் உள்ள ஊர்கட்குச் சாயர்புரம் தலைமையிடமாய் மாறி யதற்குப் போப்பையரே காரணராவர். அவர் தெருக்

களில் நின்று கிறிஸ்து பெருமானின் அருள் மொழிகளை மக்கட்கு எடுத்துரைத்தார். அவர் இங்ஙனம் தெருக் களிற் பேசியபொழுது பிற சமயத்தார் சிலர் அவர்க்குத் துன்பம் விளைத்தனர்.

கிறிஸ்தவர் தொகை பையப்பையப் பெருகுவதைக் கண்ட பிற சமயத்தாரும் சிலர் போப்பையரது பிர சாரத்தைப் பல ஊர்களில் தடுக்க முயன்றனர். புதிய கிறிஸ்தவர்கட்குப் பல இடையூறுகளை விளைத்தனர். போப்பையர் சாயர்புரத்தை அடுத்த சுப்பிரமணிய புரத்தில் தெருவில் நின்று சொற்பொழிவாற்றுவது வழக்கம்.

அவர் ஒருநாள் அவ்வாறு பேசிக் கொண்டிருந்த போது ஓரம்மை மாட்டுச் சாணத்தைத் தண்ணீரிற் கரைத்து அவர்மேல் ஊற்றி விட்டாள். போப்பையர் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மலர்ந்த முகத் துடன் பேசிக்கொண்டேயிருந்தார்.

- நூல், மேனாட்டுத் தமிழறிஞர் (1951) பக் கம் 66, 77, 78, 79 நூலாசிரியர்: டாக்டர் மா. இராசமாணிக்கனார்.




## அம்பாபுரம் வேம்பய்யர்

வள்ளலார் தம் அன்பர்களுக்குச் சித்த நூலின் உண்மையை விளக்கச் செம்பு, ஈயம் முதலிய லோகங்களை ரஸவாதஞ்செய்தும் குளிகையும், ஔடதமும் முடித்தும் காட்டிக் கிணறுகளிலும் குளங்களிலும் எறிவர். வள்ளலார் இவ்விதம் பொன் செய்து காட்டும்போது உபயோகித்த சில வஸ்துக்களை உணர்ந்த அம்பாபுரத்து **வேம்பய்யர்** பிறரறியாது எடுத்துக் கொண்டுபோய்த் துருத்தி வைத்து ஊத அனலால் வெடித்துப் புகை மோதி இரண்டு கண்களும் அவிந்தன. சிகிச்சைகளால் குணமடையாது, வள்ளலாரிடம் வந்து நடந்த உண்மையை உரைக்கவே வள்ளலார் நகைத்து ஒரு கையில் ஜலங்கொண்டு அய்யரது கண்களை அலம்பிக் கண்கள் தெரியும்படி அனுக்கிரகித்தனர்.

- **நூல் :** திருவருட்பா (1924) இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள், பக்கம் 33. எழுதியவர் மோ. கந்தசாமி முதலியார்.

## கபீர்தாசர்

ஒருநாள் அத்தமிக்கும் வேளையில் மூவர் கபீர்தாசர் வீட்டுக்கு அதிதிகளாக வரக்கபீர் இவர்களுக்கன்னமிடல் வேண்டி மனைவிக்குக் கூற, மனைவி யொன்றுமிலாமை யாலும் கொடுப்பாரிலாமையாலும் திருடிக் கொண்டு வரக் கூற, கபீரும் அவர் மகன் கமாலும் ஒரு கடைக்குள் கன்னம் வைக்கக் கமா லுள்புகுந்து வேண்டிய தானியத்தைக் களவாடி தொளைவழி புகுந்துவருகையில் சொந்தக்காரன் காலைப் பிடித்துக்கொள்ளக் கமால் தானியத்தை தந்தையிடங்கொடுத்து, என் காலை யுடையவன் பிடித்துக் கொண்டமையால் என் தலையைக் கொண்டு போகவெனக் கபீர் அவ்வகைத் தலையை வெட்டியெடுத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்து நடந்ததை மனைவிக்குக் கூறினர். மனைவி குமரற்கு விசனமடைந்து அதிதிகளுக்கு அன்ன மருத்தினள். விடிந்தபின் மூவரும் ஸ்நானத்திற்குச் சென்றனர். செட்டி விடிந்தபின் அரசனுக் கறிவிக்க அரசன் சவத்தைக் கழுவேற்றக் கட்டளையிட்டனன்.

- நூல் : அபிதான சிந்தாமணி (1910) பக்கம் - 211. நூலாசிரியர் : ஆ. சிங்கார வேலு முதலியார்.

## சிவபுரக் கோயில் கல்வெட்டு

கும்பகோணத்திற் கண்மையிலுள்ள சிவபுரத்தில் கி. பி. 1239-ல் எழுதப்பட்டுள்ள கல்வெட்டொன்று அவ்வூர்க் கோயிலைச் சேர்ந்த இரண்டு சிவப்பிராமணர்கள் புரிந்த சிவத்துரோக இராசத்துரோகக் குற்றங்களைச் சிறிது விரித்துரைக்கின்றது. அஃது அவர்கள் இருவரும் சிவபுரத் தெழுந்தருளியுள்ள இறைவியின் அணிகலன்களைக் கவர்ந்து தம் காதற் பரத்தைக்குக்

கொடுத்தும் தம்மிடம் அளிக்கப்பட்டிருந்த கோயிற்குரிய நிவந்தப் பொருளை வேறு வகையில் செலவிட்டும், தம் நிலத்திற்குரிய அரசாங்க வரியைக் கொடாமல் மறுத்தும், மற்றும் பல வழிகளில் தவறாக நடந்தும், அரசனது ஆணைக்குக் கீழ்ப்படியாமல் அரசாங்க அலுவலாளரை அடித்தும், கன்னட வீரர்களோடு சேர்ந்து கொண்டு மக்களைச் சொல்ல முடியாத துன்பங்களுக்குள்ளாக்கி அவர்களிடமிருந்து ஐம்பதினாயிரம்காசுகள் வசூலித்தும் பல்வகைக் குற்றங்கள் புரிந்தனர் என்று கூறுகின்றது.

- நூல்: பிற்காலச் சோழர் சரித்திரம் (1951 பக்கம்- 198. நூலாசிரியர்: ஆராய்ச்சிப் பேரறிஞர் T.V. சதாசிவ பண்டாரத்தார். (அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி விரிவுரையாளர்)

## தலைமலை கண்ட தேவர்

இவர் மறவர், அந்தகர், கல்வி வல்லவர். மணத்தில் விருப்பங் கொண்டு கன்னிகையைக் கேட்க, அம்மறவர் சாதி வழக்கப்படி மும்முறை களவு செய்து அக்களவில் அகப்படாதவர்க்குப் பெண் கொடுப்பது போல் இவர் களவு செய்யாதவர் ஆதலால் மறவர் இவர்க்குப் பெண் தர மறுத்தனர். இவர் மணஞ் செய்துகொள்ளப் பொன் வேண்டிக் களவின் பொருட்டுத் திருப்பூவணத்திலுள்ள தாசி வீட்டில் அத்தாசியின் படுக்கை அறைக்கண் உள்ள கட்டிலடியில் ஒளித்திருந்தனர். தாசி தான் கட்டிலில் உறங்குமுன் திருப்பூவண நாதர்மேல் செய்யுள் பாடி முடிப்பது போல் கவியாடச் செய்யுள் முடியாது மயங்குகையில் அடியிலிருந்த தேவர் கேட்டுச் செய்யுளை முடித்தனர். தாசி திடுக்கிட்டு நீவிர் யார் எனத் தேவர் வரலாறு கூறித் தாசியிடம் பொன் பெற்று மணமுடித்துக் கொண்டனர்.

- நூல்: அபிதான சிந்தாமணி (1910) பக்கம் 495, 497. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார்.

## துறவியின் திருட்டு

ஆறாவது நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் உரோமராச்சியத்தை ஐஸ்டீனியன் எனும் அரசன் ஆண்டு வந்தான். அவன் பட்டுத் தொழிலின் வளர்ப்பு முறையை அறிய மிகவும் ஆர்வம் கொண்டிருந்தான். அந்தக் காலத்தில் பட்டுப் பூச்சியின் முட்டைகளை வெளி நாட்டிற்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று சீன அரசாங்கம் தடை விதித்திருந்தது.

இந்த அரசன் இரண்டு சந்நியாசிகளுக்கு லஞ்சம் கொடுத்து, சீனாவிற்குச் சென்று பட்டுத் தொழிலின் நுட்ப ரகசியங்களை நன்றாகப் பயிற்சி பெற்று வருமாறு அனுப்பினான். மேலும் திரும்பி வரும்பொழுது பட்டுப் பூச்சியின் முட்டைகளை ஒருவருக்கும் தெரியாமல் மறைத்துக்கொண்டு வரும்படியும் கூறினான். அரசனின் ஆணைப்படி அத் துறவிகள் சீனாவிற்குச் சென்று சில காலம் அங்கிருந்தபடியே பட்டு உற்பத்தி முறைகளின் இரகசியங்களை அறிந்து, பிறகு சீனாவிலிருந்து திரும்பும் போது மறைமுகமாக மூங்கில் குழாய்களினாலான தங்களுடைய கைத்தடியின் உள் அறையில் பட்டுப் பூச்சியின் முட்டைகளை வைத்து ஒருவருக்கும் தெரியாமல் ஐஸ்டீனியனிடம் சேர்ப்பித்தனர்.

- நூல்: பட்டுச் செல்வம் (1962) பக்கம் - 23 நூலாசிரியர்: கே.எஸ். லட்சுமணன்.

## மர்லின் மன்றோ (1926-1962)

மர்லின் மன்றோ ஹாலிவுட்டின் காதல் கடவுள்! அமெரிக்காவின் அன்ன நடையழகி! உலகிலேயே

நடிப்பின் மூலம் கோடி, கோடியாகச் சம்பாதித்துக் குவித்த பிரபல பணக்கார நடிகை! அவளுடைய நிர்வாணப் படமொன்றைக் காலண்டராக அச்சிட்ட ஒருவன் கோடி கோடியாக இலாபம் சம்பாதித்தான்.

இளமைப் பருவத்தில் மர்லின் மன்றோ சுமார் பன்னிரண்டு இடங்களில் வளர்க்கப்பட்டவள்.

மதுப் புட்டிகளைத் தொடுவதே பாபமென்று போதித்தனர் முதல் குடும்பத்தினர். மதுப் புட்டிகளுடன் விளையாட விட்டனர் இரண்டாவது குடும்பத்தினர்.

இன்னொரு குடும்பத்தில் அவள் வளர்ந்தபோது 'திருடி' எனப் பட்டம் சூட்டப்பட்டாள். அந்த வீட்டின் தலைவி விலையுயர்ந்த முத்தாரத்தைத் தொலைத்து விட்டாள். மர்லினுக்கு முத்தாரமென்றால் எப்படியிருக்கும்—அதன் மதிப்பு என்ன வென்பது கூடத் தெரியாது. ஆனால் முத்தாரத்தைத் திருடிய குற்றம் அவள்மீது சுமத்தப்பட்டது. அவள் அதற்காகத் தண்டனைக்குள்ளானாள்.

- நூல்: மர்லின் மன்றோ வாழ்க்கை வரலாறு *(1962)* பதிப்புரை பக்கம் - 1, 8, 10, 11. நூலாசிரியர்: ஆரூர் அமுதா

## வால்மீகி

வால்மீகி—வட மொழியிலே ராமாயணஞ் செய்த வித்துவ சிரேஷ்டர். கிராதர் தொழிலை மேற்கொண்டு காட்டிலேயிருந்து வழிப்போக்கர்களை அலைத்து அவர்கள் பொருளைக் கவர்ந்தொழுகும் நாளில், நாரதர் கண்டு ஞானோபதேசம் பண்ணி அவரை நல்வழிப் படுத்தினர். அதன் பின்னர் மகா தவசிரேஷ்டராகி ராமாயணத்தை இயற்றி முடித்தார்.

● நூல்: அபிதான கோசம்(1902) பக்கம்-372.
நூலாசிரியர்: ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

## ஜம்புலிங்கம்

பெருங் கள்ளக்கூட்டத் தலைவனான ஜம்புலிங்கம் சென்ற மாதம் 22-ம் தேதி மாலை சுமார் 4-மணிக்கு ரிசர்வ் கான்ஸ்டேபில் உடையை அணிந்து கொண்டு ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவிலுள்ள பேய்க்குளம் என்னுங் கிராமத்திற்குள் நுழைந்து சுமார் பன்னிரண்டாயிரம் ரூபா கொள்ளையடித்துச் சென்றானாம்.


● இதழ்: நவ சக்தி 1923-ஆகஸ்டு-3.

## ஷேக்ஸ்பியர்

ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் விலங்கினங்கள், புள்ளினங்கள் போன்றவற்றின் செயல்களும் பிறவும் விரவி வருவன. ரோவே அவர்கள் ஷேக்ஸ்பியரின் வாழ்வைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஷேக்ஸ்பியர் மானொடு மருண்ட செய்தியொன்றினைச் சுவைபட நவில்கின்றார். பொதுவாக அக்கால இளைஞர்கள் வேட்டையாடுதலிலும் குறிப்பாக மானைத் தொடர்ந்து பிறரறியாது பிடித்தலிலும் வேட்கை மீக்குற்றவராகத் திகழ்ந்துள்ளனர். அக்கூட்டத்தில் இணைந்த ஷேக்ஸ்பியரும் மான் பிடிக்க விழைந்ததாகவும், ஒரு முறை ஸ்ட்ராட் போர்டுக்கு அண்மையில் இருந்த சார்லகோட் செல்வர்களுள் ஒருவரான தாமஸ்லூசி என்பவரின் பூங்காவில் மானைத் திருடிவிட்டு, அதன் காரணமாக அப்பெருமகனால் சவுக்கடியும், சிறைவாசமும் தண்டனையாகப் பெற்றதாகவும் மொழியப்படுகின்றது.

தாமஸ் லூசி கொடுத்த தண்டனை காரணமாகவே ஷேக்ஸ்பியர் இலண்டனுக்குச் சென்றதாகக் கூறும் மரபு இன்றுவரை நிலவி வருகிறது. ஷேக்ஸ்பியர் காலத்தில் விதிகளின்படி மானைத் திருடுபவர்கட்கு மூன்று திங்கள் சிறைத்தண்டனையும், ஏற்பட்ட இழப்புப் போன்ற மூன்று மடங்கு பணமும்தான் விதிக்கப்படலாமேயன்றி சாட்டையாலடித்தல் இயலாதது என்பர். அன்றியும் தாமஸ் லூசியின் மான் பூங்கா அக்காலத்தில் இருந்ததே இல்லையாகலின் 1794-ல் ஷேக்ஸ்பியர் மானைத் திருடியது அயர்லாந்துக்கு அண்மையில் இருந்த பல்புரோக்குப் பூங்காவில் தான் என அயர்லாந்து நாட்டு சாமுவேல் என்பவர் கூறுவார். பல்புரோக்கில் உள்ள ஒரு கிராம வீட்டில் 1795-ம் ஆண்டில் ஷேக்ஸ்பியர் அவ்வீட்டில் தற்காலிகமாக சிறை வைக்கப்பட்டிருந்ததாக ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

- நூல்: கவிஞர் ஷேக்ஸ்பியர். பக்கம் 25, 26. நூலாசிரியர்: வை. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ., (தமிழ்த்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி)




## அறுவகைச் சமயக் குருமாரும்-புத்தரும்

பௌத்த மதத்திற்கு, ஏற்பட்ட வெற்றியினாலும் தங்களுக்கு உண்டான தோல்வியினாலும் அவமானமும் பொறாமையும் கொண்ட அறுவகைச் சமயக் குருமாரும் புத்தர் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள நினைத்தார்கள். அவர்கள் நேர்மையான வழியைவிட்டுக் கீழான இழிந்த முறையைக் கையாண்டார்கள். தங்கள் மதத்தைச் சார்ந்த சிஞ்சா மாணவிகை என்னும் பெயருள்ள ஒரு அழகுள்ள மகளைத் தூண்டிவிட்டு, பகவன் புத்தர் மீது அவதூறு கூறும்படி ஏவினார்கள். அவளும் அதற்கு உடன்பட்டாள்.

சிஞ்சா மாணவிகை, நாள்தோறும் இரவு வேளையில் பகவன் புத்தர் தங்கியிருந்த இடத்திற்கு வருவதும் காலை வேளையில் அவ்விடத்திலிருந்து போவதுமாகப் பலரும் பார்க்கும்படி பல நாட்கள் செய்து வந்தாள்.

இவ்வாறு பலமுறை இவளைப் பார்த்தவர்கள் இவள் மீது ஐயங்கொண்டார்கள், ஊரார் இதைப் பற்றி அவதூறு பேசவும் தொடங்கினார்கள். பிறகு அவள், வயிற்றில் கருவாய்த்துக் கர்ப்பம் கொண்டவள் போல நடித்தாள். கர்ப்பப் பெண்ணின் வயிறு போன்று மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பொருளை வயிற்றில் கட்டிக்கொண்டு சூல் கொண்டவள்போல நடித்தாள். இவ்வாறு நடித்து ஊராரிடத்தில் ஐயத்தையும் அபவாதப் பேச்சையும் உண்டாக்கினாள்.

ஒன்பது மாதம் சென்ற பிறகு, ஒரு நாள் மாலை பகவன் புத்தர் தரும போதனை செய்துகொண்டிருந்த அந்தச் சபையிலே சென்று, பகவன் புத்தர் மீது கூடா ஒழுக்கக் குற்றம் சாற்றினாள். தான் கர்ப்பமானதுக்குக் காரணமாக இருந்தவர் புத்தர் என்றும், தனக்குப் பிள்ளைபேறு உண்டாகும் காலம் நெருங்கிவிட்டபடியால் அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் எல்லோருக்கும் மத்தியில் சென்று கூறினாள். அப்போது பகவன் புத்தர் தமது உபதேசத்தை நிறுத்திக் கொண்டு, "தங்காய்! நீ கூறுவது மெய்யா பொய்யா என்பது எல்லோருக்கும் தெரியாது. ஆனால் அதன் உண்மை உனக்கும் எனக்கும் தெரியும்" என்று கூறினார். அப்போது, அதிசயம்! அவள் கர்ப்பவதிபோல வயிற்றில் கட்டியிருந்த மரத்துண்டு அவிழ்ந்து கீழேவிழுந்து அவள் கால் விரல்களைக் காயப்படுத்திற்று! சக்கரன் (இந்திரன்) தனது ஏவலாளர்களை ஏவ, அவர்கள் சுண்டெலிகள் போல் சென்று, கயிற்றைக் கரித்து, அவள் வயிற்றில் கட்டியிருந்த மரத்துண்டு அறுந்து விழும்படிச் செய்தார்கள்! அப்போது அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் உண்மையறிந்து அவளை வைது அடித்துத் துரத்தினார்கள். அவமானம் அடைந்து அவ்விடத்தினின்று அவள் ஓடினாள்.

- நூல்: கௌதம புத்தர் (1969) (இரண்டாம் பதிப்பு) பக்கம்—172, 173, 174. நூலாசிரியர் : மயிலை. சீனி. வேங்கடசாமி

## கரிகாற்சோழராசனும் கருணாகரனும்

கலிங்கமானது, ஆழ்கடலிலே, ஊசிக் காந்தத்தினாலே ஆகிய கோட்டைகளைக் கொண்டது. அந்தக் கோட்டைக்குள்ளே பெண்களல்லாமல் ஆண் பிள்ளைகள் ஆயிரம் பேர் சுத்த வீரர்களாயிருந்தார்கள். மற்றத் தீவுகளிலே இருக்கிற பேர்கள் அந்தக் கோட்டையைச் கைவசம் பண்ணவெண்ணிக் கப்பல்களிலே படையேற்றிக் கோட்டையின் பேரில்கொண்டுநிறுத்திப் பீரங்கிக்குண்டு களினாலே, ஊசிக் காந்தக் கோட்டையை இடிக்க வேண்டுமானால், அந்தப் பீரங்கிக்குண்டு போகிறபோது அது ஊசிக் காந்தக் கோட்டையாகையினால், வலிய அந்தக் கோட்டைக்குள்ளிருக்கிற குண்டையிழுத்துக் கோட்டைக்கு வலுக் கட்டினாப்போலே, கோட்டைக்கு மேலே குண்டுகள் ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஆதலால், அந்தக் கோட்டையை ஒருத்தராலேயும் வாங்கக் கூடாமலிருக்கிற நாளையிலே, கரிகாற் சோழ ராசாவும் மந்திரி கருணாகரன் புத்தி கோசாரத்தினாலே (கூர்மையினாலே) கொலு தாசிகளிலே சமர்த்திகளாகவும் யௌவனமான ரூபவர்ணங்கள் வாய்ந்தவர்களாகவும் ஆயிரந் தாசிகளைச் சமுத்திரக்கரையில் மாடி வீடு கட்டி அதில் கொண்டு போய் வைத்து ஆயிரம் பேரும் ஆடையாபரண பூஷணாதிகளாலும், களப கஸ்தூரி பரிமள சுகந்தாதிகளாலும் அலங்காரம் செய்து ஆயிரம் மாடிகளிலும் ஆயிரம் பேரும் ஆயிரம் பூர்ண சந்திரோதயம் போலே வதனங்களைக்காண்பித்துநிற்கப் பண்ணினான்.

அந்த நிதானத்தைக் கலிங்கக் கோட்டையார் கண்டு இந்த அதிசயத்தைப் போய்ப்பார்த்துவர வேண்டுமென்று

நாலு பேர் ஆறு பேர் புறப்பட்டுக் கள்ளப்பாதை வழியாய் சீக்கிரம் சமுத்திரக்கரை மாடி வீடுகளை யடுத்து வந்து பார்க்கும் போது, அந்தந்த ஆளுக்கு ஒரு தாசியாக இறங்கி வந்து உபசாரம் பண்ணிக் கூட்டிப்போய் அறுசுவை பதார்த்தங்களுடனே சாப்பாடு பண்ணி வைத்துச் சப்பிர மஞ்ச கோளத்தின் பேரில் அநேக லீலா விநோதங்கள் நடத்துவித்து, வெகு நயங்களைக் கொடுத்து அனுப்புவிக்க அவர்கள் கோட்டைபோய்ச் சேர்ந்து, அவனவனுக்கு இஷ்டமான பேர்களைத் திரும்பக் கூட்டி வருகிறது. அவர்களும் (தாசிகளும்) அந்தப்படிக்குத் தாசிகள் நயங் கொடுக்கிறது.

ஆக இந்த வகையாய் ஆயிரம் பேரும் ஆயிரந் தாசிகள் வீட்டிலும், ஒரு தினத்தில்வந்து சேரும்படி லாலினை (இச்சக வார்த்தை)ப் பண்ணிஒரு தினத்தில்வந்து சேர்ந்தவுடனே ஆயிரம் வீட்டுக் கதவையும் கெட்டிப்பண்ணிச் சாத்திக் கொண்டவளவில் விடியற்கால மாச்சுதென்று, ஆயிரம் பெண்களையும் ஆயிரம் புருஷர்களும் கதவு திறந்துவிடச் சொல்லி, பரிதாபப் பட்டவர்களை, முன் பாடியிருக்கிற கலிங்கத்துப் பரணியைப் பாடச் சொல்லி அதற்கு உரை கேட்டால் அந்த நயமும், சிங்காரமும், அர்த்த பாவங்களும் (பொருள் நயங்கள்) தெரியவரும், அந்தச் பெண்கள் கதவு திறவாமல் விடிந்த பிறகு கருணாகரனும் படையுமாக வந்து கதவு திறந்து ஆயிரம் பேரையும் கைவசம் பண்ணி அவர்களைக் கொண்டு, தானே அந்தக் கலிங்கக்கோட்டையைக் கைவசம் பண்ணினான்.

● நூல்: செயங்கொண்டார் வழக்கம் (1955 பக்கம்—13, 14. (உரை விளக்கத்துடன்).

## கிருஷ்ண தேவராயரின் மனைவி சின்னதேவி

கிருஷ்ணதேவராயர் நரபதி வம்சத்தில் தோன்றியவர். அவரது இராஜயத்தின் தலை நகர், இப்பொழுது

பல்லாரிக்கு மேற்கே சுமார் 30 மைலுக்கப்பாலுள்ள ஹோஸ்பெட்டுக்கு ஆறு மைல் பாழடைந்திருக்கும் ஹம்பி என்று சொல்லப்படும் விஜயநகரம்.

நரபதி வம்சத்தின் முதலாவது அரசராகிய நரசிம்ம ராயருக்கு இளைய குமாரராக, கிருஷ்ண தேவராயர் தோன்றினார். அவர் சுமார் கி.பி. 1489—ல் நரசிம்ம ராயரது இரண்டாம் பெண்சாதி நாகம்மாள் வயிற்றில் உதித்தார். அவர் தன் தமையனும் நரசிம்மரது முதல் தாரத்தின் பிள்ளையுமான வீரநரசராயருக்குப் பிறகு கி.பி. 1509-ல் சிங்காதனமேறி, 22 ஆண்டுகள் இவ்வையகத்தை ஆண்டு வந்தார்.

கிருஷ்ணதேவராயருக்கு அனேக மனைவியர் இருந்தனர். அவர்களில் இருவரே முக்கியமானவர். முதலில் அவர் கனிக்கிரியை யாண்ட வீரருத்திர கஜபதியின் பெண்ணாகிய **சின்னதேவியை** மணந்தார். ஆயினும் அம்மணம் அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. ஏனெனில் சின்னதேவியின் தாயார் முதலானவர்கள் கிருஷ்ணதேவரைத் தாசி மைந்தனென்று இழிவாகப் பேசி, பள்ளியறையில் அவரைக் கொல்லச் சின்னதேவியைத் தூண்டினார்கள். அவளும் அவ்வாறே செய்ய எத்தனித்தாள். இதைக் கண்டு கிருஷ்ணதேவர் அப்பாஜியின் யோசனையின்மேல் அவளைப் புறக்கணித்து அவளுக்கு வேண்டிய செல்வத்தையும் கொடுத்தனுப்பி விட்டார்.

- நூல் : இந்திய பூபதிகள் சரிதை (1930) பக்கம்— 35, 43. நூலாசிரியர் : T. V. கணேசன், B.A., L.T., (சென்னை, பச்சையப்பன் கல்லூரிப் பள்ளிக்கூடச் சரித்திர ஆசிரியர்)

## குப்பிச்சி

திருவிடைச்சுரம் என்பது செங்கல்பட்டிற்குச் சமீபமாக தென்பாரிசத்திலுள்ளது. இதில்ஓர் ஆலயமுங் கோட்டையுமிருக்கின்றன. இக் கோட்டையின் அகல நீளம் தெற்கு வடக்காக 1141 அடியும் கிழக்கு மேற்காக 1200 அடியும் இம்மதிலைச் சுற்றியுள்ள அகழியின் அகலம் 30 அடியுமாக விருக்கின்றன. இக்கோட்டை தற்காலம் அழிவுற்றிருந்த போதிலும் ஆதியில் ஓர்சிறந்த சிறுநகரமாயிருந்த தென்பதற்குச் சந்தேகமில்லை. இச் சிறுநகரினாலயத்தின் திரு இடைச்சுரநாதரைத் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரமே போதிய சான்றாகும்.

இவ்வளவு மகிமை பெற்ற க்ஷேத்திரத்திலே ஆதியிலே வம்சபரம்பரையாகச் சிற்றரசர்களால் சிறு நகரமாகிய திருவிடைச்சுரத்தை ஆளப்பட்டு வந்தது. இங்ஙனம் ஆண்டுவரும் நாட்களிலே கி. பி. 1509-ம் ஆண்டுக்கு மேல் கிருஷ்ணதேவ மகாராயர் விஜயநகர ராஜ்ஜியத்தை அரசுபுரிகையில் காந்தவராயன் சேத்துராயன் என்னும் இரண்டு சகோதரர் தங்கள் பழைய கோட்டையைப் பலப்படுத்தி அரசு செய்து வருகையில் இவர்கள் மேற்படி ராயர் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய பகுதியைச் செலுத்தாமையால் இவ்வன்னியராகிய அரசர்மீது படையெடுத்துச் செல்லும் படி படைத்தலைவர்க்குத் திட்டஞ் செய்து அனுப்ப, அவர்கள் இச்சிற்றரசர்களைச் செயிப்பதற்குக் கூடாமையாயிருந்தமையால் காந்தவராயன் அபிமானித்திருந்த குப்பிச்சி யென்னுந் தாசிக்கு நாலு பை பொன் லஞ்சங்கொடுப்பதாக அவளுக்குச் சொல்லிப் பாளையக்காரர் அனுப்பியபடியே அவள் விஷத்தை வைத்துக் காந்தவராயனைக் கொன்று அவனது தலையை அரிந்து பாளையக்காரரிடம் சேர்த்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டு போய்விட்டார்கள்.

இதைக் கேள்வியுற்ற அவனது சகோதரன் சேத்து ராயன் ஆறாத்துயரடைந்து உக்கிர ஆவேசங் கொண்டு தன் தமையனுக்குச் சதிசெய்த குப்பிச்சியையும் அவளது கூட்டத்தாரையும் மாடுகளைப் பிணைக்கட்டுவதுபோல் அவர்களைக் கட்டி ஓர் ஏரியில் யாவரையும் வெட்டும்படி செய்தான். இப்போதும் அவ்வேரியும் குன்றும் செங்கல் பட்டிற்கு மேற்கே 10 மைலிலும் பழைய சீவரத்திற்கும் பாலாற்றின் தென்பக்கத்திலு மிருக்கின்றன. இவற்றை பிணாயேரி யென்றும் குப்பிச்சிக்குன்று என்றும்அழைக்கப் பட்டு வருகின்றது.

● நூல்: வருண தருப்பணம் (1907) பக்கம் - 255, 256. நூலாசிரியர்: கா. கோபால் நாயகர். (வன்னியகுல க்ஷத்திரிய மகாசங்க இன்ஸ்பெக்டர்)

## சரபோஜி மன்னனின் மனைவி

முதற் சரபோஜி (1712 - 1728) — இம் மன்னன் சதாரா வம்சத்தைச்சார்ந்த ஒருபெண்ணை மணந்தான். இவனுக்குச் சந்தான பாக்கியம் கிட்டவில்லை. இவனது ராணி, தான் கருத்தரித்ததாகப் பாசாங்கு செய்து, ரூபி என்னும் ஒருத்தியின் குழந்தையைத் தான் பெற்றதாக உலகிற் கறிவித்ததாகவும், அவனுக்கு 'சாவாயி ஷஹாஜீ' எனப் பெயர் வழங்கி வந்தது எனவும், அவ்வுண்மையைத் தன் சகோதரன் மூலம் அறிந்த சரபோஜி அவ் விராணி யையும் புதல்வனையும் தஞ்சையை விட்டு அகற்றி விட்டான் எனக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

● நூல் : சரஸ்வதி மஹாலும் தஞ்சை வரலாறும். பக்கம்-37, 38. நூலாசிரியர்: O·A. நாராயணசாமி, BA., BL.,

## தீசன் மனைவி (கி. மு. 307-267)

தீசன் அரசியற்றுங் காலையில், அவன் மனைவி தன் கொழுநனுக்குப் பின், தன் கொழுந்தன் மகாநாகன் தானே அரசனாக முயன்று தன் புத்திரனின் இராச பட்டத்துக்கு இடறுகட்டையாக நிற்பானெனநினைந்து, அவனுயிரைப் பறிப்பதற்காய், வாயொடுங்கிய ஓர் பாத்திரத்துட் கழுத்து மட்டாய் மாங்கனிகளை யடுக்கி, நஞ்சூட்டிய கனி ஒன்றை அவற்றின் மேலேவைத்து, அவற்றை உபகாரப் பொருளாக அவனுக்கு அனுப்பி வைத்தாள். குளக்கட்டு வேலையிலமர்ந்திருந்த மகாநாதன் இந்த அவகடத்தையறியாது பாத்திரத்தைப் பெற்று அச் சமயந்தன்னுடனிருந்த அவள் புத்திரனுக்கு அதினின் றெடுத்த முதற் கனியைக் கொடுக்கச் சிறுவன் அதை யுண்டு தக்ஷணமே உயிர் விட்டான். ''பிறர்க்கிடு பள்ளந் தான்விழு பள்ளமாயிற்று''.

- நூல்: இலங்கைச் சரித்திரம் (1904) பக்கம்-16. நூலாசிரியர் : அர்ச் . சூசையப்பர் சபை சந்நியாசி.

## ரஞ்சித் சிங்

கோஹினூர் வைரம் பண்டைக் காலத்தில் பாரத வீரர்களான பாண்டவர்கள் வைத்திருந்ததாகப் புராண கதைகள் கூறும். ஆனால் பிற்காலத்தில் அது கோல் கொண்டாவில் கிடைத்தது. பின்பு பதினேழாம் நூற்றாண்டில் மொகலாய சக்கரவர்த்தியாக விருந்த ஷாஜஹான் அவ்வைரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு அது அவனது சந்ததியார்களிடமே யிருந்தது. கடைசியாக நாதர்ஷா இந்தியாவின் மேல் படையெடுத்து டில்லியை யழித்த போது, அவ் வைரத்தை

டில்லியில் ஆண்ட மொகலாய அரசன் மகம்மதுஷாவிட மிருந்து பிடுங்கிக் கொண்டான். சில வருடங்களுக்குப் பிறகு நாதர்ஷா இறந்த பொழுது அவன் பின் வந்தோனான ஆமத்ஷா அப்தாலி அவ்வைரத்தை வைத்திருந்தான். பிறகு அவ்வைரம் அவனது சந்ததியாரிடமே மாறி மாறி இருந்தது. கடைசியில் அது ஆப்கானிஸ்தானத்தை யாண்ட ஷாஷுஜாவிட மிருந்தது. சிறிது காலங்கழித்த பிறகு ஷாஷுஜாவை டோஸ்டு முகம்மது என்பவன் ஆப்கானிஸ்தானத்திலிருந்து துரத்தித் தான் சிங்காதன மேறினான். அப்பொழுது ஷாஷுஜ பஞ்சாப் வந்தடைந்தான். அக்காலை ரஞ்சித் சிங்கன் மிக்க உபசாரத்துடன் அவனையும் அவன் குடும்பத்தையும் வரவேற்றான். ஒரு பெரிய மாளிகையை அவர்கள் வசிக்க ஏற்பாடு செய்தான். ரஞ்சித் சிங்கன் ஷாவிற்கு தன் நாட்டில் இடங்கொடுத்ததற்கு முக்கிய காரணம், அவனிடமிருந்த கோஹினூர் வைரத்தை அபகரிக்க வேண்டியே யொழிய வேறில்லை.

ஷாஷுஜா பஞ்சாப் வந்தடைந்து கொஞ்ச நாட்களான பிறகு, ரஞ்சித் சிங்கன் ஒரு நாள் ஒரு வேலையாளை ஷாவினிடம் அனுப்பி அவன் வைத்திருக்கும் வைரத்தைக் கொடுத்தனுப்பச் சொன்னான். ஷாஷுஜா அவ்வைரத்தினருமை தெரித்தவனாதலால், அவன் "அவ்வைரம் தற்சமயம் என்னிடம் இல்லை. யான் ஆப்கானிஸ்தானத்தை விட்டு இங்கு வருகையில் எனது உயிர்ச் சினேகனான ஒரு வியாபாரியிடம் கொடுத்துப் பதனப்படுத்தி வந்தேன். ஆகையால் தங்களுடைய வேண்டுகோள்படி செய்ய முடியாமை பற்றி மிகவும் விசனிக்கின்றேன்" என்று சொல்லியனுப்பினான். ஆனால் ரஞ்சித் சிங்கனோ ஷாஷுஜாவின் வார்த்தைகளை முழுப்பொய்யென்றும் அவ்வளவு பெயர் பெற்ற வைரத்தை எவரும் பிறரிடம் கொடுக்க மாட்

டார்களென்றும் எண்ணினான். எப்படியாவது தான் அவ்வைரத்தை அடைய வேண்டுமென்று, சாம தான பேத தண்டம் முதலிய நால்வகை வழிகளையும் உபயோகிக்கத் துணிந்தான். ஆதலால் மறுபடியும் தன் பணியாளனை ஷாஷுஜாவினிடம் அனுப்பி அவன் சொல்லியனுப்பிய வார்த்தைகள் உண்மையல்லவென்று தனக்குத் தெரியுமென்றும், அவ் வைரத்தைத் தன்னிடம் சீக்கிரம் ஒப்புவிக்காவிட்டால் அதனால் அவனுக்கும் அவனது குடும்பத்திற்கு முண்டாகும் தீங்கைத் தான் முன்னாலேயே எச்சரிப்பதாகவும் பயமுறுத்தினான்.

ஆனால் ஷாஷுஜாவோ ரஞ்சித்சிங்கன் பன்முறை ஆளையனுப்பினாலும் முன் சொன்ன வார்த்தைகளையே திரும்பித் திரும்பிப் பகர்ந்தான். கடைசியில் ரஞ்சித் சிங்கன் வெகுளி மேற்கொண்டு, ஷாவின் வீட்டைச் சுற்றிக் காவல் வைத்து எவரும் உள்ளிருந்து வெளியிற் செல்லவாவது, வெளியிலிருந்து உட் செல்லவாவது முடியாமற் செய்தான்; உணவு கூட சரியாக அனுப்புவதில்லை. தன் நண்பர்களும் வேலையாட்களும் பெண்சாதி பிள்ளைகளும் பசியால் வாடிக் கஷ்டப் படுவதைப் பார்த்து மனஞ்சகியாமல் ஷாஷுஜா ரஞ்சித் சிங்கனுக்கு அவ் வைரத்தை யளிப்பதாக சொல்லியனுப்பினான்.

மறு நாள் அதிகாலையே ரஞ்சித் சிங்கன் மிக்க ஆவலுடன் ஷாவின் மாளிகைக்குப் போந்தான். ஷாவை "வைரம் எங்கே? சீக்கிரம் கொண்டுவரச் சொல்" என, அவன் ஒரு வேலைக்காரனைக் கோஹினூர் வைரத்தைக் கொண்டு வரக் கட்டளையிட்டான். அவன் அவ்வாறே சென்று ஒருசிறிய வெல்வெட் துணி முடிச்சைக் கொண்டு வந்து ஷாவினிடம் கொடுத்தான். ஷா, அதை ரஞ்சித் சிங்கனிடம் கொடுத்தான். ரஞ்சித் சிங்கன் அதை வாங்கி

முடிச்சை அவிழ்த்துப் பார்த்துத் தான் வெகு நாளாக அடைய ஆவல் கொண்ட வைரம் இதுவே எனக் கண்டு, பிறவிக் குருடன் திடீரெனக் கண்பார்வை யடைந்தால் எவ்வளவு களிப்படைவானோ அவ்வளவு களிப்பெய்தினான். உடனே அவன் எழுந்து ஷாவுக்கு வந்தனம் செய்யாமலும் அவனிடம் விடைபெற்றுக் கொள்ளாமலும் திடீரெனத் தன் அரண்மனை சென்றான்; அதோடு நில்லாமல் மற்றும் அவர்களிடம் ஏதோ விலையுயர்ந்த நகைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டுத் தன் சேவகர்களை விட்டுப் பெண்கள் ஆண்கள் எல்லோரையும் சோதனை போட்டு வீட்டையும் தேடி இருந்தவை எல்லாவற்றையும் தன்னிடம் சேர்ப்பித்துக் கொண்டான்.

● *நூல் : இந்திய பூபதிகள் கதை (1930) பக்கம் - 70, 71, 72, 73. நூலாசிரியர் : T. V. கணேசன், B. A., L. T., (சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பள்ளிக்கூடச் சரித்திர ஆசிரியர்)*

## ராணி திஷ்யரட்சிதை

வயது முதிர்ந்த அசோகர் ஓயாவுழைப்பால் உடல் நலங்குன்றிஓவாப்பிணியுற்றுஅமளி பொருந்தியிருந்தார். எல்லா மருத்துவ நிபுணர்களும் நோயின் காரணம் அறியாது கலக்க முற்றனர். அரசர் தம் இறுதிப்போது சேய்மையிலில்லை என்று ஏக்க முற்றவராய் அமைச்சர்களையும், அரண்மனை யதிகாரிகளையும் மருங்கழைத்து "இளமையும் வனப்பும் வளமையும் வலிதும் வாழ்நாளும் நின்றனவல்ல'' என்று ஆசிரியர் இயம்பியவற்றை இன்று தெளிவாக உணருகிறேன். ஒரு கால், இப்பிணியினின்று மீளினும் அரசை நீத்து எஞ்சிய நாட்களைக்

குடாரமத்தில் கழித்து விடலாம் என்று கருதுகிறேன். ஆதலின் இத்தகுதி வாய்ந்த விடத்திற்குத் தக்கவன் முறைமையில் என்னை நிகற்றக் குணாலன் ஒருவனே அவனை...'' என்று தம் உள்ளக் கிடக்கையை மெல்ல வெளியிட்டு மேலும் பேச வலியற்று அயர்ந்தார். இவ்வுரைகளைச் செவியுற்ற குணாலனின் சிறிய தாய் திஷ்ய ரக்ஷிதை அவன் அரசனாவதைச் சகியாதவளாகி மனம் துடித்தாள். பழத்தை யதனுள்ளிருக்கும் புழுக்கள் அரிப்பது போன்று இவள் உடன் பிறந்த பொறாமைத் தீ இவள் உடலை வெதுப்பி, கனியிருப்ப வேப்பங்காய் கவரும் காகம் போலும், நீரிருப்ப சேற்றை நாடும் நத்தம் போலும், இயல்பாகவே கீழ்மையான கலகத்தை நாடுமாறு தூண்டியது. அடுத்து வாழும் இன்னுயிர்களை அழல் உமிழ்ந்து அழிக்கும் எரிமலை யொத்த இவள் உள்ளத்தினின்று முன்னொரு காலத்தும் பொறாமைத் தீ பொங்கித் தளும்பியது.

புத்த பகவான் ஞானவொளி பெற்ற போதிக் கண்டையில் விளங்கும் தூபியினிடத்தே அசோகருக்குத் திடமான பக்தியுண்டானது. அன்புப் பெருக்கால் கிடைக்கும் விலையேறப் பெற்ற ஒளிர் மணிகளை அதற்கு வரையாது கொடையளித்து வந்தார். இதை யறிந்த திஷ்யரக்ஷிதை மனம் பொறாது வெகுண்டு தன் தோழி மாதங்கியின் உதவியால் போதியைக் காய்ந்து உலர்ந்து போமாறு சூவ்ச்சி செய்தாள் தெய்வத்தரு காய்ந்து படுவதைப் பார்த்த அரசர் ஆவி சோர்ந்து உணவு ஏற்காமல் உயிரிழக்கவும் உறுதி பூண்டார். தன் சூழ்ச்சி அவர் உயிருக்கே கேட்டை விளைக்கும் என்று அஞ்சிய திஷ்யை முது மரத்திற்குப்பால் வார்த்து மீண்டும் செழிப்புற வளரச் செய்தனள். இவள் அழுக்காற்றின் பயன் அரசரை போதிக்குப்பால் பெய்தற்பொருட்டு

ஆயிரம் மணிக்குடங்களைத் தானமளிக்கச் செய்ததல்லால் இவள் பெற்ற நன்மை ஏதுமில்லை.

புனிதமான தெய்வ காரியங்களிலும் இடையூறு விளைத்து இன்னாதன செய்யும் இப்புலனடக்கமில்லாப் பேதை இது போழ்தும் ஒரு வஞ்சகம் நெஞ்சகத்தில் வளர்த்தனள்.

இவள் நடிக்கும் நாடகம் இனிது நிறைவேறுதற்கு அரசரின் அன்பையும் அறிவையும் அறவே கவர முற்படுவது முதன்மையான பாகமாதலின் பண்டை வினைப் பயனால் வந்தடுத்த கிருமி நோயை அவள் தீர்த்து விடுவதாக உறுதி கூறி அரசரை இணங்க வைத்தாள். இனி இந்நோயில் வருந்துபவர் வேறு எங்கேனும் உளரோவென்றறிய ஒற்றரை யேவிப் புலன் விசாரிக்குமளவில் கிருமி நோயால் மெலிந்து நலிந்த வற்றிய தோலும் வெற்றுயிராக்கையுமுடைய ஓர் இடையனை மருந்து தருவதாக இதங்கூறி அரசியிடம் அழைத்து வந்தனர். ஈரமில்லா நெஞ்சத்தாள் அவனைத் தனியிடத்துக் கூட்டிச்சென்று வல்லுயிர் நீக்கி வயிற்றைக் கீறி குடரைத் துருவி ஆராயவும், நோய்க்குக் காரணமான பெருங் கிருமியொன்றைக் கண்டனள். அதைக் கொல்லக் கருதி மருந்துகள் பல இட்டுப் பார்த்தனள். நன்மையில்லை, இறுதியாக வெண்காயம் கொடுக்க இறந்தது. சவச் சோதனையால் உரிய மருந்தின் உண்மையறிந்த மதி நுட்பமுடைய மடரவில் உடல் பூரித்தனள். தூவுணாவாகாத வெண்காயத்தை உடலையோம்ப ஒருபோதுஉட் கொள்ளுவதில் தீமையில்லையென்று அரசரைத் தேற்றுவித்து உண்ணுமாறு செய்து ஊணுறக்கமின்றிக் கண்ணிமைப் போல் காத்துக் குணமாக்கினாள்.

எதிர் பாராத இப்பேருதவியால் உலப்பிலா ஆனந்தமுற்ற அரசர் அவளை மகிழ்விக்கத் துணிந்து அவ

விழைத்த நன்மைக் கீடாக விரும்புவதை விளம்புமாறு வினவினர். நெஞ்சில் நஞ்சும் நாவில் நறவும் வைகும் பண்பினளான பைந்தொடியாள் பணிவு தோன்றப் பரவி, இராச்சிய காரியங்களைத் தன் விருப்பம் போல் ஏழு நாட்கள் வரை நிருவகிக்க அருளுமாறு கொஞ்சும் மொழியால் கெஞ்சினள். வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

மாசற்ற மனத்தினரிடத்து இல்லாத குற்றங்களைக் கற்பித்துப் புறங்கூறி அவர்கள் துன்புற இன்பம் நுகர்வ தாக நினைந்து நஞ்சைச் சுவைக்கும் கொடுமனக் கயவ ரில் தலைசிறந்த திஷ்யரக்ஷிதை இறுமாந்து கருமமே கண்ணாயினாள்.

தட்சசிலை அரசப்பிரதிநிதியின் அமைச்சர்களுக்குத் திருமுக மொன்றைத் துரிதமாகச் சிருட்டித்தார். கட்டளை நிறை வேறுதற்கு அரசர் பல் முத்திரை தேவையாதலின் அவர் ஆழ்ந்து உறங்கும் வரைப் பொறுத்திருந்து அரக்கிட்ட திருமுகத்தில் கரவாகப் பற்களைப் பதிய வைத்து அக்கணமே தூதுவனிடம் கொடுத்து கடிய வேகமாகத் தட்சசிலைக்குப் போமாறுப் பணித்தனள்.

- நூல்: அசோகன் இழந்த அருந்தனம் (1940) பக்கம்: 24, 25, 26, 27, 28, 29. நூலாசிரியர்: வரத. வீரப்பன்

## ராபர்ட் க்ளைவின் சூழ்ச்சி

அக்காலத்தில் அமீர்சந்த் என்பவன் தான் செய்த உதவிகளுக்குத் திருப்திகரமான நன்றியறிதலைக் காட்டும்படி ஆங்கிலேயர்களை வற்புறுத்தினான். நவாப்

ஸுராஜ் உதெளலாவை ஒழித்த பிறகு ஆங்கிலேயர்கள் பெறும் எவ்விதவருவாயிலும் தனக்கு நூற்றுக்கைந்து ''கம்மிஷன்'' வேண்டுமென்றும் விலையுயர்ந்த கற்கள், முத்துக்கள், முதலியவைகளிலும் பங்குகள் தேவையென்றும் அவைகள் மீர்ஜாபர் உடன் படிக்கையில் காணப்பட வேண்டுமென்றும் கேட்டான். அவைகள் அளவுக்கு மிஞ்சியவை என்றும் அவ்வளவு பேராசை பிடித்த அயோக்கியனை நல்வழிக்குத் திருப்புவது அசாத்திய மென்றும் தம் காரியம் முடியவேணடிய தவசியமென்றும் கருதிய க்ளைவ் ஒரு சூழ்ச்சியைச் செய்யத் தீர்மானித்து விட்டான். அஃதாவது இரண்டு தஸ்தாவேஜ்களை உண்டாக்க வேண்டியது. ஒன்றில் அமீர்சந்த் இஷ்டம் போல் உடன்படிக்கை காணப்பட வேண்டியது. மற்றொன்றில் அது மாத்திரம் நீக்கி விடப்பட வேண்டியது. முதலாவது சிவந்த காகிதத்தில் இருக்க வேண்டும், மற்றொன்று சாதாரணமாய் வெள்ளைக் காகிதத்தில் இருக்கவேண்டும். இவைகளைக்கேட்ட கப்பற்படையோன் வாட்ஸன், தான் அப்படிப்பட்ட ஒரு வஞ்சனைக்கு உடைந்தையாயிருக்கத் தயாராயில்லை என்றதனால் அவன் கையெழுத்தைத்தானே ''போர்ஜரி'' (Forgery) செய்யத்தயாராய்விட்டான். அப்படியே அந்த தஸ்தாவேஜ் அமீருக்குக் காட்டப் பட்டது.

வாட்ஸ் என்பவன். இரண்டாவது தஸ்தாவேஜ் எடுத்துக்கொண்டு கோஷா ஸ்திரீகள் பிரயாணஞ்செய்யும் டோலியில் ஏறிக்கொண்டு நள்ளிரவில் (1757 ஜுன் 4) மீர்ஜாபர் கையெழுத்தைப் பெற்றான்.

- நூல்: பரதகண்டம் (1926) பக்கம் 227, 228 நூலாசிரியர்கள்: வை. சூரியநாராயண சாஸ்திரி, M. A. L. T.

## வாரன் ஹேஸ்டிங்ஸ்

பரதகண்டத்தில் ஆங்கிலேயர்களுடைய ஆட்சியைச் சீர்திருத்தஞ் செய்யத் தக்கவன் வாரன் ஹேஸ்டிங்ஸ் (W. Hastings) என்பவன்தான் என்று திர்மானஞ் செய்யப்பட்டது. அந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் 1772 இல் ஏப்பிரல் மாதத்தில் கவர்னர் பதவியையடைவதற்குமுன் கிழ்ந்தியா வர்த்தக சங்கத்தில் குமாஸ்தா முதல் பல உத்தியோகங்களில் அனுபவம் பெற்றவனாதலால் அவனைப்-பழைய பெருச்சாளி எனக் கூறுவது உலக வழக்குக்குரியமுறையாகும். 1769ல்-இங்கிலாந்திலிருந்து கப்பலில் யாத்திரை செய்யும்போழுது அவன் வியாதியினால் பீடிக்கப்பட்ட காலத்தில் அவனுடன் கூட பிரயாணஞ்செய்த ஒருவன் சகாயஞ் செய்தான். அத்தகைய ஒருவன் மனைவி தாய் எனக் கருதப்பட வேண்டுமன்றோ! ஆனால் அவளை விவாகஞ் செய்து கொள்வதற்கு வேண்டிய சூழ்ச்சிகளை நிறைவேற்றினான். ஐந்து வருஷங்களுக்குள் மேலே குறிப்பிடப்பட்ட *உபகாரியின்மனைவி, கல்கத்தாவில் நவாப்மனைவியாய் விளங்கினாள். அவள் சொந்தப் புருஷனை விட்டு நீங்குவதற்கான பாரிஸில் நடந்த விவாக விலக்கு விவகாரச் செலவுகளெல்லாம் ஹேஸ்டிங்ஸினுடையது.

- நூல்: நமது பரதகண்டம்(1926) பக்கம், 265, 266, நூலாசிரியர்: வை. சூரியநாராயண சாஸ்திரி, M. A., L. T.,

## யூதாஸ்

யூதாஸ் இவன் இயேசுவின் பன்னிரண்டு மாணவர்களுள் ஒருவன். இவன் தன் குருவின் சத்துருக்களிடம் முப்பது வெள்ளிக்காசுகள் வாங்கிக்கொண்டு அவரைக் காட்டிக் கொடுத்த பாதகன்.

- நூல்: தன்னம்பிக்கை—பக்கம் 77




## அனுமானுக்கு வாலுண்டா?

இராமாயணத்தில் காணப்படும் வாலி, சுக்கிரீபன், அனுமான் வகையராக்கள், சரித்திர ஆராய்ச்சிக் காரர் கண்டிருக்கிறபடி இவர்கள் கொடி பற்றி வந்தபேர் என்பதாகவும் இக்குலத்தவர் கிறிஸ்துவுக்குப்பின் இருந்ததாகவும் இவர்கள்தான் கடம்பவன அரசரென்றும் வானரரென்றும் வழங்கப்பட்டவர்கள் இவர்களே என்றும் கண்டிருக்கிறார்கள். டாக்டர் மக்ளீன் துரை எழுதிய சென்னை அரசாட்சி புஸ்தகம் 1-வது வாலியம் 136& 137 பக்கம் வரை கண்டிருப்பதும் இவ்விஷயமாகவே. கிட்கிந்தாபுரி கடம்பவன முதல் அரசன், வாலி, சுக்கிரபன். இவர்கள் மந்திரி ஆஞ்சநேயர் என்ற அனுமான் அவருக்கு மற்றோர் பேர் நவக்கியாகரண பண்டிதர். இவர் மஹா பெலவான். இவர்கள் சேனைத் தலைவன் நளன். இவர்கள் படை அல்லது தளம் கூட்டம் கூட்டமாக விருக்கும். இவர்கள் கட்டும் உடை பயில்வான்கள் கட்டும் வால் லங்கோடுகள். இவர்கள் ஜிதேந்திரியர்

மனோவலிமையுடைய போன்றவர்கள். எதற்கும் பின்னடையா பலாட்டியர், பிடிவாதக்காரர். மற்கடக சம்பிரதாயப்படி வானரர் என்று அழைக்கப்பட்டார்கள் என்பதாகக் கண்டிருக்கிறார்கள். சோழவர் மரபு வாலிவகையரா விலங்கினமான குரங்கு வகையராவென்பது பொருந்தாத வசனம். **வானவர்** என்பது **வான்தேவநரர் மனுஷர்** தேவமனுஷர் என்று பொருள் படும்படியான மறைபொருளான அக்கால வார்த்தையாகும். இவ்வார்த்தை பின்வழக்கத்துக்கு வந்ததென்பது நிச்சயம்.

- நூல்: அகம்படியர் மரபு விருத்தாந்தம் மூவரசர் குல விளக்கம் (1927), பக்கம்: 22, 23, 24, நூலாசிரியர்: தொண்டமானார் குருமூர்த்தி.

## அசோகன்

அசோகருடைய கொடுந் தன்மையைப்பற்றி இன்னும் அநேக கதைகள் சொல்லுவார்கள். அவருடைய ராஜ்ய பாலனத்தில், அற்பமான தப்பிதம் செய்தவர்களுக்குங்கூட குரூரமான தண்டனை விதிக்கப் பட்டது. என்பார்கள். அதனால், அபராதம் செய்தவர்கள் தப்பில் பிழைப்பது அரிதாயிருந்தது. அவருக்குப் பிரியமானவர்களும் அவரிடத்துத் தப்பிதம் செய்து பிழைத்ததில்லை.

ஒரு நாள் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகள் தத்தம் சுகதுக்கங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் அசோகருடைய விகார ரூபத்தைப் பற்றியும் பேசினார்களாம். அவர்கள் அப்படி வம்பளந்த செய்தி தெரிந்து அசோகர் அந்த ஸ்திரீகளை வெளியில் இழுத்துக் கொண்டு வரும்படியாகக் கட்டளை

யிட்டார். அவர்களை வெளியிற் கொண்டு வந்தபிறகு சேவகர்களுள் துஷ்டனான சண்டகரிகன் என்பவனை அழைத்து அந்த ராணிவாஸத்து ஸ்திரீகளை உயிரோடு தீக்குழியில் வீழ்த்திக் கொளுத்துமாறு கட்டளையிட்டாராம்,

● நூல்: அசோகர் சரித்திரம் (1915), பக்கம்: 19, நூல் வெளியீடு: சென்னை; ஸி, குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

## ஆறுமுக நாவலர் (1822-1879)

பெரிய புராணத்தினிடத்தே (ஆறுமுக நாவலருக்கு) இவருக்கு இருந்த அளவிறந்த பக்தியைக் கண்ட இவருடைய மூத்த தமையனார் தியாகராசர் என்பவர், இவருடைய பத்தியைச் சோதித்தற்காகப் "பெரிய புராணத்திலுள்ள கதைகளெல்லாம் கட்டுக் கதை" என்று இவருக்குச்சொல்லக்கூடிய ஒருவரிடத்திற் சொல்லிவிட்டார். இதனைக் கேட்டவுடனே இவர் கோபாவேசங் கொண்டு தமையனாரை வெட்டுவதற்கு ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு போனார். அவர் சிரித்துக் கொண்டு வீட்டுக் குள்ளே போய் விட்டனர். இவரை அங்கே நின்றவர்கள் பிடித்துக் கொண்டார்கள்.

● நூல்: நாவலர் சரித்திரம் (1955), பக்கம்-18 நூலாசிரியர்: யாழ்ப்பாணத்து நல்லூர் த. கைலாச பிள்ளை.

## இந்தியாவிற்கு ஆங்கிலம் பொது மொழியான வரலாறு

மெக்காலே (லார்டு தாமஸ் பாபிங்டன் மெக்காலே) இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே, இந்தியருக்கு ஆங்கிலக் கல்வி போதிப்பதற்கு என்றும் இந்தியரிடை ஆங்

கிலக் கல்வியைப் பரப்புவதற்கு என்றும் பத்துக் கல்வி அறிஞர்கள் அடங்கிய ஒரு 'கலைக்குழு' அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்பதின்மருள் கருத்து வேற்றுமை பலமாக ஏற்பட்டு விடவே, அவர்களால் பயன்தரத்தக்க காரியம் ஒன்றும் புரிவதற்கு இயலாது போயிற்று. அவர்களுள் ஐவர், மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து, சமஸ்கிருதம், பாரசீகம், அரபி போன்ற மொழிகளைப் படிப்பித்தல் வேண்டும் என்றும் போதிய பண உதவி செய்து அம்மொழிகளில் இன்னும் புதிய நூல்கள் பலவற்றை வெளிவரச் செய்தல் வேண்டும் என்றும் வாதித்தனர். மற்றை ஐவர், உயர்தரக் கல்வி ஆங்கிலத்தில் போதிக்கப்படல் வேண்டும் என்றும் பிற கலைகள் அனைத்தும் தாய் மொழிகளில் கற்பிக்கப்படல் வேண்டும் என்றும் கருதினர். மெக்காலே, பிற்பகுதியினரின் கருத்தையே பூரணமாக ஆதரித்தார். இந்திய மொழிகளை மட்டும் கொண்டு பூரணக் கலை அறிஞர்களாக ஆகிவிட முடியாது என்றும் ஆங்கில மொழியில் அரிய நூல்கள் பல இருப்பதால் அம்மொழி பயிலுவதன் மூலமே இந்தியர் உயர்வடைதல் கூடும் என்று கருதினார். உலக மொழிகளுள் ஆங்கிலம் சிறந்து விளங்குவது, மேலும் உலக மொழிகளுள் உள்ள நூல்களைக் காட்டிலும் ஆங்கிலத்திலேயே அரிய நூல்கள் பல எழுதப்பட்டிருக்கின்றன. அரசாங்க மொழியாகவும் அஃது அமைந்திருக்கின்றது. மெக்காலே இக்காரணங்களை எடுத்துக் காட்டி இந்தியர்களுக்கு ஆங்கிலப் படிப்பு அவசியம் என்பதை உறுதிப்படுத்தி விட்டார்.

1835—ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இந்தியக் கவர்னர்-ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு 'இந்திய மக்கள் ஆங்கிலம் படித்தல் வேண்டும்' என்று ஓர் அறிக்கை வெளியிட்டு, அதற்கென ஒரு 'கமிட்டி' ஏற்படுத்தினார். மெக்காலே அதன் தலைவராக அமர்ந்தார். தம் முழு

முயற்சியுடனும் ஊக்கத்துடனும் இந்தியாவில் ஆங்கில மொழியைப் பரப்பத் திட்டமிட்டார். இருபது வருட காலத்திற்குள் இந்தியர்களே ஆங்கில மொழியில் அறிஞர்களாகித் தங்கள் தாய் மொழிகளுடன் ஆங்கிலத்தைச் சிறப்பாகப் பரப்பி வருவர் என்று, அன்று மெக்காலே கூறியது பிற்காலத்தில் உண்மையாகி விட்டது.

- நூல்: மெக்காலே பிரபு பக்கம்-53, 54 55. நூலாசிரியர்: P. S. இராஜன். வெளியீட்டாளர்: K. பழனியாண்டி பிள்ளை & கோ; சென்னை.

## இராசகோபால பிள்ளை

கோமளேசுரன் பேட்டையில் அந்நாளில் இராசகோபால பிள்ளை என்பவர் கம்பராமாயணம் இலக்கணம் முதலிய நூல்களில் வல்லவராகத் திகழ்ந்திருந்தார்.

இராசகோபால பிள்ளை கடுமையான வைணவ மனப்பான்மை கொண்டவர். சைவ சமயத்தினிடத்தும் சிவ பரம்பொருளிடத்தும் அளவற்ற வெறுப்புடையவர். கோமளேசுரன் பேட்டை என்னும் பெயரில் 'ஈசுவர' என்னும் ஒலி இருப்பதற்காக அந்தப் பேட்டையின் பெயரைக் கோமளபுரம் என்று மாற்றிவிட்டார். மேலும் தம்மிடம் படிக்க வருபவர்களின் பெயரிலும் வைணவ மாற்றங்கள் சேர்ப்பார்.

வைத்தியநாத முதலியார் என்பவரை வாசுதேவ முதலியாராக மாற்றினார். நடராச முதலியாரை நாராயண முதலியாராகச் செய்தார். சண்முகம் பிள்ளையின் பெயரோடு சீநிவாச என்பதனையுஞ் சேர்த்துச் சீநிவாச

சண்முகம் பிள்ளை என்று மாற்றினார். தாம் அச்சிட்ட வில்லிபாரதத்தில் இருந்த சிவபரமான சில பாடல்களை நீக்கிவிட்டு அச்சிட்டார். இவ்வாறு இராச கோபால பிள்ளை அச்சிட்டமையால்தான் ஆறுமுக நாவலர் பாரதத்தை உள்ளபடியே தாம் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

- நூல் : தமிழ்ப் புலவர் வரிசை (1955), பக்கம்: 34, நூலாசிரியர்: சு.அ. இராம சாமிப் புலவர்.

## இராமனும், கிருஷ்ணனும் கடவுள்களா?

பஞ்ச பூதங்களில் உற்பவ சக்தியுடைய பிருதிவியைப் பிரம்மாவென்றும், இரட்சிப்புச் சக்தியுடைய ஜலத்தை விஷ்ணுவென்றும், அழிக்கிற சக்தியுடைய அக்கினியை உருத்திரனென்றும், ஒட்டலங்காரமாய் மூர்த்திகளாக்கி அவர்களுக்குப் பெண்டு பிள்ளைகளையும் கற்பித்து, அக் கற்பனைகட் கனுசரணையான கட்டுக் கதைகளையும் கற்பித்துப் புராணங்களாக்கி, இவர்களை ஆராதிக்கத் தாந்திராகம சாஸ்திரங்கம் உண்டாக்கி விடப்பட்டிருக்கின்றன.

இவைகளில் சில ஒரு மூர்த்தியை எங்கள் சாமி என்றும், சிலர் மற்றொரு மூர்த்தியை எங்கள் சாமி என்றும் தொழ ஆரம்பித்துப் பல சமயங்களாய் முடிந்து கல்யாண சந்தடியில் தாலி கட்ட மறந்து விட்டது போல் இவர்கள் மேல் விவரித்த முதற்காரணப் பொருளை ஆராய்ந்து பார்க்கச் சுத்தமாய் மறந்துவிட்டார்கள். முதலாளியை மறந்ததுமில்லாமல் கரும காண்டத்தில் சொல்லிய ஆராதனைகளையும் கைவிட்டு, இப்போது **மனுஷனாகிய இராமனையும், கிருஷ்ணனையும், சோமசுந்தர பாண்டியனையும்**

**இவர் மனைவி மீனத்துவச பாண்டியன் மகள் மும்முலைத் தடாதகை, உக்கிரவழுதி,** கொஞ்ச நாளைக்கு முன் ஸ்ரீ பெரும்புதூரில் பிறந்து வளர்ந்து காஞ்சிபுரத்தில் கல்வி கற்று ஸ்ரீமத் இராமாநுஜ பாஷியம் அருளிச் செய்ததினி மித்தம் இராமாநுஜா சாரியரென்கிற பேருடைய ஒரு ஐயங்காரையும் மற்ற பிராமணராகிய மாணிக்கவாசகர் சம்பந்தமூர்த்தி முதலாகிய பூர்வ காலத்து மனிதரையும் தொழுகிறதற்கு ஆரம்பித்தார்கள்.

● நூல்: பிரஹ்ம சமாஜநாடகம் (1871), நூலாசிரியர் : சைதாபுரம் காசி விசுவநாத முதலியார்.

## உன்மத்தா வந்திவர்மன்

சக்கர வர்மனுக்குப்பின் உன்மத்தா-வந்திவர்மன் கி.பி.937-வது ஆண்டில் காஷ்மீரத்து அரசனான். அவன் பார்த்தனுக்கு மைந்தன்—தன் மதங்கொண்டு பைத்தியம் பிடித்தவன் போலத் திரிந்தான். ஆகையால் உன்மத்தா வந்திவர்மன் என்னும் பெயர் வழங்கப்பட்டான். அவன் ஒரு சமயம் தன் தகப்பனாகிய பார்த்தனைக் கொன்று விட்டான், கர்ப்பஸ்திரிகளின் கர்ப்பத்திலிருக்கும்போதே சிசுக்களைப் பார்க்க வேண்டுமென்று துராசை கொண்டு ஆயிரக்கணக்கான கர்ப்பிணி ஸ்திரிகளின் அடிவயிற்றைக் கத்தியினால் தன் கையினாலேயே அரிந்தான். அச்சமயத்தில் அவர்கள் பட்ட வேதனையைக் கண்டு மகிழ்ந்து, கைகொட்டி நகைத்தான்.

● நூல்: ராஜ தரங்கிணி, பக்கம்—68.

# தமிழ் வித்தியார்த்தி விளக்கம்

தற்காலம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பஞ் செய்விக்கையிற் சுதேச பாஷாபிமானத்தை யொழித்தவர்களாய் நமது தமிழில் 247 எழுத்துக்களைக் கற்பிப்பதிலும் இங்கிலீஷில் 26 எழுத்துக்களை எளிதிற் கற்பிக்கலாமெனவும், அங்ஙனம் வித்தியார்த்திகள் கற்ற பின்னர் அப்பாஷையில் வாசகதாட்டியுண்டாமெனவும், அவ்வா றுண்டாய பின் கல்விச் சாலைக் கனுப்பினா லவண் சுதேச பாஷையைக் கற்றுக் கொள்வார்களென வும், கருதினவர்களாயிருப்பது குன்றாத சத்தியமே. இதற்குக் கலாசாலைகளிற் சுதேச பாஷை கற்பிக்கின்ற உபாத்தியாயர்களே சாஷியம் பகருவர்.

இங்கிலீஷில் 2-வது 3-வது வகுப்புக்கு வந்த நமது பிள்ளைகள் சுதேச பாஷைகளில் அக்ஷராரம்பஞ் செய்யப் புகுகின்றனர். (ஆங்கிலோ வெர்னாகுலர்) கல்விச்சாலை களில் தினந்தோறும் கற்பிக்கக் குறித்திருக்கும் நேரங்கள் ஆறுமணித் தியாலத்திற்கு மேற்படுவதில்லை. இதில் 5-மணித்தியாலம் ஆங்கிலேய பாஷையைச் சேர்ந்த பற்பல பாடங்களும், ஒரு மணித்தியாலஞ் சுதேச பாஷைப் பாடங்களும் போதிக்கப்படுவதுதான் அம்மாணாக்கரி டைச் சுதேச பாஷைகளில் எவ்வகைத்தான விர்த்திக் கெதிர் பார்க்கக்கூடும்?

முற்காலத்திற் சுதேச பாஷாபிமானிகள் தங்கள் பிள் ளைகள் நிகண்டு, திவாகரம், திருப்புகழ், நீதிநூல்கள், சதகங்கள், திருக்குறள், நாலடி, நைடதம், பஞ்சதந்திரம் கணக்கதிகாரங்கள் ஐயந்திரிபற ஓதியுணருந்தனையுஞ், சுதேச பாஷை யுபாத்தியாயர்கள் வசத்தில் அப்பிள்ளை களை விடுத்திருந்தனர். இப்போதவ்வாறு செய்பவரிலர்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் துரைத்தன பாஷையில் விர்த்தியடைந்தால் ஜீவனாம்சத்திற் கேதுவான உயர்தரப் பரீக்ஷைகளி லொப் பேறி முன்னுக்கு வருவாரென நம்புமாறு மாணாக்கர்களு மதேயபிப்பிராயங் கொண்டவர்களாய் அங்கிலேய பாஷையைக் கவனிப்பது போலச் சுதேச பாஷைகளைக் கவனித்துக் கற்கின்றாரில்லை.

வித்தியார்த்திகள் (யூனிவெர்ஸிட்டியாருடைய) உயர்தரப் பரீக்ஷைக்கும் போகின்ற வகுப்பில் வாசிக்குங்கால் "ஐயாஉபாத்தியாயரே எமக்குச்சுதேச பாஷையிற் குறித்திருக்கிற இலக்கியங்களில் செய்யுள்களையும் வாசகத்தையு மிலக்கணத்தையும்நும்மிடம் யாங்கள் தினந்தோறு மொருமணித்தியாலந்தான் கற்க வேண்டியவர்களாலிருப்பதினா லெமக்கு (இலக்கணமென்றால் அலக்கணாகவிருக்கின்றது) செய்யுள்களிலநேகங் கவிகளைப் பாராயணஞ் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். எமக்கு இலக்கண வினாக்களில் பகு சொற்பமான தொகைதான் வரப்போகிறது.ஆதலான்இலக்கணத்திற்படுகிறபாடுவீ" ணென்பதுபோலக் கதாப்பிரசங்கம் புரிந்து வருவதையில்லை யென்பாரில்லை.

- நூல்: தமிழ் வித்தியார்த்தி விளக்கம்(1894). பகுதி : முகவுரை. நூலாசிரியர்: பு.த. செய்யப்ப முதலியார் (சென்னை செயின்ட் மேரீஸ் காலேஜ் தமிழ் பண்டிதர்.)

## ஏழுகிணறு பாதாளப் பொன்னியம்மன்

நாற்பத்தைந்து வருடத்துக்கு முன்னே சென்னபட்டணத்தில் ஏழு கிணற்றண்டையில் இந்துக்கள் நல்ல தண்ணீரிறைத் தெடுக்குமொரு பெரிய கிணற்றில்

பொன்னம்மாள் என்னும் ஒருபெண் தண்ணீர் மொண்டு கொண்டிருந்த போது அவள் கால் வைத்திருந்த தரை யிடிந்து அவள் பூமிக்குள்ளே போய் விட்டாள். அவளுக் குச் சொந்தக்காரர் வந்து வெட்டிச் சோதித்தும் அவள் சரீரம் அப்போதகப்படவில்லை. அவ்விடம் பெரிய கிணற்றுப் பக்கமாயிருந்ததனால் அதைச் செவ்வையாக வெட்டிச் சோதிக்கப் பயந்தார்கள். அன்றேயொரு பூசாரி அவ்விடத்தண்டையிலொரு சிறு குடிசை போடு வித்து அவளைப் பாதாளப் பொன்னியம்மனென்று சொல்லித் தெய்வமாக்கி வன்னிக்கத் தொடங்கினான். சிலர் பேரில் ஆவேசமுண்டாகி அவர்க ளவளைத் தெய்வ மென்றார்கள். பின்னர் அவளுக்கு வெகு பிரபலமாக உற்சவம் பலி காணிக்கை முதலியவைகளும் நடந்து வந்தன. அவளது குடிசைக் கோயிலுங் கற்கட்டிடக் கோயிலாயிற்று. ஆனாற் சில வருஷங்களுக்கு முன் அந்தக் கிணற்றிலே தூரெடுத்த போது அவளது எலும்பு களகப்பட்டன. பிறகு அங்கே யவ்வளவு பிரபலமில்லை.

- நூல் சைவ மகத்துவ திமிரபாநு (1892), பக்கம்-18 நூலாசிரியர்: தஞ்சை மாநகரம் பரசமய குஞ்சர பஞ்சானன சோடசாவ தான அருளப்ப முதலியார்.

## ஐந்தாம் கன்ஸ்ரான்ரையின்

கி.பி. 741-ல் மூன்றாவது லீயோ அரசாண்டான். அவன் சிலைகளை இடித்து வீழ்த்தினான். அவனுடைய மகன் ஐந்தாம் கன்ஸ்ரான்ரையின் என்பவன் உருவ வணக்கத்தைக் கண்டித்தான். அவன் பெருங் கொலைப் பாதகன். மூக்கிறைச்சி சாப்பிடுதலில் ஆசையுடையவன்.

தன் அடிமைகளின் மூக்கைத் தானே வெட்டிச் சமைக்கச் சொல்வானாம்.

● இதழ் செந்தமிழ் (தொ.37), பக்கம்-457

## கம்பராமாயணத்தில் ஆறு பாடல்கள்

ஸ்ரீ கச்சியப்ப முநிவரர் சென்னை மாநகர்க்குச் சென்று அங்கே சிறிது காலம் வதிந்தார். அப்பொழுது அவ்விடத்துப் பக்த ஜனங்களும், பிரபுக்களும் வேண்டிக் கொண்டபடி விநாயக புராணம், சென்னை விநாயகர் பிள்ளைத் தமிழ் முதலியன இயற்றி, அவர்கள் அடியுறை யாக இரண்டாயிரம் வராகனிட, அதைக் கொண்டு திருவாவடு துறையில் ஆதீன பரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப் பணி அணி பெறச் செய்வித்தருளினார்.

விநாயக புராணம் அரங்கேற்றுஞ் சபைக்கு ஐயாப் பிள்ளை என்னும் ஒரு பெரிய பிரபு "நாம் வர இதென்ன இராமாயணமா" என்று சற்றே இகழ்ந்தனர். மற்றப் பிரபுக்கள் முனிவரர்க்கு அதனை மறைத்தும், அவர் தமது புராணத்தை தொடங்காது இராமாயணத்தை எடுத்துக் கொண்டு யாவரும் பிரமிக்கும்படி முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினார். உடனே அப்பிரபு நூறு வராகனும்' பீதாம்பர முதலியவைகளுங் கொண்டு போய், பாதகாணிக்கையாக வைத்துத் தீர்க்கதண்டஞ் சமர்ப்பித்து, சுவாமிகளது மகத்துவம் அறியாத ஏழையை தேவரீர் காத்தருளவென்று, விண்ணப்பஞ் செய்ய, அதன் பின்பு தமது புராணத்தைத் தொடங்கி அரங்கேற்றினார்.

● நூல் பேரூர்ப் புராணம் (1884) ஸ்ரீ கச்சியப்ப முநிவரர் சரித்திரச் சுருக்கம்.

பக்கம்-5. எழுதியவர் : மதுராபுரிவாசியாகிய இ. இராமசுவாமிப் பிள்ளை என்று வழங்குகின்ற ஞானசம்பந்தப் பிள்ளை.

## கஜினி மகமது

## (கி.பி. 997-கி.பி. 1030)

குசினிப்பட்டணத்துச் சக்கிரவர்த்தியாகிய மகமதானவன் 1024-ம் வருஷத்தில் கடைசி தடவையாக மாபெரிய படையொன்றெடுத்து இந்து நாட்டிற் போய் குசார்த்து சீமையிலிருந்த சோம நாதர் கோயிலையும் அதற்காகக் கட்டியிருந்த கோட்டையையும் முத்திக்கையிட்டான்.

அந்தக் கோயில் இந்து நாட்டிற் றென்றிசையிலுள்ளோருக் கெல்லமா முக்கிய ஸ்தலமென்பார்கள். அந்தக் கோயிலிற் செல்லும் விரிவான செலவுக்காக அதைச் சூழ்ந்திருக்கும் பல ராசாக்களுங் கூடி யிரண்டாயிரங் கிராமங்களதற்கு விட்டிருந்தார்கள். அதிலே நித்தியப்படி பூசை நிவேத்தியங்கள் செய்யுங் குருக்கள்ளிரண்டாயிரம் பேரிருந்தார்கள்.

இந்த மகமதுடைய வெற்றிகளைக் குறித் தெழுதியிருக்கும் பாரீசுக்காரர் அந்தக் கோயிலின் ஐசுவரியத்தைப் பேசியிருக்கும் வகை நம்புவதற்கரிதானதாயிருக்கின்றது. அந்தக் கோயிலிப்போது பிறீதுசுக்காரர் வசத்திலிருக்குந் தேவ பந்தருக்குச் சமீபமாகிய சமுத்திரக் கரையில் ஒருபக்கஞ் சலமற்றிருக்குமொரு தீவாந்தரத்திற் கட்டியிருந்தது.

இவன் சேனைகளை யெல்லாம்மொரு நிமைப்பொழுதிலே தும்சமாக்கவல்ல தங்கள் தெய்வங் கனுரசு பட்ட

ணத்தையும் டில்லிப்பட்டணத்தையும்விட்டு வநதுவிட்ட தாலந்தப் பட்டணங்களழிந்து போனதாக அந்தக் கோயிற் குருக்கள் பெருமையோடு பேசிக் கொண்டிருந் தார்கள்.

அந்தக் கோயில் ஐம்பத்தாறு தூண்கணிறுத்தி மிகவு முயரமாகக் கட்டியிருந்தது. அந்தத் தூண்களின் மேற் பொற்றகடு நெரித்து அங்கங்கு ரத்தின மிழைத்திருந்தது. அந்தக் கோயிற் கட்டிட முழுமைக்குமொரு தூண்டா விளக்கே கட்டியெரிந்தது. அதனொளி எண்ணிறந்த நவவிரத்தினங்களிற்றாவி வீசுங் காந்தியால் கோயில்முழு மையும் பிரகாசித்தது.

அந்தக் கோயில் நடுவில் சோமநாத விக்கிரகமிருந் தது. அது ஐம்பது முழவுயரமாகிய வொரே கல்லில் செய்து அதில் நாற்பத்தேழு முழம் பூமியில் மறையஸ்தா பித்திருந்தது. இதற்கு கலியுகாதி முதல் தீபதூப வாரா தனை நடந்து வருவதாக பிராமணர்கள் சொல்லுவார் கள். இதனபிஷேகத்துக்கு உதயகாலமுஞ் சாயங்கால மும் ஆயிரத்திருநூறுமயில் தூரத்திலிருக்குங் கங்கைநதி யிலிருந்து சலம் வரும். அந்தக் கோயிலைச்சூழபொன்னா லும் வெள்ளியாலுஞ் சிற்றுருவங்களாச் செய்யப் பட்ட விக்கிரங்களைப் பந்திபந்தியாக வைத்திருக்கும். அதைப் பார்க்கும் போது தேவர் பெருங்கணங்கள் அடங்கிய கோயிலாகத் தோன்றும்.

இந்தக் கோயிலிலுள்ள திரவியத்தையு மிந்த தெய்வ மிரட்டலையு மகமது கேட்டு தன் சௌரியத்தைச் செலுத்திப் பார்க்கத் துணிந்து அளவற்ற சேனையோடு குசினியை விட்டுப் புறப்பட்டு முல்த்தானென்றும் அசுமீ ரென்றுஞ் சொல்லப்பட்ட நாடுகளின் மேல் வீழ்ந்து தன் பிரயாசையினாலுஞ் சாமர்த்தியத்தினாலுந் தன் சேனை

களுக்கொரு குறைவும் வராமல் உள்ளங் கலங்கும்படியா யிருந்த விரண்டு வனாந்தரங்களைக் கடந்து வந்தவு டனே அந்தக் கோயிலின் மேலிருந்த வுயர்ந்த நிலைகளில் வெகு சனங்கள் கூடியிருக்கக் கட்டியக்காரனொருவன் துடுக்கரையொரு வெட்டாக வெட்டிப் பழிவாங்க அவர் களையெல்லாஞ் சோமனாதரிங்கொன்றாகக் கூட்டினா ரென்று கட்டியங் கூறினான். இந்தச் சாபனைகளை யிவன் சட்டை பண்ணாமல் யுத்தத்தைப் பலமாக வாரம்பிக்கவே, பிராமணர் கோயில் மூலஸ்தானத்துட் போய் விக்கிரகத்துக்கு முன் சாஷ்டங்கமாக வீழ்ந்து தங்கள் சத்துருக்களெல்லா நாசமாகினார்களென்ற அசரீரி வாக்கியத்தைக் கேள்விப்பட, நொடிக்கு நொடி காத்திருந்தநம்பிக்கை வீணானது கண்டு வெளியிற் புறப் பட்டு முத்திக்கைப் போட்டிருப்பவர்கள் மேல் மெய் மறந்து வீழ்ந்து இரண்டு நாள் பரியந்தஞ் சாவுக்கே துணிந்தவர்களாகப் போர்செய்த பின்பு அந்தக்கோயிலி லிருந்து சீமைக் குடைய ராசாவாகிய புயராமதேவ னும் மற்றும் பெரிய ராசாக்களுங் கூடித் தாங்களெடுத்த அளவற்ற சேனைகளோடு இவன் பாளையத்தைக் கிட்டி வந்து இவன் பிரம்மித்துப் போகும் படியாகிய வீரத் தோடு போர் செய்த போதிலும் இவன் புயபராக்கிரா மத்தை வெல்ல மாட்டாமல் தங்கள் சேனையிலாயிரம் பேரைப் படுகளத்தில் மடியக்கொடுத்து விட்டோடிப் போனார்கள்.

அப்போது கோயில் பிராமணர் இனி மல்லாடுவ தெல்லாம் வீணென்று தெரிந்து அந்தத் துறையிலிருந்த தோணிகளிலேறி செலன தீவுக்குப் போகையில், இவன் நின்ற மற்றத் தோணிகளைப் பிடித்துக் கொஞ்சஞ் சேனையையேற்றி ஓடிப்போனவர்களைப் பிடிக்க வனுப்பிய விடத்திலவர்கள் சில தோணிகளை பிடித்துச்

சில தோணிகளை முழுகடித்து; அகப்பட்ட திற்பாக்கிய ரிற் சிலரைத் தப்ப விட்டார்கள்.

● நூல் : இந்துஸ்தானிச் சரித்திரம் (1830), பக்கம்- 19, 20, 21 மொழிபெயர்ப்பாளர் P. ஞானப்பிரகாச முதலியார்.

# சரபோஜி மகாராஜா (1777-1832)

## (முத்தாம்பாள் சத்திரம்—ஓரத்தநாடு)

தஞ்சைச் சரபோஜி மன்னருக்கு முத்தாம்பாள் என்ற ஒரு காமக் கிழத்தி இருந்தாள். அவள் இரண்டு பிள்ளை களை வைத்து விட்டு இறந்தனள். அவள்பால் மிக்க அன்புடைய இம்மன்னர் அவள் பெயரால் சத்திரம் முத லிய தருமங்களைச் செய்தார். அச்சத்திரம் முத்தாம் பாள் சத்திரம் (ஓரத்த நாடு) எனப்படும்.

சரபோஜி மன்னர் மருந்துகளுக்குப் பயன்பட ஒரு கஞ்சாத் தோட்டம் வைத்திருந்தாரென்றும் ஒரு நாள் அத்தோட்டத்தில் இவர் உலாவி வருகையில் ஒரு சிமிழ் அங்கே கிடப்ப அதனை எடுத்துப் பார்த்தனரென்றும், அதனுள் ஒரு வகை மை இருப்பதைக் கண்டு எடுத்துக் கண்ணில் இட்டுக் கொண்ட பொழுது ஓரிடத்திலிருந்த புதையலொன்று இவர் கண்ணுக்குப் புலப்பட்டதென்றும் ஒருநாள் ஓரத்தநாட்டுப் பக்கத்திலிருந்தகாட்டிற்குவேட் டையாடச் சென்றபொழுது அக்காட்டில் அந்த மையைக் கண்ணிலிட்டுப் பார்த்தாரென்றும், அப்பொழுது ஓரிடத் தில் மிக்க புதையல் இருப்பதை அறிந்துகொள்ளுதற்கு முயல அதனைக் காத்திருத்த பூதமொன்று துன்புறுத்திற் றென்றும், பின்பு அப்பூதத்தை வழிபட்டுக் கேட்க அது கர்ப்பமுடைய பெண்ணொருத்தியை அவளுடைய

உடன்பாடு பெற்று பலியிட்டால் புதையலை உமக்கு அளிப்பேனென்று ஆவேசமுகமாக வந்து சொல்லிற் றென்றும், அரசர் அரண்மனை மீண்ட பின்னர் அப் புதையலை எடுத்தலைப்பற்றிய கவலையோடிருப்ப அதனை அறிந்த முத்தாம்பாள் என்னும் தாசி கர்ப்பவதி யாகிய தன்னை அவ்வாறு பலியிடலாமெனவும் அப் புதையலாற் பெற்ற தொகையைக்கொண்டு முப்பத்தி இரண்டு அறங்களையுஞ் செய்விக்க வேண்டுமெனவும் தான் அதுகாறும் அனுபவித்த உலக இன்பங்கள் போது மெனவும் தன் உயிர் போயினும் ஏழைகள் இன்பம் பெறுதல் தன் கருத்தெனவும் கூறினாளென்றும், அரசர் அவ்வாறே அவளைப் பலியிட்டு புதையலைப் பெற்று அவள் பெயரால் அறங்களை நடத்தினாரென்றும் கூறப் படும் வரலாறொன்று கர்ண பரம்பரைச் செய்தியாக வழங்குகிறது.

- *நூல்: சிவக்கொழுந்து தேசிகர் பிரபந் தங்கள் (1939); பக்கம் - 287; குறிப்புரை எழுதியவர்: டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்.*

## குலோத்துங்க சோழ மகன்

கம்பருக்குக் காவிரியெனப் பெயருள்ள ஒரு குமரி யிருந்தனள். அவளைச் சோழன் மகன் விரும்ப அவள் கற்புக் கெடுவதினும் உயிர்நீங்கல் நன்றெனக் கம்புக் குதிரில் மூழ்கித் தற்கொலை புரிந்து கொண்டனள்.

- *நூல்: அபிதான சிந்தாமணி (1910) பக்கம் 218. நூலாசிரியர்: ஆ. சிங்காரவேலு முதலியார்.*

## குழந்தை மணம் ஏற்பட்டது எப்படி?

இந்தியாவில் மகமதிய அரசாங்க காலத்திலிருந்த ஓர் மகமதிய அரசன், ருதுவாகிக் கல்யாணமில்லாதிருக்கும் பால்யப்பெண்களைப் போகத்தின் பொருட்டுப் பலாத்காரமாய்த் தூக்கிக் கொண்டு போகும் பழக்கம் ஏற்பட்டபோது பாதுகாக்கக் கஷ்டமுண்டான நிமித்தம் தனித்தனி ஒவ்வொரு பெண்களையும் ஒவ்வொரு ஆடவரிடமும் சிறுவயதிலேயே ஒப்பிவைக்கப்பட்டது. அக்காலத்திலிருந்தே அவ் வழக்கம் தடித்து நின்று விட்டது. அது விஷயமாய் வரம்பாய் நடந்து வருவதற்காக சாஸ்திரமும் எழுதி வைக்கப்பட்டது.

- *நூல் : ஆராய்ச்சி அணிகலம் (1930) பக்கம்-72. நூலாசிரியர்: தா.க. தாயுமானபிள்ளை.*

## நடிகை ஜி. சுப்புலட்சுமியின் தீண்டாமை

பிராமணல்லாதவர் தன்னைத் தொடலாகாது என்பதற்காகப் படத்தில் நடிப்பதிலிருந்து விலகிக் கொண்டார் பழைய நடிகை ஜி. சுப்புலட்சுமி. ''அருந்ததி'' காலத்தில் நடந்த சம்பவம் இது. பிறகு இவருக்குப் பதிலாக யூ. ஆர். ஜீவரத்தினம் அப்படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

- *1943-ல் அருந்ததி திரைப்படம் வெளி வந்தது.*

## திருக்குறள்

அக்காலத்தில் பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் சிவில் சர்விசில் தேர்ந்து வந்த மிஸ்டர் எலிஸ் துரையவர்

**1825**—ம் வருடத்திற்குப் பின்பு ஓர் தமிழ்ச் சங்கம் சென்னையில் ஏற்படுத்தி அதனை விருத்தி செய்தற்குப் பலரிடமுள்ள ஓலைப் பிரதிகளைக் கொண்டு வரச் செய்து அச்சிட்டுத் தமிழ் நூற்களைப் பரவச் செய்து வந்தார்.

அதையறிந்த ஜார்ஜ் ஆரிங்டன் துரை, பட்லர் கந்தப்பன் என்பவரால் தம்மிடருந்த ஓலைப் பிரதி திருக்குறள் மூலமும் திருவள்ளுவர் மாலையும் நாலடி நானூறும் கொண்டுபோய் மேம்பட்ட துரையிடம் கொடுக்க, அவரும் சந்தோஷித்து அக்கால் தன்னிடமுள்ள தமிழ் வித்வான்களாகும் தாண்டவராய முதலியாராலும், மானேஜர் முத்துசாமிப் பிள்ளை அவர்களாலும் **1831**-ல் அக்குறள் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால் திருவள்ளுவர் மாலையில் மட்டும் நூதனமாக நான்கு பாடல்களைச் சேர்த்திருப்பதாய்க் கந்தப்பன் அவர்கள் மேம்பட்ட துரையிடம் முறையிட்டிருப்பதாய்ச் சூரியோதயப் பத்திரிகையில் வரைந்திருக்கின்றார்கள்.

இவ்வகையில் **1831**-ல் வெளிவந்த குறளில் திருவள்ளுவ நாயனார் பார்ப்பானுக்குப் பிறந்தார் ஏய்ப்பானுக்குப் பிறந்தார் என்னும் கட்டுக் கதைகள் யாதொன்றும் கிடையாது. அக்குறளை வாசிக்கும் பெரியோர்களும் துரை மக்களும் மிக்கானந்தம் கொண்டது மன்றி அதே தமிழ்ச் சங்கத்ததிபராகும் மிஸ்டர் எலீஸ் துரையவர்கள் நாயனார் குறட்பாக்களுக்கும் சில சார்பு நூற்பாக்களுக்கும் சேர்த்துத் தன் பெயரால் இன்னொரு குறள் புத்தகமும் வெளியிட்டிருக்கின்றார். அப்புத்தகத்திலும் நாயனார் பார்ப்பானுக்குப் பிறந்தார் பறைச்சிக்குப் பிறந்தார் என்னும் கட்டுக் கதைகள் யாதொன்றும் கிடையாது.

ஆதியில் அச்சிட்ட இரண்டு புத்தகங்களில் இல்லாத கட்டுக் கதைகள் மூன்றாவது நான்காவது அச்சிட்ட புத்தகங்களில் எவ்வகையில் வெளிவந்த தென்பீர்களேல், இத்திருக்குறளுக்கு நிகரான நீதி நூல் தமிழ் பாஷையில் ஏதொன்று மில்லாததாலும் வேஷப் பிராமணர்களை யறியாமலே தமிழ்ச் சங்கத்தினின்று குறள் வெளிவந்து விட்டதினாலும் உள்ள வேஷப் பிராமணர்கள் நிதானித்து ஆ! ஆ! நாம் வள்ளுவர்களை முதற் பறையர் களாகக் கூறிப் பலவகை இழிவு படுத்தி இராஜாங்கத் தாருக்கும் மற்றவர்களுக்கும் போதித்திருக்கின்றோமே, இந்நூலை அவர்கள் பார்வையிட்டு இத்தகைய விவேக மிகுந்தோர்களைப் பறையர்களென்றும் தாழ்ந்தோர் களென்றும் கூறிகின்றீர்களே அதன் காரணம்யாதென்று கேட்டார்களாயின் வேஷப் பிராமண விபச்சாரன் கதையால் மூடலாமென்றெண்ணி அடியிற் குறித்த கட்டுக் கதையை அடுக்கிவிட்டார்கள்.

அதாவது—நாயனார் புத்தபிரானைச் சிந்தித்துள்ள முதற்பாடலில், ஆதியொன்றும் பகவனென்றும் வந்துள்ள வாக்கியங்களை எடுத்துக்கொண்டு ஆதி யென்னும் பறைச்சியும் பகவனென்னும் பிராமணனும் இருந்ததாகவும், அவ்விருவர் விபசாரத்தால் ஏழு பிள்ளைகள் பிறந்த தென்றும், அவர்களில் நாயனார் மயிலாப்பூரில் தங்கி ஓர் வைசியகுலப் பெண்ணை மணந்து இல்லறம் நடத்துங்கால் இக்குறளைப் பாடினா ரென்றும் ஓர் சிறிய அகவற்பா பாடி, அதைப் பாடினவர் இன்னாரென்றும் குறிக்காமல் விசாகப்பெருமாளையர் 1835 இல் அச்சிட்ட குறள் புத்தகத்தின் கடைசியில் அச்சிட்டு வைத்துவிட்டார்கள்.

இவ்வகையாக நாயனார் சீவிய சரித்திரத்தை, அவர் புத்தகத்தின் முதலில் அச்சிடாமல் கடைசியில் சேர்த்து

அச்சிடக் காரணம் யாதென்பீரேல்—இத்திருக்குறளை மிஸ்டர் எலீஸ் துரையவர்களும், தாண்டவராய முதலியார், முத்துசாமி பிள்ளை இவர்கள் அச்சிட்ட இரண்டு புத்தகங்களிலும் இல்லாத கட்டுக் கதைகள் பார்ப்பனர்கள் அச்சிட்ட புத்தகத்தில் எங்கிருந்து வந்ததென்று யாவரேனும் கேட்பார்களாயின், சரிதை அங்கு கிடைத்தது இங்கு கிடைத்தது என நழுவிவிடலாம், யாவரும் கேட்காதிருந்து விடுவார்களாயின் கதையை விரித்து வலுத்து விடலாம் என்றெண்ணி 1837 இல் விசாகப்பெருமாளையர் இளவல் சரவணப்பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தின் முகப்பில் இப்பொய்ச் சரித்திரத்தை விரித்துப் பொருந்தாப்பொய்களைப் பொருத்தி விட்டார்.

அப்பொருந்தாப் பொய்கள் யாதெனில் விசாகப் பெருமாளையர் செய்து வைத்துள்ள பொய்க்கதா அகவலில் ஏழு பிள்ளைகள் பிறந்ததென்று நிறுத்தி விட்டார்.

சரவணப்பெருமாளையர் நான்காவது அச்சிட்ட புத்தகத்தில் ஏழு பிள்ளைகளில் ஒவ்வோர் வெண்பாக்களைப் பாடி விட்டதென்றும் அப்போது இச்சரவணப் பெருமாளையர் அருகினின்று ஓலைஎழுத்தாணிகொண்டு உடனுக்குடன் எழுதிக் கொண்டது போலும் ஏழுவெண் பாக்களைப் பாடிச் சேர்த்து விட்டார்.

விசாகப்பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் நாயனார் வைசிய குலப்பெண்ணை மணந்தார் என்று வரைந்திருக்கின்றார்.

அதன்பின் சரவணப் பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் நாயனார் வேளாள குலப் பெண்ணை மணந்தாரென்று வரைந்திருக்கின்றார்.

விசாகப்பெருமாளையர் அகவலில் ஆறுபிள்ளைகள் பிறந்த இடங்களையும் தங்கிய இடங்களையும் காண்பிக் காமல் நாயனார் பிறந்த இடம் மட்டும் மயிலையென்று குறித்திருக்கின்றார்.

சரவணப் பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் ஏழு பிள்ளைகளுக்கும் இடங்களைக் குறித்து விட்டது மன்றி ஊரிலில்லா வேதாளக் கதையொன்று விபரீத மாகச் சேர்த்து விட்டார்.

இவ்வகையாய் இருவர் எழுதியுள்ள பொய்க்கதை களுக்கு இன்னும் பெருத்த பொய்யாதரவுகளை 1847—-இல் திண்டுக்கல் முத்துவீரப்பிள்ளை உத்திரவின்படி வேதகிரி முதலியாரவர்கள் விரித்து விட்டார்கள்.

ஒரு பைசாத் தமிழன் (1908), (வார இதழ்)8-7-1908, இதழாசிரியர்: அயோத்தி தாஸ் பண்டிட்.

## தொழுவூர் வேலாயுத முதலியார்

(1832 — 1889)

சென்னையிலிருந்த வித்வான் **தொழுவூர் - வேலாயுத முதலியார்** கடின நடையில் நூறுபாட்டுச் சிலேடையாகப் பாடி, பழைய ஏட்டில் எழுதியிருந்ததாகச் சங்கச் செய்யு ளென்று வள்ளலாரிடம் கூழைக் கும்பிடு போட்டுக் காட் டவே, அதைக்கண்டு பிள்ளைப் பெருமான் "இது பொரு ளிலக்கணந் தேறாக் கற்றுக் குட்டிப் பாட்டு; சங்கப்பாட் டல்ல; சங்கப் பாட்டாயிருந்தால் இவ்வளவு குற்ற மிராது" என்று கருணையினால் தொழுவூர் முதலி

யார்க்குப் பக்குவம் வருவிக்கும் நிமித்தம் கட்டளை யிடவே, இதுவரையும் நேரில் பழகாதிருந்த தொழுவூர்-வேலாயுத முதலியார் அன்று முதல் அடிமை பூண்டு இலக்கண இலக்கிய சித்தாந்த நுண்பொருளும் வட மொழி நூல்களும் ஓதி உணர்ந்து கற்றுத்துறை போய நாவலரேறாக விளங்கினர்.

- *நூல் : திருவருட்பா (1924), இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள், பக்கம் - 8 குறிப்புரைகள் எழுதியவர்: காரணப்பட்டு ச. மு. கந்தசாமி பிள்ளை.*

## பாரதியார் (1882 - 1921)

எட்டயபுரம் சமஸ்தானாதிபதியுடன் மனஸ்தாபம் ஏற்பட்டதனால் பாரதியார் அவ்வூரை விட்டுக் கிளம்பினார். கிளம்பி மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டித ஊழியம் புரிந்தார். அது 1904-ம் வருஷத்திய நிகழ்ச்சி.

அப்பொழுது பாரதியார் ஒரு நூல் இயற்றினார். அதற்கு ''மூடசிகாமணிகள் நக்ஷத்திர மாலை'' என்று பெயர். நக்ஷத்திரங்கள் மொத்தம் இருபத்தேழு அல்லவா? அதே மாதிரி இருபத்தேழு விருத்தப்பாக்களாக அந்நூலை எழுதினார்; அதிலே சிலரது பெயரைக் குறிப்பிட்டே திட்டிப் பாடியிருந்தார்.

மதுரை கந்தசாமிக் கவிராயர் முதலிய பல புலவர்களிடம் அவர் அந்த நக்ஷத்திர மாலையை வாசித்துக் காண்பித்தார். மதுரை சங்கப்பா என்பவர் ஒரு கிழப்

பிராமணர்; வேதாந்தி. அந்த நக்ஷத்திர மாலையை வாசித்துக் காண்பிக்க வேண்டுமென்று அவர் பாரதியாரைக் கேட்டுக் கொண்டார். பாரதியாரும் அதற்கு இணங்கினார். மதுரை 'பேரையூர் பங்களா' வில் அது படிக்கப்பட்டது. பெரியவர் அதை நன்றாகக் கேட்டார். ''நூலிலே கூறப்பட்டிருந்த விஷயங்கள் யாவும் உண்மையே. ஆனாலும் உன்னைப் போன்றவருடைய வாழ்வுக்குஇதனாலே இடையூறுண்டாகும்.ஆனதினாலே இதைக் கிழித்தெறி'' என்று பாரதியாரிடங் கூறினார் அப்பெரியார். பெரியவரது சொல்லை மதித்துப் பாரதியாரும் அந்த நூலைக் கிழித்துப் போட்டார்.

● நூல்: பாரதியார் (1950) பக்கம் - 31, 32. நூலாசிரியர்: சக்திதாஸன் சுப்பிரமணியன்.

## மணிமேகலையை முதலில் வெளியிட்டவர்

மகாவித்துவான் திருமயிலை சண்முகம் பிள்ளை (1858-1905) சென்னையில் வாழ்ந்தவர். புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார், கோமளபுரம் உரையாசிரியர் இராசகோபால பிள்ளை இவர்களிடம் கல்வி பயின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் ''மகா ,வித்துவான்'' என்னும் பட்டம் பெற்றவர்.

தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பாடசாலையிலும், மயிலை சென்தோம் கல்லூரியிலும் தமிழாசிரியராக இருந்தார். ''மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை முதலிய அக்காலத்துப் புலவர்களால் நன்கு மதிக்கப்பட்டவர்.

''மணிமேகலை'' என்னும் காவியத்தை முதன் முதல் அச்சிட்டவர் இவரே. 1894-ஆம் ஆண்டில், சென்னை

ரிப்பன் அச்சியந்திர சாலையில் இந்நூலைப் பதிப்பித்தார். இவர் பதிப்பித்த நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மணிமேகலையைப் பதிப்பித்தார்கள். ஆனால் எக்காரணத்தாலோ ஐயரவர்கள், பிள்ளையவர்கள் மணிமேகலை பதிப்பித்ததைப் பற்றிக் கூறவேயில்லை.

- நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்(1962)பக்கம்-248. நூலாசிரியர்: மயிலை சீனி. வேங்கடசாமி.

## மகளை மணந்து கொண்ட தந்தையும் தங்கையை மணந்துகொண்ட அண்ணனும்

சித்தூர் ஜில்லா வந்தவாசி தாலுக்காவைச் சேர்ந்த மறுதாடு கிராமத்தில் சென்ற மாதத்தில் பிராமண ஜாதியில் ஒரு விவாகம் நடந்தது. அதில் தங்கையைப் புத்திரனும், அவள் தமக்கையைத் தகப்பனும் விவாகம் செய்து கொண்டார்களாம். இதனால் தகப்பனும். பிள்ளையும் ஷட்டகர்களாய்விட்டார்கள். இவ்விவாகத்திற்குப்பந்துக்கள் எவரும் போகவில்லையாம். பிராமணர்கள் என்னென்ன வேலைக்குத்தான் துணியார்கள்.

- ஸ்ரீலோக ரஞ்சனி(1-9-1890)இதழாசிரியர்: C. G. அப்பு முதலியார், சென்னை.

## பௌத்தர்களிடமிருந்து இந்துக்கள் கற்றுக் கொண்ட வித்தை.

ரிக்வேத சம்ஹிதை சொல்லப்பட்ட வேதகாலத்தில் (வைதிக மார்க்கம் தழைத்தோங்கிய காலத்தில்) ஆலய

பூசை கிடையாது. விக்கிரகங்கள் பொம்மை கிடையா; உபநிஷத் காலத்திலும் தர்சனா காலத்திலும் கூட **அர்ச்சா மார்க்கம்** இருந்ததில்லை. பௌத்த ஜனங்களிட மிருந்து ஹிந்துக்கள் கற்றுக் கொண்ட வித்தையிது.

புத்தருடைய காலத்துக்குப் பிற்பட்ட காலங்களில் பௌத்த ஜனங்கள் பகவான் **புத்தர்** கூறிய உபதேசத்தை மனத்தால் எட்டியறிய முடியாமல், அவரையே தெய்வ மாக எண்ணி, அவரைப் போன்ற பொம்மைகளைச் செய்து அந்தப் புத்த பொம்மைகட்கு இந்திரன், சந்திரன் முதலிய தேவர்கள் குடை பிடித்தல், சாமரை வீசுதல் முதலிய உபசாரங்கள் செய்வதாகப் பொம்மைகள் செய்து அமைத்து கோயில் கட்டி உற்சவாதிகள் செய்ய ஆரம்பித்தார்கள்.

பாமர சனங்கட்கு வேடிக்கையும், பாணமும் மத்தாப் பும் மேள தாள காபுறாவும் மெய்ம்மத மாதலான், கணக்கிறந்த சனங்கள் பௌத்த மதத்தில் சேர்ந்துவிட ஆராம்பித்தார்கள். இதைப் பார்த்தார்கள் அக்காலத் துப் பிராமணர்கள்; இதேதடா வம்பாயிருக்கிறது, இந்து மதம் அழிந்து போம் போல் இருக்கிறதே என்ன செய்ய லாம் என்று யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வந்தார் கள்.

பிற்பட்டு ஆலயங்கள் கட்டப்பட்டன. பொம்மைகள் வைக்கப்பட்டன. விக்ரஹ பூசை செய்தார்கள். வாண வேடிக்கையும் மேளதாளமும் கூப்பாடும், காபுறாவும் உற்சவமும், நடன கேளிக்கை சங்கீதமும் இவை போன்ற பல விஷயங்களும் இந்துக்களால் தழுவப்பட்டன. சனங் கள் உற்சாகமடைந்தார்கள். ஹிந்து மதத்துக்குப் புதிய வலிவும் வந்துவிட்டது.

ஆனால் வைதிக பிராமணர் அதைக் கண்டித்தனர். வேத சம்பந்திகள் இம்மாதிரியான ஆலய விக்ரஹ பூசை ஆபாசம், அவைதிகம், அநாகரிகம் என்று கண்டித்தனர். **மனு** கண்டித்தார். ஆலயங்களில் பூசை செய்யும் பிராமணர்கள் மிலேச்சர், அநாரியர், அஞ்ஞானிகள், அற்பர் என்று பலவாறாகப் பேசினார்.

- *நூல்: கண்ணிருந்தும் மக்கள் பலர் குருடராவதேன்? 1906 நூலாசிரியர்:* **விச்சூர் முத்துக் குமாரசுவாமி முதலியார், பி. ஏ.,** *(மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்)*

## வள்ளல் பச்சையப்ப முதலியார்

பச்சையப்ப முதலியார் உயிரோடிருந்த காலத்திலேயே அவர் முதல் மனைவியை விரும்பினதாய்த் தெரிகிறதே யன்றி, இரண்டாவது மனைவியை விரும்பினதாய்த் தெரிய வில்லை. முதலியார் தமது இரண்டாவது விவாக காலத்திலே தம் இரண்டாம் மனைவிக்குச் சில நகைகள் போட்டுப் பதினாயிரம் வராகன் பின்னர் கொடுப்பதாய் ஓலைச் சீட்டொன்றெழுதிக் கொடுத்திருந்தனர். ஆனால் அவர் நகைகள் போட்டனரே யன்றி தாம் ஓலைச் சீட்டுக் கொடுத்திருந்தபடி பதினாயிரம் வராகன் கொடுக்கவில்லை.

- *நூல்: பச்சையப்பன் (1937) பக்கம்-85 நூலாசிரியர்: T. பக்தவத்ஸலம், பி. ஏ; (சென்னை லயோலா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்.)*

## வேதங்கள்

வேதங்கள் உண்டானதைப் பற்றி நோக்கும்போது அவைகளுக்கு ஆசிரியர்கள் ஆரியர்களல்ல. ஆகவேதான்

அவர்களுக்கு அவைகளின் பொருள் தெரியாது. அவைகளை எழுதினவர்கள் நம் தமிழர்களாகிய திராவிடர்களே. இவர்கள்தான் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தே, நாகரீகம், மதம், முதலியவற்றில் மிகவும் சிறந்து விளங்கினார்கள். தென்குமரி கடல் கொண்டு போனபோது, வடஇந்தியா என்னும் பாகம் சமுத்திரத்திலிருந்து வெளித்தோன்றி நாடாயின போது, சுற்றுப் பக்கங்களிலிருந்த மனிதர்கள் அந்த நாட்டில் குடியேறினார்கள். மேற்கிலிருந்து பாரசீகரும், வடமேற்கிலிருந்து ஆரியர்களும், தெற்கிலிருந்து திராவிடர்களும் அங்கு போய்க் குடியேறினார்கள். ஆரியர்களப்போது நாகரீகமில்லாதவர்களாய், காட்டுமிராண்டிகளாய் ஆடுமாடு மேய்த்துப் பிழைப்பவர்களாய் வந்தார்களென்று தெரிந்த விஷயமே. எல்லாவற்றிலுமுன்னணியிலிருந்த நம் திராவிடர்களாகிய' தமிழர்கள் முதலில் அவர்கள் வடமொழியைச் சுலபத்தில் கற்றுக் கொண்டு நம் மதத்திலுள்ள சில உண்மைகளை அவர்கள் மொழியில், அவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு வடமொழியில் வேதமொன்று முதலில் எழுதினார்கள். பிறகு அதை அவர்கள் கைப்பற்றிக் கொண்டு தங்களுடையதென்று உரிமை கொண்டாட வந்தார்கள். அவர்களுக்காக அந் நூல்கள் எழுதப்பட்டவையே யாகையால், அதிலும் மேலான கொள்கையுடையது நம் தமிழ் நூல்களிலிருப்பதால், நம் தமிழர் அதைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை.

- நூல்: தமிழர் (திராவிடர்) மதச் சுருக்கம் (1943) நூலாசிரியர்: திருச்சி-தென்னூர் தி. அர. நடேசன் பிள்ளை.

## தேவதாசிகள்

ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய 'தேவதாசி' முறையானது முதலாம் இராசராசரால் நிலைநாட்டப் பெற்றது. அக்காலத்தில் தக்காணத்திலுள்ள கோவில்களிலும் அம்முறையைக் கையாண்டனர். அப்பொழுதிருந்த வேதாசிகள் நாட்டிய இசைக் கலைகளில் தேர்ச்சியுற்றவர்களாகவும், பக்தியில் முதிர்ந்தவர்களாகவும் திகழ்ந்தனர். சிலர் மன்னர்களோடும் நெருங்கிப் பழகினர். ஆயினும் அவர்கள் கூட்டம் முழுவதையும் தாக்கியதாழ்வு நிலை **பிற்காலத்தே** ஏற்பட்டது.

பல்லவர் காலத்திலே தேவதாசிகள் சில கோவில்களில் அமைக்கப்பட்டனர். ஆனால் இராசராசர்தான் அந்த வழக்கத்திற்குப் பெரும் ஊக்கமளித்தவர்.

● நூல்: தென் இந்திய வரலாறு(?) பக்கம்-198

## சன்மார்க்க பாடசாலை

வள்ளலார் வடலூரில் சன்மார்க்கபாடசாலை ஒன்று நிறுவி, அப்பாட சாலைக்குத் தொழுவூர்—வேலாயுத முதலியாரை உபாத்தியாயராக அமைத்துத் திருக்குறள் பாடம் நடத்துவிக்கக் கட்டளையிட்டனர். மூன்று மாதமாகியும் மூன்று அதிகாரமும் நடவாமையால் வாசிப்போர்கள் வள்ளலாரிடம் குறைகூற, "மூட முண்ட வித்வானைக் கூப்பிடும்" என்று கூற, முதலியார் வந்து வாய்புதைத்துப் பின்புறத்தே கைகட்டித் தூசு ஒதுக்கிநிற்க' வள்ளார் "பிச்சு" மூன்று மாதமாகியும் மூன்று அதிகாரந்தானும் நடக்கவில்லையாம்; பாடசாலை வேண்டாம். வித்துவான்களே! உங்களுக்குத் தானாகவே கல்விவரும்;' என்று கூறிப் பாடசாலையை நிறுத்திவிட்டனர்.

● சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரிதம் (1956) பக்கம்—58 நூலாசிரியர்: காஞ்சிபுரம் த. வடிவேல்.

சாரதா
பதிப்பகம்